# திருக்கோயில்

"என் கடன் பணி செய்து கிடப்பதே"



தமிழ் நாடு அரசின் அறநிலைய
ஆட்சித்துறை வெளியீடு



திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை அருள்திரு தாயுமானவர் திருக்கோயிலில் நிகழ்ந்த திருமண மண்டபக் கால்கோள் விழாவில், உள்ளாட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு அன்பில் பெ. தர்மலிங்கம் அவர்களும், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு மு. கண்ணப்பர் அவர்களும், பிற பெருமக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தல் (12—8—73)

## பொருளடக்கம்


1. இராமலிங்க வள்ளலாரும் நால்வர் பெருமக்களும்
2. தாயுமானவர்
3. சிந்தைக் கலசம்
4. மெய்கண்ட நூல்களின் வாழ்வியல் உண்மைகள்
5. திருப்பல்லாண்டு
6. திருமந்திரம் விளக்கும் சிவநல இயல்
7. திருவாசகத்தேன்
8. அம்பிகையின் அழகு வெள்ளம்
9. தஞ்சை மாவட்டக் கோயில்களின் வரலாறு
10. அற்புதப் பழ ஆவணம்


## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

ஆண்டுச் சந்தா ரூபா பத்து மட்டும் — தனிப்பிரதி விலை ரூபா ஒன்று மட்டும்.

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34" என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்களாகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது அவ்வவ்வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும் மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல் இதழ்கள் தவறாமற் சேர்வதற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்.

OFFICE OF THE STATE EDITOR
6-NOV 1973
GAZETTEER MADRAS




மாலை 16 | பிரமாதீச — ஐப்பசி — அக்டோபர், 1973 | மணி 1

# இராமலிங்க வள்ளலாரும், நால்வர் பெருமக்களும்

ந.ரா. முருகவேள், M.A., M.O.L.

முன்னுரை:

தமிழ் நாட்டில் தோன்றியருளிய அருட் பெருஞ் சான்றோர்கள் அளவிலராவர். அவர்களுள் அண்மைக்காலத்தில் தோன்றியருளிச் சமரச சன்மார்க்க நெறியினையும், ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமை உணர்வினையும், உயிரிரக்கத் தொண்டினையும், பெரிதும் பரப்பிப் போற்றிய பெருமைக்குரியவர் இராமலிங்க வள்ளலார் ஆவர். வள்ளற் பெருமானுக்கே உரிய தனிப்பெருஞ் சிறப்புகள் பற்பல. அவற்றுள், அவர் 'வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபினில் ஒருவர்' என்பதும், சைவ சமய ஆசிரியர்களாகிய நால்வர் பெருமக்களிடத்திலும், அவர்கள் அருளிச் செய்த தமிழ்வேதம் என்னும் தேவார திருவாசகத் திருமுறைகளிலும், அளப்பரிய ஆர்வம் பெரிதும் கொண்டிருந்தார் என்பதும், ஒன்றாகும்,

இராமலிங்க வள்ளலார், அப்பர், சம்பந்தர், சுந்தரர், மணிவாசகர் என்னும் நால்வர் பெருமக்களிடத்தில் எல்லையற்ற அன்பும் மதிப்பும் ஈடுபாடும் கொண்டிருந்தார். இவ்வியல்பு இராமலிங்க வள்ளலார்க்கு மட்டுமேயன்றி, அவருக்கு முன்னே வாழ்ந்திருந்த அருட்பெருஞ் சான்றோராகிய தாயுமானவர், அவருக்கும் முன்னர் விளங்கிய அருணகிரிநாதர், அவருக்கும் மிக முற்பட்ட பட்டினத்தடிகள், முதலிய எத்தனையோ பற்பல சான்றோர்கள் பலருக்கும் உரிய சிறப்பியல்பாக அமைந்திருந்தது.

நால்வர் பெருமக்கள் :

நால்வர் பெருமக்கள், இவ்வருட் பெருஞ் சான்றோர்கள் அனைவருக்குமே தலைசிறந்த வழிகாட்டிகளாகவும், அருளாசிரியன்மார்களாகவும் விளங்கியிருந்தனர். அமிழ்தினும் இனிய

---

சென்னை மயிலை இராசேசுவரி கலியாண மண்டபத்தில் நடைபெற்ற இராமலிங்க வள்ளலார் வெள்ளணி விழாவில், சன்மார்க்க நெறிச் செல்வர் திரு. ந. மகாலிங்கம், B.Sc., A.M.I.E. அவர்களின் தலைமையில் நிகழ்ந்த திருவருட்பாத் திருமுறைக் கருத்தரங்கத்தில் நிகழ்த்திய சொற்பொழிவைத் தழுவியது.(5-10-73).

—ஆசிரியர்

நமது தமிழ்மொழியையும், அதனோடு தொடர்புடைய கலை நாகரிகம் பண்பாடு வாழ்க்கை நலங்கள் ஆகியவற்றையும் பாதுகாத்து வளர்த்தருளினர். வெறும் சமயத்துறையில் மட்டுமேயன்றி, மக்கட் சமுதாயத்தின் நல்வாழ்வுக்குரிய துறைகள் அனைத்திலுமே, அவர்கள் அரும் பெரும் தொண்டாற்றியுள்ளனர். அவர்களால் நம் தமிழகத்துக்கு விளைந்துள்ள நலங்களுக்கு அளவேயில்லை. நால்வர் பெருமக்கள் அருளிச் செய்த, தேவார திருவாசகத் திருமுறைகள், உலகிலேயே ஒப்புயர்வற்ற இறையருட் பேரின்ப அநுபவ எழில் இலக்கியங்களாய் மிளிர்ந்து, நம் தமிழ்மொழிக்குப் பெருஞ் சிறப்பை விளைவித்துள்ளன. எவருள்ளத்தையும் கவர்ந்து கொள்ளை கொண்டு, இன்ப அன்புறுத்தி, இறையருளில் திளைப்பிக்கும் நிறை பெரும் தெய்விக இலக்கியங்களாக, நால்வர் பெருமக்களின் நற்றமிழ்ப் பாடல்கள் நலஞ் சிறந்து விளங்குகின்றன.

148714.

## நால்வர்களும் தமிழகமும்:

தமிழக வரலாற்றிலும், தமிழ் இலக்கியங்களின் வரலாற்றிலும், தமிழ்ச் சமுதாய வரலாற்றிலும், நால்வர் பெருமக்கள் தலையாய சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றனர். ஷேக்ஸ்பியரும் மில்ட்டனும் ஷெல்லியும் கீட்சும் இல்லாமல், ஆங்கிலமொழியோ இலக்கியமோ நாடோ இருத்தல் இயலாது. அதுபோலவே நம்முடைய நால்வர் பெருமக்கள் இன்றி, நம் தமிழ் மொழியும் இலக்கியமும் நாடும் பிறவும் எதுவும் இருத்தல் இயலாது. இன்று நம் தமிழகத்திற் காணப்படும் பல்லாயிரக் கணக்கான கோயில்களும், அவற்றைச் சார்ந்து நிலவி வரும் பலவகை அழகியல் அருங்கலைகளும், பல்வேறு தமிழிலக்கியங்களும், தமிழ்ச் சமுதாய வாழ்க்கை நெறிமுறைகளும், பிறவுமெல்லாம் தோன்றி வளர்வதற்குத் துணைபுரிந்தவர்கள், நால்வர் பெருமக்களேயாவர். எனவே தான், தொன்று தொட்டு வழி வழியாக, வாழையடி வாழையாக வந்த அருளாளர்கள் அனைவருமே, நால்வர் பெருமக்களைப் போற்றி வழிபட்டு மகிழ்ந்து வந்துள்ளனர். இற்றைக்குச் சிறிது ஏறத்தாழ 1300 ஆண்டுகளாக, நால்வர் பெருமக்களின் சிறப்பையுணர்ந்து வியந்து, நமது தமிழகம் நயந்தினிது போற்றி மகிழ்ந்து வருகின்றது.

## (1) சம்பந்தர்:

அங்ஙனம், பண்டைச் சான்றோர்கள் கடைப்பிடித்தொழுகிய சீரிய செந்நெறியினையே, திருவருட்பிரகாச வள்ளலார் என்னும் இராமலிங்க அடிகளாரும், பெரிதும் தழுவிக் கடைப்பிடித்து ஒழுகியுள்ளனர். இராமலிங்க வள்ளலார் நமக்கெல்லாம் ஞானாசிரியராகவும், அருட்பெருங் குரவராகவும் திகழ்கின்றார். ஆனால் அவருக்கு ஞானாசிரியராகவும், அருட்பெருந் தலைவராகவும், திருஞான சம்பந்தப் பெருமான் திகழ்கின்றார். திருஞான சம்பந்தப் பெருமானை, இராமலிங்க வள்ளலார் "உயிர்க்கு உயிரெனும் குருவாக" மதித்துப் போற்றி வழிபட்டார். அவரால் தமக்கிருந்த ஐயங்களும் அறியாமைகளும் தீரப்பெற்றார்.

"ஒரு நெறிய மனம் வைத்துணர்
ஞானசம்பந்தன் உரைசெய்த
திருநெறிய தமிழ்வல்லவர்
தொல்வினை தீர்தல் எளிதாமே"

என்றபடி, நற்றமிழ்வல்ல ஞானசம்பந்தரின் திருநெறிய தமிழை ஓதி ஓதி, இன்புற்று ஞானத் தெளிவு பெற்றார். இதனை இராமலிங்க வள்ளற் பெருமானே,

"முன்புறு நிலையும் பின்புறு நிலையும்
முன்னிநின் றுளம்மயக் குறுங்கால்,
அன்புறு நெறியால் திருநெறித் தமிழ்
கொண்டு ஐயம்நீத் தருளியே அரசே!
என்புபெண் ணுருவோ டின்னுயிர் அது
கொண் டெழுந்திடப் புரிந்துல கெல்லாம்
இன்புறப் புரிந்த மறைத்தனிக் கொழுந்தே
என்உயிர்க் குயிர் எனும் குருவே"

என அருளிச் செய்திருத்தல் காணலாம். வள்ளலார், சம்பந்தர்பால் கொண்டிருந்த எல்லையற்ற பக்தித் திறனை, அவர் 'ஒழிவிலொடுக்கம்' என்னும் நூலின் சிறப்புப் பாயிரச் செய்யுளில் "வள்ளல் குருராயன் வாதுவென்ற சம்பந்தன்" எனவரும் வரிக்கு எழுதியுள்ள நுண்பொருள் விரிவுரையால் தெளியலாம்.

"திருஞானசம்பந்தர், தலைமையில் தலைமையாய உத்தம சன்மார்க்க நெறிச் சான்றோர். ஓதியுணர்ந்து பலநாள் பல சாதனங்களில் முயன்று முயன்று ஆசிரியத் தன்மை ஒருவாறு அரிதில் கிடைக்கப்பெற்றும், ஓர்ஒரு காலங்

N7 3.16.1



களில் மலப்பிணிப்பின் வயப்பட்டு மயங்கிக் கலங்கும் மற்றைய ஆசிரியர்கள் போலாமல், ஓதாமலே வேதாகமம் முதலிய நூல்களை யெல்லாம் முற்றும் தெற்றென உணர்ந்து, இறைப்பொழுதும் ஒரு சாதனத்தில் முயன்ற தின்றி, ஞானுசிரிய இலக்கணங்கள் அனைத்தும் தாமே தம்பால் நிரம்பி நிற்ப அமைந்தவர் சம்பந்தர்; அன்றியும் ஓதியுணர்ந்த ஏனைய பிற ஆசிரியர்களுக்கெல்லாம் அவரவர் அறிவின் கண் அருளுருவாய் நின்று அறிவிக்கும் ஆசிரிய உருவாய் வெளிநின்று அருள்புரிந்து நிற்பவர்; திருநோக்கம் செய்தல் முதலிய அறுவகைத் தீக்கைகளாலும் அன்றித், தமது திருவுருவைக் காண்டல் நினைத்தல் மாத்திரத்தில், பக்குவர் அல்லாதாரும் பரிபக்குவராய்ப் பயன்பெறச் செய்பவர்'' என்றெல்லாம் சம்பந்தரின் அருமை பெருமைகளை இராமலிங்கர் விரிவாக விளக்கி யிருக்கக் காண்கின்ருேம். இம்மட்டோ?

எத்தனையோ பல ஊழிகள் கடும் தவம் புரிந்து முயன்ருலும், எவராலும் பெறுதற்கரிய அருட் பெருந் திறல்களையெல்லாம், ஒரு நாளில் ஒரு சிறு நேரத்தில் பெற்று உய்யுமாறு தமக்குப் பெருங் கருணை புரிந்தருளியவர் ஞானசம்பந்தப் பெருமானே என்றும்; அவருக்கு இத்தகைய இணையற்ற பேரருளாற்றல் இயல்பாகவே உண்டு என்றும்; இஃது அவர் தமது திருமணம் காணுதற்குப் போந்த பல்லாயிரக்கணக்கான பக்குவமற்ற மக்கள் பலரையும் கூடப் பக்குவ முறச் செய்து, இறையருள் ஒளியில் கலந்தருளச் செய்த கருணைப் பெருந்திறனுல் விளங்கும் என்றும், இராமலிங்க வள்ளலார் இயம்புகின்ருர்.

வருபகற் கற்பம் பலமுயன் ருலும்
  வரலருந் திறன்எலாம் எனக்கே
ஒரு பகற் பொழுதில் உறஅளித் தனை; நின்
  உறுபெருங் கருணைஎன் உரைப்பேன்?
பெருமண நல்லூர்த் திருமணம் காணப்
  பெற்றவர் தமை எலாம் ஞான
உருவடைந் தோங்கக் கருணைசெய் தளித்த
  உயர்தனிக் கவுணிய மணியே! (1)

பொத்திய மூல மலப்பிணி தவிர்க்கும்
  பொருள் அரு ளனுபவம்; அதற்குப்
பத்தியம் உயிரின் அனுபவம்; இதனைப்
  பற்றறப் பற்றுதி; இதுவே
சத்தியம் எனஎன் றனக்கருள் புரிந்த
  தனிப்பெருங் கருணைஎன் புகல்வேன்?
முத்தியற் சிவிகை இவர்ந்தருள் நெறியின்
  முதல் அரசு இயற்றிய துரையே! (2)

என ஆளுடைய பிள்ளையார் அருண்மாலையில், இராமலிங்க வள்ளலார் இனிதருளிச் செய் துள்ள இரு பாடல்களே, இவ்வுண்மையினைச் செவ்விதின் விளக்கப் போதியனவாகும்.

''ஏரார் பருவ மூன்றில் உமை
  இனிய முலைப்பால் எடுத்தூட்டும்
இன்பக் குதலை மொழிக்குருந்தே!
  என் ஆருயிருக் கொருதுணையே!
பேரார் ஞான சம்பந்தப்
  பெருமானே! நின் திருப்புகழைப்
பேசு கின்ருேர் மேன்மேலும்
  பெருஞ்செல் வத்திற் பிறங்குவரே''

## (2) அப்பர்:

நால்வர் பெருமக்களில், அப்பர் எனப் போற்றப்படும் சிறப்பினைப் பெற்றவர் திருநாவுக் கரசர். 'அப்பர்' என்னும் சொல்லுக்குப் பற்பல நுண்பொருள்கள் உண்டு. யாவரும் எக்காலத் தும் செய்தற்கரிய பேருதவியினைச் செய்பவர்; அறிவாலும் அநுபவத்தாலும் வயதாலும் குண நலத்தாலும் மூத்தவர்; எவரும் மதித்து வழி படத்தக்கவர்; ஞானமே வடிவமாகப் பழுத்துக் கனிந்து திகழ்பவர்; அரசர்களையும் திருத்தி ஆட்கொண்டு நாட்டிற்கு நலம்பல புரிபவர். இத்தகைய பற்பல பொருள்கள், அப்பர் என்னும் சொல்லுக்கு உண்டு. அச்சிறப்புக்களை யெல்லாம் நினைந்து நினைந்து உணர்ந்துணர்ந்து நெஞ்சம் நெகிழ்ந்து,

''கூர்ந்த மதிநிறைவே!
  என்குருவே! எங்கள்
குலதெய்வமே! சைவக்
  கொழுந்தே! துன்பம்
தீர்ந்த பெருநெறித் துணையே!
  ஒப்பி லாத
செல்வமே! அப்பன் எனத்
  திகழ்கின் ருேனே!''

என்று இராமலிங்க வள்ளலார், நாவுக்கரசரை நயந்து, புகழ்ந்து போற்றித் துதிக்கின்ருர்.

திருநாவுக்கரசர், திலகவதியம்மையாரின் இளவலாகத் தோன்றியவர். அவரால் திரு வதிகை வீரட்டானப் பெருமான்பால் ஆற்றுப் படுத்தப்பட்டு அருள் பெற்றவர். தம் வடிவ மெலாம் மெய்யுணர்வு என்னும் ஞானமயமான அருள்வடிவாகும் பேறு எய்தியவர்; இறைவனுல்

'நாவுக்கரசன்' என்னும் நல்ல சிறப்புப்பெயர் வழங்கப்பெற்றவர். தம் தொண்டு நெறிக்கு அறிகுறியாக உழவாரம் என்னும் உயர் கருவியைத் தம் திருக்கையில் ஏந்தி நிற்பவர்: "நனைந்தனைய திருவடியின் தலைமேல் வைத்தார் நல்லூர் எம்பெருமானார் நல்லவாறே" என்றபடி, சிவபிரானால் திருநல்லூரில் திருவடித் தீக்கை வழங்கப்பெற்ற மாட்சிமை மிக்கவர். இறைவழிபாட்டுக்குரிய சிவாகம நெறியைச் செழிப்பித்து வளர்க்க வந்தவர். அப்பூதியடிகளையும் அவர்தம் குடும்பத்தினரையும் ஆட்கொண்டருளியவர். திருப்புகலூர் என்னும் சிவத்தலத்தில் நெடுங்காலம் தங்கி வாழ்ந்திருந்து இறையருட்பேறு தலைக்கூடும் இறுதி நிலையில், "எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனோ?... ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்; ஒக்க அடைக்கும் போது உணர மாட்டேன்; புண்ணியா, உன்னடிக்கே போதுகின்றேன், பூம்புகலூர் மேவிய புண்ணியனே" என்னும் திருத்தாண்டகம் பாடி, இறையருளில் இயைந்து ஒன்றி நின்றவர் திருநாவுக்கரசர். இவைகளையெல்லாம் கல் மனமும் கரைந்து உருகும்படி இராமலிங்க வள்ளலார் இனிதெடுத்துக் குறிப்பிட்டு, அப்பர் அடிகளைப் புகழ்ந்து போற்றி அகமகிழ்கின்றார்.

"அருள்வழங்கும் திலகவதி
அம்மையார் பின்
அவதரித்த மணியே! சொல்
அரசே! ஞானத்
தெருள்வழங்கும் சிவநெறியை
விளக்க வந்த
செழுஞ்சுடர் மா மணிவிளக்கே ! (1)

"உருத்தகுமெய் யுணர்ச்சிவடிவு
உற்றுச் சைவ
ஒளிவிளங்க நாவரசு என்று
ஒருபேர் பெற்றாய் !
பொருத்தமுற உழவாரப்படை
கைக் கொண்ட புண்ணியனே" (2)

"ஒண்ணுளே ஒன்பதுவாய்
வைத்தாய் என்ற
உத்தமனே ! சித்தம்
மகிழ்ந்துதவு வோனே". (3)

## (3) சுந்தரர் :

இராமலிங்க வள்ளலார், சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தேவாரத் திருப்பாடல்களைத் தினந்தோறும் தவறாமல் படித்து வந்தார். அப்போது அவர் தம்மையும் தாம் மறந்து, அதன் சொற்பொருள் நல அநுபவங்களில் ஈடுபட்டுத் திளைத்து இன்புற்று நின்றார். அங்ஙனம் இராமலிங்கர் சுந்தரரின் பாடல்களைப் படிக்குங்கால், அவருடைய நாக்குமட்டுமேயன்றி, ஊன் படித்தது; உளம் படித்தது; உயிர் படித்தது: உயிர்க்கு உயிராகிய சிவபெருமானும் அவரோடு கலந்து ஒன்றி நின்று படித்து இன்புற்றான்.

இங்ஙனம் சுந்தரரின் திருப்பாடல்களைப் படித்து இன்புற்று வந்த இராமலிங்க வள்ளலார், எல்லாப் பாடல்களிலுமே ஈடுபட்டு இன்புற்றனராயினும், திருவொற்றியூரிலிருந்த சுந்தரர்பெருமான் திருவாரூரில் நிகழவிருக்கும் பங்குனி உத்திரத் திருநாட் சிறப்பை நினைவு கூர்ந்து, அங்குச் செல்ல விரும்பி, "ஏழிசையாய் இசைப்பயனாய், இன்னமுதாய், என்னுடைய தோழனுமாய், யான் செய்யும் துரிசுகளுக்கு உடனாகி மாழை ஒண்கண் பரவையைத் தந்து ஆண்டானை, மதியில்லா ஏழையேன் பிரிந்திருக்கேன் என் ஆரூர் இறைவனையே" என்று அருளிச் செய்த பாடலின்கண், மிகப் பெரிதும் ஈடுபட்டு வியந்து வியந்து விம்மிதம் எய்தினார். இவ்வனுபவங்களை,

"தேன்படிக்கும் அமுதாம் உன்
திருப்பாட்டைத் தினந்தோறும்
நான் படிக்கும் போது என்னை
நான் அறியேன்; நா ஒன்றோ,
ஊன்படிக்கும் உளம்படிக்கும்
உயிர்படிக்கும்; உயிர்க்குயிரும்
தான் படிக்கும்; அனுபவம் காண்
தனிக்கருணைப் பெருந்தகையே ! (1)

"ஏழிசையாய் இசைப்பயனாய்
இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் என்று முன்நீ
சொன்னபெருஞ் சொற்பொருளை,
ஆழநினைந் திடில் அடியேன்
அருங்கரணம் கரைந்து கரைந்து
ஊழியில் ஒன்றுவது காண்
உயர்கருணைப் பெருந்தகையே (2)

"பரம்பரமாம் துரியம் எனும்
பதத்திருந்த பரம்பொருளை
உரம்பெறத் தோழமை கொண்ட
உன்பெருமை தனைமதித்து,
வரம்பெற நற்றெய்வம் எலாம்
வந்திக்கும் என்றால், என்
தரம்பெற என் புகல்வேன் நான்?
தனித்தலைமைப் பெருந்தகையே (3)

என்று தமது திருவருட்பாப்பாடல்களில் வள்ளலார் தெளிவுறக் குறித்திருத்தல் காணலாம். சுந்தரரின் தேவாரத் திருப்பதிகங்களின் சிறப்பினை வள்ளலார் மனமாரப் பெரிதும் போற்றினார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்புக்கொளியூர் அவிநாசி என்னும் தலத்தில் முதலையுண்டு இறந்த மதலையை உயிர்பெற்று மீண்டு வரும்படி நிகழ்த்திய அற்புதச் செயலை, அடிகளார் பெரிதும் புகழ்ந்து துதிக்கின்றார். இத்தகைய அருட்பெரும் அற்புதம் நிகழ்த்திய தமிழ் வேதமாகிய சுந்தரரின் தேவாரப் பாடல்கள், திருக்கயிலாயமாகிய பொன்மலையை நிகர்த்து நிற்க, அதன் முன்னே வடகலையின் முதற்கலையாகிய வேதமானது, ஓர் அணுவினும் விட்டக் கூட மிகச் சிறியதாகி நிற்கும் என்றும், இராமலிங்க வள்ளலார் இயம்புகின்றார்.

"இலைக்குளநீர் அழைத்து, அதனில்
இடங்கர்உற அழைத்து, அதன்வாய்த்
தலைக்குதலை மதலைஉயிர்
தழைப்ப அழைத் தருளிய நின்
கலைக்கும், வட கலையின் முதற்
கலைக்கும் உறு கணக்கு, உயர்பொன்
மலைக்கும், அணு நிலைக்கும் உரு;
வன்தொண்டப் பெருந்தகையே"

மற்றும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவதிகையில் சிவபெருமானால் திருவடித் தீக்கை செய்யப் பெற்றதும்; திருமுதுகுன்றத்தில் மணிமுத்தாற்றில் இட்ட பன்னீராயிரம் பொன்னைத் திருவாரூர்க் கமலாலயக் குளத்தில் எடுத்ததும்; திருமாலும் பிரமனும் தேவரும் முனிவரும் காணற்கரிய திருவாரூர்த் தியாகராசப் பெருமானைப் பரவையார்பால் ஒரு தூதுவனாக ஒருமுறைக்கு இருமுறை எளியவரின் எளியவனாகத் தெருத்தோறும் நடந்து சென்று உழலும்படி ஏவிப் பணித்ததும்; இந்திரன் மால் பிரமன் எழிலார் மிகு தேவரெல்லாம் வந்து எதிர் கொள்ள, வெள்ளையானையின் மீது வீற்றிருந்து சுந்தரர் பெருமான் திருக்கயிலைக்குச் சென்றதும் ஆகிய செயல்களையெல்லாம், இராமலிங்க வள்ளலார் இனிதெடுத்துப் போற்றி மகிழ்ந்து இன்புறுகின்றார்.

"பேருரும் பரவைமனப்
பிணக்கற எம் பெருமானை
ஊரூரும் பலபுகல
ஓர் இரவில் தூதன் எனத்
தேர் ஊரும் திருவாரூர்த்
தெருவுதொறும் நடப்பித்தாய்:
ஆரூர! நின்பெருமை
அயன் மாலும் அளப்பரிதே (1)

"வேதமுதற் கலைகளெலாம்
விரைந்து விரைந்து, அனந்த முறை
ஓத, அவைக்கு அணுத்துணையும்
உணர்வரிதாம் எம்பெருமான்
பாதமலர், நினது திருப்
பணிமுடிமேற் படப்புரிந்த
மாதவம் யாது? உரைத்தருளாய்?
வன்தொண்டப் பெருந்தகையே". (2)

"வான்காண, இந்திரனும்
மாலயனும் மாதவரும்
தான்காண, இறையருளால்
தனித்தவள யானையின் மேல்
கோன்காண எழுந்தருளிக்
குலவிய நின் கோலமதை
நான்காணப் பெற்றிலனே
நாவலூர்ப் பெருந்தகையே" (3)

## (4) மாணிக்கவாசகர்:

இராமலிங்க வள்ளலாரின் திருவுள்ளம் உவந்து ஏற்றுப் போற்றிய நூல்கள் பலவற்றுள், திருக்குறள் திருவாசகம் திருமந்திரம் என்பன சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. இவற்றுள்ளும் திருவாசகம், அவர் தம் திருவுள்ளத்தைப் பெரிதும் கவர்ந்து கொள்ளை கொண்டிருந்தது. திருவாசகத்தினை இடையறாது ஓதி ஓதிச் சிந்தை மகிழ்ந்து திளைத்து நின்றார், இராமலிங்க வள்ளலார். திருவாசகத்தினை எத்தனையோ பல பெருஞ் சான்றோர்கள் போற்றிப் பாராட்டியுள்ளனராயினும், இராமலிங்க வள்ளலார் திருவாசகத்தினைப் போற்றிப் புகழ்ந்து வியந்துள்ள முறை, மிக்க பெருந்தனிச் சிறப்புடையதாக விளங்குகின்றது. திருவாசகம் ஒரு நூற்பா (சூத்திரம்) போலுமெனின், திருவருட்பா அதற்கு அமைந்த

ஒப்புயர்வற்ற சிறந்ததொரு விரிவுரை போலத் திகழ்கின்றது எனலாம். "இறையருட்பேறு எய்துவதற்குத் திருவாசகத்தின் ஒரு மொழியே போதும். வேறு குருமொழி தேவையில்லை. திருவாசகப் பாடல்களைக் கேட்கும் பேறு பெற்றால் அறிவற்ற அஃறிணைப் பொருள்களாகிய விலங்குகளும் பறவைகளும்கூட, மெய்ஞ்ஞான நாட்டம் உற்றுவிடும்: திருவாசகத்தை ஓதுதலால் விளையும் சிறந்த இன்பம், தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்து, ஊன் கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிக்கும் என்றெல்லாம், வள்ளலார் வாயார மனமாரத் திருவாசகச் செந்தமிழ் மாமறையின் சிறப்பினை விதந்து வியந்து புகழ்ந்து பாடுகின்றார்.

திருவாசகத்தினை ஓதுதலால் தாம்பெற்ற இன்ப அநுபவ மன நிலைமையினைப் பின்வருமாறு வள்ளலார் விளக்குகின்றார்: அழகிலும் அறிவிலும் சிறந்த ஓர் இளம் கன்னிப்பெண் ஒருத்தி, மணப்பருவம் வாய்ந்து திகழ்கின்றாள். அவளுக்கு ஏற்ற அழகும் அறிவும் ஆண்மையும் சிறப்புமிக்க மணமகன் ஒருவனை, அவளது தாய் தந்தையர் பெரிதும் ஆராய்ந்து தேடிப் பார்த்து மணம் செய்துவைக்க முயல்கின்றனர். அங்ஙனம் தனக்கு வாய்க்க இருக்கும் மணவாளனின் குணநல மாட்சிமைகளை உசாவிக் கேட்டறிந்து கொள்ள, அவ் இளம் பருவ மணப்பெண் அளவிலா ஆர்வமும் அவாவும் துடிதுடிப்பும் ஏக்கமும் காதற் கிளர்ச்சியும் கொண்டு நிற்கின்றாள். அந்நிலையில் அவளது உயிர்க்கு உயிர் போன்ற நெருங்கிய தோழி ஒருத்தி, இனி மணமகனாக வர இருக்கும் அவளது காதலனை மிகவும் நன்கினிது அறிந்தவளாய், அவனது இணையற்ற பேரழகின் சிறப்பினையும், மற்றும் அவனது அறிவு அருள் ஆற்றல் சிறப்பு முதலிய குணநலங்களையும், பலகால் பலவகைகளில் விரிவுற விவரித்து விளக்கிக் கூறிவருகின்றாள். அவைகளைக் கேட்குந்தொறும் இவ் இளம்பருவப் பெண் அளவிலாக் காதலின்ப மகிழ்ச்சியில் திளைத்துக் களிதுளும்புகின்றாள். இத்தகையதோர் இன்ப இயல் நிலையினையே, திருவாசகம் ஓதுங்கால் இராமலிங்க வள்ளலார் எய்தி எய்தி, மாறிலா மகிழ்ச்சியில் திளைக்கின்றார். சிவபெருமான்தான் மணமகன். இராமலிங்க வள்ளலார், சிவபிரானை மணக்கவிருக்கும் சிறந்த இளம் பருவக்கன்னிப் பெண். மாணிக்கவாசகர்தான், சிவபிரானாகிய காதல் மணமகனின் குணநலங்களை விரித்து விவரித்து, விளக்கியுரைக்கும் உயிர்க்குயிராகிய தோழி. இவ்வனுபவ நல உண்மைகளையெல்லாம்,

> சேமமிகும் திருவாத
> ஊர்த்தேவு என்றுலகுபுகழ்
> மாமணியே! நீஉரைத்த
> வாசகத்தை எண்ணுதொறும்
> காமமிகு காதலன்தன்
> கலவிதனைக் கருதுகின்ற
> ஏமமுறு கற்புடையாள்
> இன்பினும்இன் பெய்துவதே

எனவரும் திருப்பாடலில், இராமலிங்க. வள்ளலார் இனிதெடுத்துக் குறிப்பிட்டுப் பாடி நமக்குச் சிறப்புற விளக்கியிருத்தல் காணலாம்,

"கடவுளைப் பலசமயங்கள் தந்தை நிலையிற் கருதிப் போற்றுகின்றன. அது பொருத்தமும் சிறப்பும் உடையதேயாயினும், கடவுளைத் தாயாகக் கருதிப் போற்றுதல், ஒருவகையில் மிக்க பொருத்தமும் சிறப்பும் உடையதாகும். கடவுளை நண்பனாகக் கருதிப் போற்றுதல், அதனையும்விடக்கூட மிகமேலான நெறியாகும். இவ் எல்லா நெறிகளையும்விட, மிகமிகச் சிறந்த நிலை ஒன்று உண்டு. கடவுளைக் காதலனாகவும், நம்மைக் காதலியாகவும் கருதி உணர்ந்து போற்றும் நிலையே, அது.கடவுள்பால் நாம்செய்யும்அன்பு வழிபாட்டின் மிகமேலான உச்சநிலை, இத்தகைய காதல் உணர்விலேயே இறுதியிற் சென்று, செவ்விதிற் கனிந்து நிறைவுறுகின்றது." இந்நிலையை 'நாயக நாயகி பாவம்' எனச் சமய நூல்கள் கூறும். எல்லா நாடுகளிலும், எல்லாக் காலத்திலும் இருந்த சிறந்த அருளாளர்கள் அனைவரும் இவ் இறையியற் காதல் அநுபவ நிலையைப் பெற்றிருக்கின்றனர். எனினும், இத்துறையில் மணிவாசகப்பெருமான், பெரிதும் தலைசிறந்து விளங்குகின்றார் எனலாம்.

---

"Calling God Mother is an higher idea than Calling him Father, and to Call him Friend is still higher, but the highest is to regard him as the Beloved. The highest point of all is to see no difference between Lover and Beloved".

—Swami Vivekanandar

மணிவாசகர் இயற்றியருளிய நானூறு பாடல்கள் கொண்ட திருச்சிற்றம்பலக் கோவையார் என்னும் நூல், உலக இலக்கியங்களிலேயே ஒப்புயர்வற்ற தெய்விகத் திருவருட் செந்தமிழ்க் கவிதை இலக்கியம் எனலாம். அத்தகைய அரும் பெறல் நிலையை, ஆளுடைய அடிகளாகிய மணிவாசகப் பெருமானின் வாயிலாக இராமலிங்க அடிகளும் பெற்றுப் பிறங்கி நின்ருர் என்பதில் ஐயமில்லை. திருவருட்பாத் திருமுறைகளில், இத்தகைய காதலன் காதலி நிலை அமைந்த கவிதைகள் பற்பல, ஆங்காங்கே பெரிதும் பரவி விரவி வந்திருத்தல் காணலாம். சிறப்பாக மூன்ரும் திருமுறை முழுவதுமே, இந்தக் காதலன் காதலி உணர்வு நிலையினைக் கவினுற விளக்கும் கவிதைகளாக அமைந்திருத்தல், அறிஞர்களுக்கு ஆராப் பெரு விருந்தாகும்.

## நால்வர் தமிழ் :

இதுகாறும் பொதுவகையில் தனித்தனியே நால்வர் பெருமக்கள்பால், இராமலிங்க வள்ளலார் கொண்டிருந்த நயப்பும் வியப்பும் குறித்து, ஒருசிறிது ஆராய்ந்தோம். இங்ஙனம் தனித்தனியாக அல்லாமல், நால்வர் பெருமக்கள்பால் நம்வள்ளற்பெருமான் கொண்டிருந்த எல்லையற்ற பேரன்பின் திறனை விளக்கும் ஒரு நிகழ்ச்சியை மட்டும் ஈண்டுக்குறித்து அமைதல் சாலும். இராமலிங்கர் சென்னையிற் பல்லாண்டுகள் வதிந்திருந்தார். அப்போதெல்லாம் திங்கள் வெள்ளிக்கிழமைகள் தோறும் திருவொற்றியூர்க்குச் சென்று, முறையே தியாகராசப் பெருமானையும், வடிவுடையம்மையையும் நியமமாக வழிபட்டு வந்தார். ஒருமுறை அவர், சென்னைத் தங்கசாலைத் தெருவின் வழியாகத் திருவொற்றியூர்க்கு வழிபாட்டு நேரத்திற்குள் சென்றுவிட வேண்டுமென்று, விரைந்து நடந்து கொண்டிருந்தார். அப்போது, அவர்க்கு மிகநெருங்கிய அணுக்கத் தொண்டர்களாக விளங்கியிருந்த அன்பர்கள் சிலரும், அவருடன் நடந்து சென்றனர். அங்ஙனம் அடிகளார் விரைந்து நடந்து கொண்டிருக்கும்போதே, திடீரென்று தெருவில், வழியில் நின்று விட்டார். அவர்தம் கண்கள் மூடியிருந்தன. அவர் தம் வயம் இழந்து பரவசப்பட்டுக் கண்களில் நீர்பெருகித் தம்மை மறந்து நின்ருர். அங்ஙனம் ஒரு சிறிது நேரம் நின்றிருந்த பின்னர், அவர் விழிப்பும் உணர்வும் பெற்று மேற்கொண்டு நடக்கலுற்ருர். அடிகள் இங்ஙனம் திடீரென்று நிற்க நேர்ந்தமைக்கு யாது காரணம் என்று அன்பர்கள் அறிந்து கொள்ள இயலவில்லை. அடிகளை அதுபற்றி அப்போது அவர்கள் வினவவும் முற்பட்டிலர். பின்னர்ச் சில நாட்கள் கழித்து அன்பர் ஒருவர் அடிகளிடம் அதுபற்றி மெல்லெனக் குறிப்பிட்டுக் காரணம் யாதென விளக்கியருளும்படி பணிவுடன் வணங்கி வேண்டி நின்ருர். சுவாமிகள் தங்கசாலைத் தெருவில் சென்று கொண்டிருந்தபோது, யாரோ ஒரு அன்பர் தம் வீட்டிற்கு உள்ளிருந்து இனிமையாகத் தேவாரம் பாடிக் கொண்டிருந்திருக்கின்ருர். அது தற்செயலாக வள்ளற்பெருமானின் திருச் செவிகளில் சென்று ஒலித்தது. அதன் பயனுகவே, சுவாமிகள் தம்மை மறந்து பரவசப்பட்டு நிற்க நேர்ந்தது என்னும் உண்மையை, அவ்வன்பர் பின்பு குறிப்பால் அறிந்து கொண்டார். இந்நிகழ்ச்சியின் நினைவாக அமைந்த திருப்பாடல் ஒன்று, திருவருட்பாவில் காணப்படுகின்றது.

“சேல்வரும் கண்ணி இடத்தோய்! நின்
சீர்த்தியைச் சேர்த்தி, அந்த
நால்வரும் செய்தமிழ் கேட்டுப்
புறத்தில் நடக்கச் சற்றே
கால்வரு மாயினும், இன்புருவாகிக் கனிமனம், அப்
பால்வருமோ? அதன்பாற் பெண்களை
விட்டுப் பார்க்கினுமே”

இப்பாடல், தேவார திருவாசகத் திருமுறைகளாகிய நால்வர் அருளிய நற்றமிழ்ப்பாக்களில் இராமலிங்க அடிகள் கொண்டிருந்த எல்லையற்ற ஈடுபாட்டினை விளக்கப் போதியதாகும்.

## முடிவுரை :

இராமலிங்கவள்ளலாரின் நூற்றைம்பத்தொன்ரும் வெள்ளணி விழாவில், அருட்டிரு இராமலிங்க அடிகளாரைப் போற்றுவதுடன், அவர் அன்பு கொண்டு போற்றிய நால்வர் பெருமக்களையும், நாம் நயந்தினிது போற்றி, வையத்து வாழ்வாங்கு நலமுற வாழ்ந்து, உய்ய முயலுவோமாக.

—ஆசிரியர்

# *தாயுமானவர்

'சிலம்புச் செல்வர்' திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள், M.L.C.,
மேலவைத் துணைத்தலைவர், சென்னை

## முன்னுரை :

சென்னை யோகாசன ஆலயத்தினர், கடந்த முப்பத்திரண்டு ஆண்டுகளுக்கு மேலாகச் சிறந்த பல நல்ல தொண்டுகளைச் செய்து கொண்டு வருகின்றனர். இதன் நிகழ்ச்சிகளிலும் விழாக்களிலும், இயலும் போதெல்லாம் யான் பலமுறை கலந்து கொண்டிருக்கின்றேன். அரசியற் சூழல்களில் உழன்றுவரும் எனக்கு, இத்தகைய அருளியல் ஆன்மீகச் சூழல்கள், பாலைவனத்தில் ஒரு சோலைவனம் போல, ஆறுதலும் அமைதியும் அளித்துத் துணை புரிந்து வருகின்றன. யான் ஒரு சில காலத்திற்கு முன், யோகாசனப் பயிற்சிகளைப் பெற வேண்டுமென்று விரும்பியதும் முயன்றதும் உண்டு. பண்டித சவகர்லால் நேரு அவர்கள் நாள்தோறும் சிரசாசனம் புரிவது உண்டு என்று கேட்டும் அறிந்தும் இருந்த காரணத்தினால், எனக்கும் அவைகளைப் பயின்று கொள்ள வேண்டுமென்ற எண்ணம் தோன்றியது. திருவொற்றியூரில் யோகாசனப் பயிற்சிகளில் வல்லவராக விளங்கிய, காலஞ்சென்ற திரு. வி. என். குமாரசாமி அவர்கள், என்பால் அன்புடைய நெருங்கிய நண்பராக இருந்து வந்தார். அவர் என்னுடைய மெலிந்து இளைத்த உடல்நிலையைக் காணும்போதெல்லாம், யோகாசனங்களைப் பயின்று கொள்ளும்படி என்னைப் பெரிதும் வற்புறுத்தி வேண்டுவார். ஒரு சில நாட்கள் பயிற்றுவிக்கவும் செய்தார். எனினும், அவைகளை யான் தொடர்ந்து பயில முடியாமலே போயிற்று. அதற்கு ஏற்ற சூழல்களும், ஓய்வும், நேரமும், வாய்ப்பும் இல்லாமற் போயினமையே காரணம்.

'யோகாசனம்' என்னும் தொடரில், இரண்டு சொற்கள் உள்ளன. யோகம் என்பது வெறும் ஆசனங்கள் அன்று. ஆசனங்கள் செய்தலே யோகம் ஆகிவிடாது. ஆசனங்கள் உடல் நலத்திற்கும், யோகம் உள்ள நலம் என்னும் ஆன்மீக நலத்திற்கும் பெருந்துணை புரியும். இங்ஙனம் உடலுக்கும் உள்ளத்திற்கும் நலம் விளைவிக்கவல்ல யோகாசன வகுப்புக்களை, நம்முடைய யோகாசன ஆலயத்தினர், சென்னையிற் பல பேட்டைகளில் பல்லாண்டுகளாக நடத்தி வருவது, போற்றுதற்குரிய சிறந்த நல்ல தொண்டாகும்.

யோகாசன ஆலயத்தினர், தாங்கள் செய்து வரும் இத்தொண்டிற்கு அரண்புரியும் வகையில், தாயுமான சுவாமிகளைத் தமக்குக் குருவாகத் தேர்ந்து கொண்டு, அவர்தம் பாடல்களையும் உபதேசங்களையும்கூட வகுப்புக்கள் மூலமாகப் பரப்பி வருவது, பொன்மலர் மணம் பெற்றாற் போன்று, மேலும் போற்றுதற்குரிய சிறந்த நல்ல தொண்டாகும்.

## தாயுமானவர் :

தாயுமான சுவாமிகள், பல்வேறு இனம் மதம் சாதி குலம் என்னும் சழக்குகளில் சிக்குண்டு தவித்து வருகின்ற மக்கட் குலத்தினர் அனைவருக்கும் சமரச நெறியினையும், சன்மார்க்க உணர்வினையும், போதித்தருளிய ஒரு சிறந்த பெரும் சான்றோராவர். தாயுமானவர் காலத்தில் சைவம் வைணவம் முதலிய சமயப் பூசல்களும், வேதாந்தம் சித்தாந்தம் என்னும் தத்துவப் பூசல்களும், பிறவும் நிறைந்திருந்தன. ஆயினும் அவர் வேற்றுமைகளுக்கிடையில் ஒற்றுமையைக் கண்டார். மக்களெல்லாம் ஓரினம், ஒருகுலம் என்னும் உணர்வில் ஒன்றுபட்டு அன்பு கொண்டு வாழவேண்டுமெனப் போதித்தார். அவரது சமரச மனப்பான்மையையும், சன்மார்க்க உணர்வினையும்,

*சென்னை யோகாசன ஆலயத்தின் கிளைத் தொடக்கவிழா, இந்திய இளைஞர் சங்கத்தின் (Y. M. I. A.) ஆதரவில், அரண்மனைக்காரன் தெருவிலுள்ள கோகலே மண்டபத்தில் நிகழ்ந்த பொழுது, ஆற்றிய தலைமையுரை (15—9—73). கேட்டு எழுதியவர் : ந. ரா. முருகவேள்.

"வேறுபடு சமயமெலாம் புகுந்து பார்க்கின்
விளங்குபரம் பொருளே!
நின்திருவிளையாட் டல்லால்
மாறுபடும் கருத்தில்லை; முடிவில் மோன
வாரிதியில் நதித்திரள்போல் வயங்கிற
றம்மா"

எனவரும் பாடல் ஒன்றே தெளிவுறக் காட்டப் போதிய சான்ருகும். கடவுளின் பெயரால் பெயர்களும் பிரிவுகளும், பூசல்களும் நேர்தலை அவர் சிறிதும் விரும்பவில்லை: ஆதலின் கடவுளை அவர், ஒரு பெயரும் வடிவமும் அடையாளமும் கற்பித்துக் கூருமல், அனைவருக்கும் பொதுவாக, அனைவரும் ஏற்றுக்கொள்ளும் படியாக, எல்லா மதத்தினரும் இசைந்து உடன்பட்டு மகிழும் வகையில், பொதுவான நிலையில் போற்றிப் பரவுதலைக் காண்கின்ருேம்.

(1) "அங்கு இங்கு எனுதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்தது எது? தன்னருள் வெளிக்குளே அகிலாண்டகோடியெல்லாம் தங்கும்படிக்கு இச்சைவைத்து உயிர்க்குயிராய்த் தழைத்தது எது? மனவாக்கினில் தட்டாமல் நின்றது எது? சமயகோடிகளெல்லாம் தம் தெய்வம் எம் தெய்வம் என்று எங்கும் தொடர்ந்து எதிர் வழக்கிடவும் நின்றது எது? எங்கணும் பெரு பெரு வழக்காய் யாதினும் வல்ல ஒரு சித்தாகி, இன்பமாய் என்றைக்கும் உள்ளது எது? மேல் கங்குல் பகலற நின்ற எல்லை உளது எது? அது கருத்திற்கு இசைந்தது; அதுவே கண்டன எல்லாம் மோன உருவெளியதாகவும் கருதி அஞ்சலி செய்குவாம்" என்று தாயுமானவர் பாடியிருப்பது, ஒரு சமயத்தார்க்கு மட்டுமன்றி எல்லாச் சமயத்தார்க்கும் ஏற்புடையதாகும்.

(2) தாயுமானவரின் பாடல்கள் மிகவும் எளிமையானவை; எவருக்கும் விளங்கக் கூடியவை; உலகியலின் குற்ற நற்றங்களை எடுத்து உள்ளவாறு உணர்த்தவல்லவை. "ஆசைக்கு ஓர் அளவில்லை; அகிலமெல்லாம் கட்டி ஆளினும் கடல்மீதிலே ஆணை செலவே நினைவர்; அளகேசன் (குபேரன்) நிகராக அம் பொன் மிகவைத்த பேரும், நேசித்து ரசவாத வித்தைக்கு அலைந்திடுவர். நெடுநாள் இருந்த பேரும் நிலையாகவே இனும் காய கற்பம் தேடி நெஞ்சு புண்ணுவர். எல்லாம் யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும் உறங்குவதுமாக முடியும்" என்பன போலவரும் பாடல்கள், ஒரு முறை கேட்ட அளவிலேயே எவருள்ளத்தையும் கொள்ளை கொள்ள வல்லனவாகும்.

(4) தாயுமான சுவாமிகள், ஒரு சிறந்த அருளாளர், சீவன்முத்தர். எல்லாப் பொருள்களிலும் இறையருள் இயல்பைக் கண்டவர். இறையருட்டிறன் எல்லாப் பொருள்களிடத்தும் நிறைந்து விளங்கும் திறனை, அவர் தெளிவுற உணர்ந்திருந்தார். எல்லாப் பொருள்களும் அவருக்குச் சிவமயமாகத் தோன்றின. அத்தகைய பெருநிலையைப் பெற்றிருந்தார் அவர்! "பண்ணேன் உனக்கான பூசை; ஒரு வடிவிலே பாவித்து இறைஞ்ச, ஆங்கே பார்க்கின்ற மலர் ஊடும்நீயே இருத்தி; அப்பனிமலர் எடுக்க மனமும் நண்ணேன்; அலாமல் இருகைதான் குவிக்க எனில், நானும் என்னுளம் நிற்றிநீ; நான் கும்பிடும் போது அரைக் கும்பிடு ஆதலால், நான் பூசை செய்யல் முறையோ?" எனவரும் பாடல் தாயுமானவரின் சிறந்த தத்துவ ஞானத் தெளிவை உணர்த்துகின்றது எனலாம்.

(5) தாயுமானவர் எல்லாக் குணநலன்களும் பொருந்திய சிறந்த சான்ருேர் ஆயினும், "பணியுமாம் என்றும் பெருமை" என்றபடி, தம்முடைய பணிவுடைமையால், உலக மக்களின் குற்றங்குறைகளை யெல்லாம் தம்மீது ஏறட்டுக் கொண்டு பழித்திழித்துப் பாடிக் கொள்ளுகின்ருர். "எத்தனை விதங்கள்தான் கற்கினும் கேட்கினும் என் இதயமும் ஒடுங்கவில்லை; யான் எனும் அகந்தைதான் எள்ளளவும் மாறவில்லை. யாதினும் அபிமானம் என் சித்த மிசை குடிகொண்டது; ஈகையொடு இரக்கம் என் சென்மத்தும் யான் அறிகிலேன்; சீலமொடு தவவிரதம் ஒரு கனவிலாயினும் தெரிசனம் செய்தும் அறியேன். பொய்த்தமொழி அல்லால் மருந்துக்கும் மெய்ம்மொழி புகன்றிடேன்; பிறர் கேட்கவே போதிப்பல்லாது, சும்மா இருந்துன் அருள் பொருந்திடாப் பேதை நானே; அத்தனை குணக்கேடர் கண்டதாக் கேட்டதா அவனிமிசை உண்டோ சொலாய்!" என்பன போலவரும் எளிய இனிய சிறந்த பாடல்கள், தாயுமானவரின் பணிவுடைமைத் தன்மையைச் சாலவும் விளக்குவனவாகும்.

(5) தாயுமானவர் இவ்வுலக மக்களின் இயல்புகளையெல்லாம் நன்கினிது அறிந்திருந்தார். சமுதாயத்தில் நிகழும் பலவேறு தீய செயல்களையும் கண்டு மனம் புழுங்கினர். உலகமக்கள் தம்முள் ஒருவரையொருவர் ஏமாற்றி வஞ்சிக்கும் செயல்களைக் கண்டு பெரிதும் மனம் நொந்தார். உலக மக்களை இயன்ற அளவு திருத்த வேண்டுமென்று பெரிதும் விரும்பினர். ''பொய் திகழும் உலக நடை என் சொல்கேன்? என் சொல்கேன்; பொழுது போக்கு ஏது எனிலோ, பொய்யுடல் நிமித்தம் புசிப்புக்கு அலைந்திடல்; புசித்தபின் கண்ணுறங்கல், கைதவம் அலால் இதுசெய்தவ மல்லவே; கண்கட்டபேர்க்கும் வெளியாய்க் கண்டது இது; விண்டு இதைக் கண்டித்து நிற்றல் எக்காலமோ அதை அறிகிலேன்'' எனத் தாயுமானவர் உளம் வருந்திப் பாடியிருத்தல் காணலாம்.

(5) மக்களிடையிற் காணும் பொய்,பொருமை வஞ்சகம், சூழ்ச்சி, களவு சூது முதலிய குற்றங்களைக் கண்டு, தாயுமானவர் பெரிதும் உள்ளம் வருந்தினர். கல்லாதபாமரமக்கள் எவ்வளவோ நல்லவர்கள். கல்வியறிவில் தேர்ச்சி பெற்றவர்களே, தாம் கற்றதற்கும் நடப்பதற்கும் சிறிதும் சம்பந்த மில்லாமல், பலவகைகளில் உலகை ஏமாற்றி உழலுகின்றுர்கள் எனத் தாயுமானவர் கண்டறிந்திருக்கின்ருர். கற்ற புலவர்களில் ஒருவர் ஞானம் முக்கியமென்று சொன்னல், மற்ருெருவர் அதை மறுத்து அதைவிடக் கன்மம் (கடமை) தான் முக்கியமென்பார். எவரேனும் ஒருவர் கடமைதான் முக்கியமென்ருல், இல்லை இல்லை ஞானம் தான் மிகவும் முக்கியமென்று வேருெருவர் சொல்ல முற்படுவார். வடமொழியில் வல்லவன் ஒருவன் பேசத் தொடங்கினல், உடனே தமிழிலே தேர்ச்சி பெற்றதுபோலச் சிலர் காட்டிக் கொள்வர். தமிழ்ப்புலமையிற் சிறந்த பெரியவர்கள் வந்தால், அவர்கள்பால் வடமொழியிற் பெரிய பண்டிதர்போல நடித்து, அவருடன் வடமொழி சுலோகங்களை அரைகுறையாக உளறிக் காட்டுவர் சிலர். இங்ஙனமெல்லாம் போலிப் புலமையர் சிலர் செய்யும் வஞ்சகச் செயல்களைத் தாயுமானவர் கண்டிருக்கின்ருர் போலும்!

அதனுல் அவர்களின் குற்றங்களைத் தம்மேல் ஏறட்டுக் கொண்டு, ''கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்; கற்றும் அறிவில்லாத என் கன்மத்தை என் சொல்கேன்? மதியை என் சொல்லுகேன்? கைவல்ய ஞானநீதி நல்லோர் உரைக்கிலோ, கன்மம் முக்கியமென்று நாட்டுவேன்; கன்மம் ஒருவன் நாட்டினலோ பழைய ஞானம் முக்கியமென்று நவிலுவேன்; வடமொழியிலே வல்லான் ஒருத்தன் வரவும், திராவிடத்திலே வந்ததா விவகரிப்பேன், வல்ல தமிழறிஞர்வரின் அங்ஙனே வடமொழியின் வசனங்கள் சிறிது புகல்வேன்; வெல்லாமல் எவரையும் மருட்டிவிட வகைவந்த வித்தையென் முத்தி தருமோ? வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற வித்தகச் சித்தர் கணமே'' எனத் தாயுமான சுவாமிகள் பாடியருளுகின்ருர். இப்பாடல் எவ்வளவு எளிமையாகவும், இனிமையாகவும், உலகமக்களின் குற்றங் குறைகளை எடுத்துக் காட்டித் திருத்த முயல்கின்றது!

## முடிவுரை:

(7) தாயுமானவர் பாடல்களில் எந்நாட் கண்ணி, பராபரக்கண்ணி என்பன, மிகவும் சிறப்புடையவை; கருத்துக்களைச் சுருங்கச் சொல்லி விளங்கவைப்பவை.

''நெஞ்சகமே கோயில்; நினைவே
சுகந்தம்; அன்பே
மஞ்சனநீர்; பூசை கொள்ள வாராய்
பராபரமே'' (1)

எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறென் றறியேன்
பராபரமே (2)

அன்பர்பணி செய்ய என்னை ஆளாக்கி
விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும்
பராபரமே (3)

என்றுற்போல வரும் தாயுமானவரின் அருள் மொழிகள் அனைத்தும், நினைத்தொறும் நினைத்தொறும் இன்பம் பயப்பவை. உள்ளத்தை உருக்குபவை. தெள்ளத் தெளியக் கருத்துக்களை உணர்த்துபவை; எவரும் படித்துப் பயன் பெறத் தக்கவை. இவைகளைப் படிப்பதன் மூலம் உள்ளத்திற்கு ஒருவகை இன்பமும் அமைதியும் ஏற்படுதல் காணலாம். ★

# சிந்தைக் கலசம்

மாட்சிமிகு திரு. எஸ். மகராஜன், B.A., B.L.,
நீதிபதி, உயர்நீதி மன்றம், சென்னை.

வானவெளிக் கப்பலில் முதல் முதலாகப் பயணம் செய்துவிட்டுப் பூமிக்குத் திரும்பி வந்தார் ஒரு ரஷ்ய விஞ்ஞானி. பேட்டி காணச் சென்ற பத்திரிகை நிருபர்களிடத்திலே அவர் எக்காளமாகச் சொன்னார் : "வானத்திலே எங்கெங்கெல்லாமோ சுற்றிப் பார்த்து விட்டேன். ஆனால், கடவுள் என்ற ஆசாமி எங்கும் என் கண்ணுக்குத் தென்படவில்லை" என்றார்.

உள்ளத்துக்குள்ளேயே இறைவனை வைத்துக் கொண்டு, அகவெளியை மறந்து புறவெளியிலே இறைவனைத் தேடுகிறார்களே, அவர்களைப் பார்த்துத் திருமூலர் சொல்லுகிறார் :

"உள்ளத்தி னுள்ளே உளபல தீர்த்தங்கள்
மெள்ளக் குடைந்து நின்றாடார்,
வினைகெட,
பள்ளமும் மேடும் பறந்து திரிவரே
கள்ள மனமுடைக் கல்வியில் லோரே"

ஒரு விஞ்ஞான மேதையைப் பார்த்து, அதுவும், வானவெளியைச் சுற்றி வந்த விஞ்ஞான மேதையைப் பார்த்து, "கள்ள மனமுடைய கல்வியில்லாதவன்" என்று தயவு தாட்சண்யம் பாராமல் பேசுகிறார் திருமூலர். திருமூலரைக் காட்டிலும் கடுமையானவர் சிவவாக்கியர். அசட்டுப் பேச்சைக் காதால் கேட்கவே முடியாது அவராலே. அந்த விஞ்ஞானியைப் பார்த்துச் சிவ வாக்கியர் சொல்லுவதைப் பார்ப்போம்.

"உறியிலே தயிர் இருக்க
ஊர்புகுந்து வெண்ணெய் தேடும்
அறிவிலாத மாந்த ரோடு
அணுகு மாற தெங்ஙனே !"

வீட்டுக்குள்ளே இருக்கிறது உறி. உறிக்குள்ளே இருக்கிறது தயிர். அந்தத் தயிரை எடுத்துக் கடையவேண்டியதுதான் பாக்கி; உடனே வெண்ணெய் கிடைத்துவிடும். இதைச் செய்யாமல், வெண்ணெய் தேடி ஊர் ஊராய் அலைகிறாயே, வானவெளியை வேறு சுற்றுகிறாயே, உன்னுடைய சமர்த்தை என்னவென்று சொல்லுவது : உன்னோடு பேச்சு வைத்துக் கொள்வதே தப்பு, என்று கடிந்து கொள்கிறார் சிவவாக்கியர்.

அப்படியானால் இறைவன் உள்ளத்துக்குள்ளேயே இருக்கிறானா ? போயும், போயும் இருப்பதற்கு மனித உள்ளந்தானா கிடைத்தது இறைவனுக்கு ? அங்கே போய் அமர்வதற்கு என்ன காரணம் ? என்றெல்லாம் கேட்கிறோம். பதில் சொல்லுகிறார் திருமூலர் :

"கள்ளப் பெருமக்கள்
காண்பர் கொலோ என்று
உள்ளத்தி னுள்ளே
ஒளித்திருந்து ஆளுமே"

வேடிக்கைப் பிரியனாகிய இறைவன், மனிதனோடு கண்ணும் பொத்தி விளையாடுகிறான். கண்ணும் பொத்தி விளையாடும் போது எல்லோரும் எதிர்பார்க்கும் இடத்திலே ஒளிந்தால், விளையாட்டில் ரஸமில்லாது போய் விடுமே : ஆகையால், மனிதன் எளிதில் கண்டுபிடிக்க முடியாத இடம் அவன் மனம் தான், அங்கே போய் ஒளிந்து கொள்வோம் என்று, தெளிந்து, அவன் உள்ளத்துக்குள்ளே போய்ப் பதுங்கிக் கொண்டானாம்.

"சிந்தைக் கலசத்து எழுகின்ற மாசக்தி" என்று இறைவனைப் போற்றுகிறார் திருமூலர். ஒளிந்திருக்கும் இடம் நம்முடைய சிந்தைதான்' வானவெளியல்ல என்று தெரிவதற்கே யுகக் கணக்காகிவிடுகிறது. ஆனால், இருக்கும் இடம் தெரிந்த பிறகு இறைவனோடு உறவாடுவது எளிதாகிவிடுகிறது.

தன் மனத்தைத் தன் மனத்துக்குள்ளேயே செலுத்தித் தேடத் தொடங்குகிறுர் திருமூலர். கலங்கிப் போயிருந்த சிந்தை, கொஞ்சம் கொஞ்சமாகத் தெளிவடைகிறது. சிந்தைக் கலசத்திலுள்ளிருந்து சிவம் மெல்ல மெல்ல வெளிப்படுவதைக் காண்கிறுர்.

" சிந்தை தெளியத் தெளிய வல்லார்க்ட்குச்
சிந்தையி னுள்ளே சிவனிருந்தானே "

என்று ஓலமிடுகிறுர் திருமூலர்.

இப்படியாக, இறைத் தத்துவத்தைக் கண்டு பிடித்தவுடன் அவருக்கு என்றுமில்லாத துணிச்சல் ஏற்பட்டுவிடுகிறது.

" ஆராலும் என்னை அமட்ட
வொண்ணுதினி "

என்கிறுர். ஒரு பயலுக்கும் அஞ்சவேண்டிய தில்லையாம். ஏன்?

" சீரார் பிரான் வந்து என் சிந்தை
புகுந்தனன் "

முன்னமேயே சிந்தையிலிருந்தவன்தான். ஆனுல், இப்போதுதான் என் சிந்தையிலிருக் கிறுன் என்று நான் உணர்ந்தேன். ஆகையால் அவன் என் சிந்தையில் புகுந்துவிட்டான்' என்றே சொல்ல வேண்டும். இதன் விளைவு என்ன?

" சீராடி அங்கே திரிவதல்லால், இனி
ஆர்பாடும் சாரா அறிவறிந் தேனே "

தன் நினைவு வந்துவிட்டது. இன்னெருவனைச் சார்ந்து நிற்கவேண்டிய அவசியம் இல்லை. சார்பு கெட்டுவிட்டது. ஆகவே ஒழிந்தது அச்சம். ஏன் பாடமாட்டார்?

" ஆராலும் என்னை அமட்ட
வொண்ணுதினிச்
சீரார் பிரான்வந்து என் சிந்தை புகுந்தனன்
சீராடி அங்கே திரிவதல்லால் இனி
ஆர்பாடும் சாரா அறிவறிந் தேனே"



பழநி அருள்திரு தண்டாயுதபாணிசுவாமி கோயிலில் நிகழ்ந்த குடமுழுக்கு விழாவில், திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள், ஆணையர் அவர்களால் விருது வழங்கிச் சிறப்பிக்கப் பெறுதல். நடுவில் இருப்பவர் அறங்காவலர் குழுத்தலைவர் திரு. பு. மனேகரன் அவர்கள். (2—9—73).



அருள்திரு. தண்டாயுதபாணி சுவாமி, பழநி.



அருள்திரு பிரசன்ன வேங்கட நரசிம்மசுவாமி,
சைதாப்பேட்டை, சென்னை.



அருள்திரு. பிட்சாடன மூர்த்தி திருவுருவம்.

# மெய்கண்ட நூல்களின் வாழ்வியல் உண்மைகள்

(முற்றொடர்ச்சி)

**உயிரியல் :**

இந்நாளில் அறிவியல் மிக விரைவாகப் பெரிதும் வளர்ந்து வருகின்றது. பெரும்பாலான மக்களிடையே கல்வியறிவும் பரவிப் பெருகி வருகின்றது. இந்நிலையில் மக்கள் தம் அறிவின் துணைகொண்டு எத்தனையோ பலப்பல புதுப் பொருள்களை அறிந்தும், ஆராய்ந்தும், கண்டு பிடித்தும் வருகின்றனர். இவை அனைத்தும் புற முகமாக (Objective) நிகழ்த்தப்படுகின்றனவே யன்றி, அகமுகமாக (Subjective) ஏதும் நிகழவில்லை. அதன் காரணமாக எவ்வெவற்றையோ அறிந்துகொள்ள முயன்று வரும் மனிதன், "நான் ஆர்? என் உள்ளம் ஆர்? ஞானங்கள் ஆர்? என்னை ஆர் அறிவார்?" என்று தனக்குத் தானே வினவவும், அதற்குரிய விடையினைக் கண்டறிந்து பயன்பெறவும் முயலவில்லை. "ஒருவன் உலகத்தை யெல்லாம் உரிமையாகப் பெற்றாலும், தன் உயிரை இழப்பானேல், அவன் அடையக்கூடிய நன்மை யாது?" (1) ஒன்றும் இல்லை அன்றோ?

மனிதன் தன்னைப் பற்றியும், உயிரைப் பற்றியும் அறிந்துகொள்ள வேண்டுவது மிகவும் இன்றியமையாததாகும். "உன்னை நீ உணர்ந்து கொள்" என்ற உபதேசம் எக்காலத்துக்கும் எவருக்கும் ஏற்றதொன்றாகும். பிற எல்லாப் பொருள்களையும் அறிந்துகொள்ள முயலும் மனிதன், முதற்கண் தன்னைப் பற்றி ஓரளவாதல் ஆராய்ந்துணர்ந்து கொள்ளுதல் மிகமிக முதன்மையானது. பேரறிஞர் அலெக்ஸிஸ் காரல் தம்முடைய நூல் ஒன்றில், இக்கருத்தினை மிகவும் வலியுறுத்திக் கூறுகின்றார். (2)

இவ்வாறே சர். ஜான் டேவிஸ் என்னும் பேரறிஞரும் "நாம் உலகில் எல்லாப் பகுதிகளையும் அறிந்து கொள்கின்றோம். வெப்ப மண்டலங்களைக் கடக்கின்றோம். குளிர்ந்த துருவ மண்டலங்களுக்கும் சென்று காண்கின்றோம். ஆனால் நம் வீட்டுக்குள்ளாகத் திரும்பும் பொழுது நம்மை நாமே அறிந்து கொள்ளாமலும், நம்முடைய ஆன்மாவினையே நாம் அறிமுகம் செய்து கொள்ளப் பெறாதவர்களாகவும் இருக்கின்றோம். இஃது எவ்வளவு இரங்கத் தக்கது!" என்று வருந்துகின்றார். (3)

நம் நாட்டில் ஏதும் கல்லாத சிறிய குழந்தைகள் கூட, உடல்வேறு—உயிர்வேறு—உள்ளம்வேறு என்பன போன்ற பல தத்துவ நூலுண்மைகளை, இயல்பாக உணர்ந்திருக்கின்றன. வழிவழியாக எத்தனையோ பல நூற்றாண்டுகளாக, நம் இந்திய நாட்டுச் சான்றோர்கள் கண்டறிந்து உணர்த்தியருளிய தத்துவ நூலுண்மைகள், நம் நாட்டுச் சிறு குழந்தைகளின் உள்ளத்திலும்கூட இயல்பாக ஆழ்ந்து படிந்து, அவற்றின் குருதியிலும் கூடக் கலந்து ஒன்றி இயைந்துவிட்டிருக்கின்றன. அதனால் நம் நாட்டு இளஞ்சிறுவர்கள்கூட, உடல்—உயிர்—கன்மம்—மறுபிறப்பு—ஊழ்வினை என்பன பற்றி ஓரளவேனும் தெளிவாக அறிந்துள்ளார்கள்.

---

(1) "What is a man profited, if he shall gain the whole world, and lose his own soul?"
—St. Matthew; 16, 26.

(2) "Man, the Unknown".
—Dr. Alexis Carrel.

(3) "We that acquaint ourselves with every zone, and pass both tropics and behold the poles, when we come home we are to ourselves unknown and unacquainted still with our own souls".
—Sir. John Davies.

ஆனல் இவ்வெளிய உண்மைகள், பிற நாடுகளிற் பேரறிஞர்கள் என்று பெயரும் புகழும் பெற்று விளங்குபவர்களுக்கும், ஒரு சிறிதேனும் தெரிந்திருப்பதாகத் தெரியவில்லை. உதாரணமாக, உலகப் புகழ் பெற்றவர் ஆகிய பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் என்னும் பேரறிஞர், "தாம் இறையிலார்களுள் ஒருவர் அன்றெனினும், தெளிவிலார்களுள் ஒருவரே என்றும், சித்து, சடம் எனப்படும் பொருள்கள் உண்மையிலேயே இருப்பனவாகத் தாம் கருதவில்லை" என்றும் குறிப்பிடுகின்ருர். (4)

இதனை ஒருசிறிது ஊன்றிக் கருதியுணர்ந்தால், நாம் நம் நாட்டுத் தத்துவ ஞானிகளின் தகுதியும் சிறப்பும் எத்தகையன என்றுணரலாம். பேரறிஞர் பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் போன்றவர்களே ஐயுறவு கொள்ளும் நிலையிலுள்ள உயிரின் இயல்பு (ஆன்ம இலக்கணம்) குறித்து, நம் நாட்டுத் தத்துவ ஞானிகள் பலரும் ஆராய்ந்து கண்ட அரும்பெருங் கொள்கைகளை, இயன்றவரை இங்கு ஒரு சிறிது மிகச் சுருக்கமாகக் காண்போம்.

**பல்வேறு கொள்கைகள் :**

பழைய காலத்தில்—முதன் முதலில்—மனிதர்கள் அறிவு பெற்றுச் சிந்திக்கத் தொடங்கிய நிலையில், நெடுங்காலம் நீள நினைந்து சிந்தித்துப் பற்பல முடிவுகளுக்கு வந்தனர். அவரவர்கள் தத்தம் அறிவாராய்ச்சிகளுக்கு ஏற்ப ஒவ்வொரு நிலையில் ஒவ்வொரு கொள்கையினைக் கூறினர். அங்ஙனம் மக்கள் பலரும் சிந்திக்கத் தொடங்கி, ஆராய்ந்து கண்ட அரிய பல வெவ்வேறு கொள்கைகளைப் பற்றிய குறிப்புக்கள், நம் நாட்டுச் சமய தத்துவ நூல்களிற் காணப்படுகின்றன. மனித சிந்தனையின் வளர்ச்சியும், அறிவாராய்ச்சித் திறனின் செழிப்பும், எங்ஙனம் படிப்படியே ஓங்கியுயர்ந்து பெருகிச் சிறந்திருக்கின்றன என்பதனை, உயிரின் இயல்பு பற்றி விளக்கும் பல்வேறு கொள்கைகளைப் பற்றிய குறிப்புக்கள் நமக்கு நன்கினிது உணர்த்துகின்றன. அவைகளைச் சுருக்கமாக இங்குத் தொகுத்துக் காண்போம்.

(1) ஆன்மா என்பதொரு பொருளில்லை; அது வெறும் சூனியமே என்று கூறுவர், சூனியான்ம வாதிகள்.

(2) தேகமே ஆன்மா; தேகத்தின் வேருக ஆன்மா என்பதொன்று காணப்படவில்லை என்பர், தேகான்மவாதிகள்.

(3) மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து இந்திரியங்களே ஆன்மா என்பர், இந்திரியான்ம வாதிகள்.

(4) மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக்கரணங்களே ஆன்மா என்று சொல்லுவோர் அந்தக்கரணுன்மவாதிகள்.

(5) புரியட்ட தேகம் அல்லது நுண்ணுடல் என்னும் சூக்கும தேகமே ஆன்மா என்று சொல்லுவோர் சூக்கும தேகான்மவாதிகள்.

(6) நம்மால் உள்ளே இழுத்தும் வெளியே விடுத்தும் உயிர்க்கப்பெறும் பிராணவாயுவே ஆன்மா என்று கூறுவர் பிராணுன்ம வாதிகள்.

(7) எல்லாப் பொருள்களையும் இயக்கி நின்று தொழிற்படுத்தும் கடவுள் ஆகிய பிரமம் தான் ஆன்மா என்று புகல்வர், பிரமான்ம வாதிகள்.

(8) அற்றன்று; தேகம் இந்திரியம் அந்தக்கரணம் சூக்குமதேகம் பிராணவாயு என்னும் இவையாவும் கலந்து நின்ற திரட்சியாகிய சமூகம்தான் ஆன்மா என உரைப்பர், சமூகான்ம வாதிகள்.

(9) ஆன்மாவானது பிரமப் பொருளின் பரிணுமமாகத் தோன்றி, அறிவு இச்சை செயல்களை அடைந்து, தீயும் சூடும் போலப் பேதாபேதம் ஆகிய குணகுணித் தன்மைகளையுற்றுப் பல்வேறு வகைப்பட்டு நிற்கும் என்பர், பரிணும வாதிகள்.

(10) ஆன்மாவானது குணகுணித் தன்மை இல்லாமல் முழுவதும் அறிவு மாத்திரையாய் நிற்கும் என்பர், சாங்கிய நூலார்.

---

(4) "Many Agnostics (including myself) are quite as doubtful of the body as they are of the soul but this is a long story taking into difficult metaphysics. Mind and Matter alike, I should say, are only convenient symbols in discourse not actually existing things".

—Dr. Bertrand Russel.
What is an Agnostic.

(11) ஆன்மா என்பது அருவம் அன்று, உருவப் பொருளே என்பர், பௌராணிக மதத்தினர்.

(12) ஆன்மா உருவப்பொருள் அன்று; ஒருவாற்றாற் காணப்படுதலும், ஒருவாற்றாற் காணப்படாமையும் உடைய அருவுருவப் பொருள் எனக் கட்டுரைப்பர், கவுள மதத்தினர்.

(13) ஆன்மா என்பது ஆகாசம்போல அருவமாய் அவிகாரமாய் இருக்கும் என்று பகர்வர், பாதஞ்சலர்.

(14) ஆன்மா எனப்படுவது சடப்பொருளாய் நின்று அறியும் தன்மைபெறும் என இயம்புவர், வைசேடிகர்.

(15) ஆன்மா சித்துப்பொருள்தான். சடப் பொருள் அன்று என்று மொழிவர், பட்டாச் சாரியர்.

(16) ஆன்மாவானது உடம்பிலுள்ள பரமாணு அளவிற்றாய் இருக்கும் என உரைப்பர், பாஞ்சராத்திரிகள்.

(17) உடம்பினுள்ளே, புல் நுனியிற் பனித் துளிபோல ஏகதேசமாய் இதயத் தானத்தில் நின்று, தன் அறிவு விளக்கொளியைப் போல எங்கணும் வியாபித்துப் பரவியிருப்பது ஆன்மா என்பர், மிருதி நூலார்.

(18) உடம்பு முழுவதும் நிறைந்து, சிறிய உடம்பிற் சிறியதாயும், பெரிய உடம்பிற் பெரியதாயும், விளங்குவது ஆன்மா என விளம்புவர், சமணர்கள்.

(19) இறைவனைப் போலவே எங்கணும் வியாபித்துப்பரவி நின்று அறிவது ஆன்மா என அறிவுறுப்பர், ஐக்கியவாதக் கொள்கையினர்.

## சைவசித்தாந்தம் :

இங்ஙனம் உயிரின் இயல்புபற்றிப் பலரும் பலவகையிற் கூறும் கொள்கைகளையெல்லாம் சைவசித்தாந்தம் பொறுமையுடன் கேட்டுக் கொள்ளுகின்றது. அவைகளுக்கு உரிய மதிப் புக் கொடுத்து, நன்கினிது சிந்தித்துப் பார்த்து ஆராய்கின்றது. அவைகள் எங்ஙனம் பொருந் தாதனஎன்று காரணம்காட்டி விளக்குகின்றது. பின்னர் இவைகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட சிறந்த புதிய பொருத்தமான கொள்கையினை யும், அறிவு நெறிக்கு இணங்க ஆராய்ந்து காட்டி நிறுவுகின்றது. இதுதான் மெய்கண்ட நூல்கள் கூறும் சைவ சித்தாந்தம் என்னும் தனிப்பெருங் கொள்கையின் சிறப்பியல்பு ஆகும்.

இச் சிறப்பியல்பினையே "புறச் சமயத்தவர்க்கு இருளாய்—அகச் சமயத்து ஒளியாம் சிறப்பினதாய்—வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தத்திறன்" எனவும்; "நிலவு உலகாயதாதி நிகழ் சிவாத்துவிதாந் தத்துக் குலவினர் அளவளாவாக் கொள்கையதாகி—வேதத்தலை தரு பொருளாய் — இன்பாய் — தாவில் சற் காரியத்ததாய்—மலைவறும் உணர்வு" எனவும்; சான்றோர்கள்வியந்து போற்றியருளினர்.

இத்தகைய சைவ சித்தாந்தம் என்னும் தனிப்பெருந் தத்துவம், 'ஆன்ம இலக்கணம்' பற்றி மேற்குறித்த கொள்கையாளர்கள் பலரும் கூறும் கருத்துக்களை எங்ஙனம் ஆராய்ந்து விளக்குகின்றது என்பதனை, ஈண்டுச் சிறிது காண்போம்.

## பல கொள்கைகளைப் பற்றிய ஆராய்ச்சி :

(1) ஆன்மா என்பதொன்று இல்லை எனக் கூறுபவரும், அங்ஙனம் வாளா கூறுதல் அமையாது. உடல் பொறி விடயம் அனைத்தையும் இஃது ஆன்மாவன்று, இஃது ஆன்மாவன்று என ஒரோ வொன்றாக ஆராய்ந்து கண்டு கழித்த பின்னரே ஆன்மா என்பது சூனியம் என்பர். ஆனால் இங்ஙனம் உடல் பொறி விடயம் அனைத் தினையும் ஒவ்வொன்றாக ஆராய்ந்து பார்த்து, அன்று அன்று எனக் கழித்து முடிவு செய்யுங் கால், அங்ஙனம் முடிவு செய்து நிற்பதாகிய அறிவு ஒன்று இருத்தலின், அதுவே ஆன்மா எனக் கொள்ளுதல் சாலும். அவ்வறிவு தானும் சூனியமே எனின், அஃது "என்னை ஈன்றாள் மலடி" என்பதோடு ஒக்கும். ஆதலின், சூனி யான்ம வாதிகள் கூற்றுப் பொருந்தாது.

(2) உலக வழக்கில் யான் வளர்ந்தேன்—யான் மெலிந்தேன்—யான் மனிதன்—யான் மறையவன் என்று உடம்பின்பண்புகளை உபசாரம் பற்றி உயிருக்கு ஏற்றி வழங்கினும், யான் உடம்பு—யான் கை—யான் கால் என்று உடம்பினை அவ்வாறு வழங்குவார் இலர். என துடல்—எனதுகை — எனதுகால் என வேற்று மைப்படவே யாவரும் வழங்கக்காண்கின்றோம். எனவே, உடம்பின் வேறாக உயிர் என்பதொரு

பொருள் உண்டு என்பது புலனாகும். ஆதலின் தேகான்மவாதிகள் கூற்றுப் பொருந்தாது.

(3) மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐம்பொறிகளுள், ஒவ்வொரு பொறியும் ஒவ்வொரு புலனையே அறியவல்லதாக உள்ளது. ஒரு பொறி அறிவதனை மற்றொரு பொறி அறிய முடிவதில்லை. எனவே ஐம்பொறிகளையும் தனித் தனியே இயக்கி, அவ் ஐம்பொறிகளாலும் ஐம் புலன்களையும் அறிந்து பயன் கொள்வதாகிய ஆன்மா, இவற்றின் வேறாக உண்டு என்று தெளியப்படுதலின், இந்திரியான்ம வாதிகள் கருத்தும் ஏற்புடைத்தன்று.

(4) ஐம்பொறிகளும் ஒடுங்கின கனவு நிலையில் இயங்கும் சூக்கும தேகமே ஆன்மாவாயின் கனவு கண்ட சூக்கும உடம்பே நனவின்கண் அதனை அறியுங்கால், தான் கண்டவாறே தெளிவுற அறிதல் வேண்டும். அவ்வாறின்றி மயங்கியறிதலையே காண்கின்றோமாதலின், நனவின் இயங்கும் தூல தேகமும், கனவு காணும் சூக்கும தேகமும் ஆகிய இரண்டிற்கும் வேறுபட்டு, ஆன்மா என்பதொன்றுண்மை தெளியலாம். இவ்வாற்றாற் சூக்கும தேகான்ம வாதிகள் சொல்லுவதும் செவ்விதன்று.

(5) உறக்கம் விழிப்பு என்னும் இருதிற நிலைகளிலும் பிராணவாயு ஒரு தன்மையாகவே இயங்கிக்கொண்டு நிற்கின்றது; ஆயினும் உடம்புக்கு விழிப்பு நிலையில் மட்டுமே இன்ப துன்ப நுகர்ச்சியுள்ளது. உறக்க நிலையில் அவை இல்லை. ஒரு தன்மையே இயங்கி நிற்கும் பிராணவாயு இவ்வேறு பாட்டுக்குக் காரணமாதல் அமையாது. எனவே பிராணவாயுவின் வேறாக ஆன்மா உண்டு என்பது திண்ணம். இவ்வாற்றாற் பிராணான்மவாதிகள் கூற்றும் பிழைபடுகின்றது.

(6) இனி, அறிவுப் பொருள் ஆகிய பிரமம் தான் ஆன்மா ஆகும் எனின், எக்காலத்தும் திரிவின்றி அறிந்தாங்கு அறியவல்ல பேரறிவுப் பொருள் ஆகிய பிரமமும், அறியாமலும், ஒரு சிறிதே அறிந்தும், அறிந்ததனையும் அடிக்கடி மறந்தும் மயங்கி வருந்தும் நிலையினதாகிய ஆன்மாவும், இருளும் ஒளியும்போலத் தம்முள் வேறுபட்டன என்பது வெள்ளிடை விலங்கல். இதனால் பிரமான்மவாதிகள் கருத்தும் பிழையேயாம்.

(7) தேகம் இந்திரியம் அந்தக்கரணம் பிராணவாயு என்பன தனித்தனியே வெவ்வேறு பெயர் பெறினும், அவையெல்லாம் சேர்ந்த திரட்சி நிலையே ஆன்மா எனக் கொள்ளலாம் எனின், தனித்தனியே வெவ்வேறு பெயர் பெற்று நிற்பன பலவும் ஒன்றாகச் சேர்ந்து திரண்ட வழியும், அத்திரட்சிக்கு ஆன்மா என்னும் பெயர் யாண்டும் வழங்கவில்லை. மேலும் அங்ஙனம் திரண்ட பொருள்கள் அனைத்தும் மாயா காரியப்பொருள்கள் ஆகும். நித்தப் பொருள் ஆகிய ஆன்மா, அநித்தப் பொருள்களின் திரட்சியன்று என்பது தேற்றம். எனவே சமுதாய ஆன்மவாதிகள் கொள்கையும் தகுதியுடையதன்று.

(8) மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் அந்தக்கரணங்கள் நான்கனுள், ஐம்பொறிகள் அறிந்த புலனைச் சித்தம் சிந்தித்தறியும். மனம் பற்றிச் சங்கற்ப விகற்பம் செய்யும். ஆங்காரம் ஒருப்பட்டு எழும், புத்தி நிச்சயிக்கும். ஆனால், இவைகள் முறையே யான் சிந்தித்தேன் பற்றினேன் ஒருப்பட்டெழுந்தேன் நிச்சயித்தேன்என்று அறியும் தன்மையுடையன அல்ல. இங்ஙனம் தம்மை நோக்கச் சித்தாகாத அந்தக் கரணங்களின் வேறாய்த், தன்னை நோக்கியும் பிறவற்றை நோக்கியும் சித்துப் பொருள் எனத் திகழும் ஆன்மா என்பதொரு பொருள் உண்டு. அதுவே இவ்வந்தக்கரணங்களுடன் கூடி அவற்றினாலாய பலனை அடைகின்றது என்பது புலனாகும். ஆதலின், அந்தக்கரணான்மவாதிகள் கருத்தும் பொருத்தமிலது.

(9) பேரறிவுப் பொருளாகிய பிரம்மத்திற்கும், கருவிகளின் துணையின்றி ஒன்றனையும் அறியமாட்டாத சிற்றறிவுப் பொருளாகிய சீவான்மாவுக்கும் இடையே பெருவேறுபாடு காணப்படுதலால், பிரமப் பொருளின் பரிணாமமே ஆன்மா என்னும் பரிணாம வாதிகள் கொள்கை பொருந்துவதன்று.

(10) உயிரின்பால் அறிவு இச்சை செயல் என்னும் மூவகைக் கூறும் நிகழக் காண்டலின், ஆன்மா கேவலம் அறிவு மாத்திரையாய் விளங்குவது என்னும் சாங்கியக் கருத்தும் தகுதியுடையதன்று.

(11) காட்சிப் புலனாதலும், பரிணமித்து அழிதலும் இல்லாத உயிரை, உருவப் பொருள்

என்று பவுராணிகர்கள் பகர்வது பிழையே யாகும்.

(12) அருவம் உருவமாயும், உருவம் அருவமாயும் ஒன்று பிறிதொன்றாகமாறாதாகலானும், மாறுபட்ட இரண்டு தன்மைகள் ஒரு பொருளின்பால் இயல்பாக அமைந்திரா ஆகலானும், ஆன்மாவினை அருவுருவப் பொருள் என்று கூறும் கவுளர் கருத்தும் ஏற்புடையதில்லை.

(13) உயிரானது உடம்பினை யாத்து நின்று அதனைப் பலவகைகளில் ஆட்டி இயக்கி நடிக்குமாறு செய்து வருகின்றதாதலின், அதனை ஆகாயம்போல் அருவாய், அவிகாரியாய் நிற்பது எனப் பகரும் பாதஞ்சலர் கொள்கையும் பாங்குடைத்தன்று.

(14) சடப் பொருள் சித்தாதலும், சித்துப் பொருள் சடமாதலும் உலகத்து யாண்டும் இன்மையால், உயிரைச் சடப்பொருள் என்றும் அதுபின்னர் மனத்தோடு கூடிச் சித்தாகி அறியும் என்றும் கூறும் வைசேடிகக் கொள்கை ஒப்பத்தக்கதாக இல்லை.

(15) மாறுபட்ட இரண்டு தன்மைகள், ஒரு பொருளின்கண் ஒரு காலத்து ஒருங்கே இயல்பாக அமைந்திராவாகலின் உயிரைச் சித்து—அசித்து என இரண்டுமாகக் கருதும் ஒரு சிலர் கருத்தும் பொருத்தம் ஆகாது.

(16) அசித்து ஆகிய ஐம்பொறிகள், அந்தக் கரணங்கள் முதலிய கருவிகளின் துணையில்லாமல், உயிரானது எதனையும் அறியமாட்டாமல் இருத்தலின், அதனைச் சித்து என்று பகரும் பட்டாச்சாரியன், மதமும் அடாது.

(17) உடலின்கண் உள்ள எத்துணையோ பல துளைகளுள் ஒன்றன் வாயிலாக நில்லாமல் ஓடிப்போம் ஆதலாலும், உடலின்கட் கிடந்து கட்டுண்ணவும், பாரம் தாங்கிச் செல்லவும் உடன்படாது ஆதலாலும், உயிரானது உடலினுள் பரமாணு அளவிற்றாய் நிற்பது என்றுரைக்கும் பாஞ்சராத்திரிகள் கூற்றும் அமையாது.

(18) உயிரானது உடலின் ஒரு பகுதியில் இருப்பதெனின், உருவப் பொருள் என்றதற்குரிய குற்றம் அனைத்தும் நேருமாகலானும், குணம் குணியளவில் அன்றி அதற்குமேற் செல்லவல்ல தன்றாகலானும், ஒளியாவது விளக்கின் சூக்கும வடிவேயன்றிக் குணம் அன்றாகலான், அஃது ஈண்டைக்கு உவமையாகாமையானும், விளக்கொளிக்கும் உயிரறிவுக்கும் இடையே வேற்றுமை பெரிதுண்டு ஆகலானும், உயிரானது உடம்பகக்துப் புல் நுனித் துளிபோல ஏகதேசமாய் இதயத்தானத்தின் நின்று விளக்கொளிபோல யாண்டும் தன் அறிவு வியாபிக்கப்பெறுவது என்ற மிருதி நூலார் கூற்றும் ஏற்புடைத்தாகக் காணப்படுகின்றிலது.

(19) உயிரானது உறக்கம் கனவு முதலிய அவத்தைகளை உறுதலானும், ஐம்பொறிகளிலும் அறிவானது ஒரு காலத்து ஒருங்கே உடன் நிகழாமையாலும், சிறிய உடம்பிற் பேரறிவும், பேருடம்பிற் சிற்றறிவும் நிகழக் காண்டலாலும், உறுப்புக் குறைபட்ட வழி உயிரும் குறைபட்டதாகத் தோன்றாமையாலும், உடம்பளவில் நிறைந்து நின்று உணர்வது உயிர் எனச் சாற்றும் சமணர் கொள்கையும் தகவுடையதாகத் தோன்றவில்லை.

(20) உடம்பின்கட் கட்டுண்டு கிடத்தலாலும், தத்துவங்களின் ஏற்றத் தாழ்வுக்கு ஏற்ப ஐந்தவத்தைகள் மாறிமாறி வருதலாலும், ஐம்புலன்களையும் ஒருங்கேயுணர வொண்ணாமல் ஒவ்வொன்றாகச் சுட்டியே யுணர்ந்து வருதலாலும், இறைவனைப்போல எங்கணும் வியாபியாய் நின்று அறிவது ஆன்மா என்று கூறும் ஐக்கியவாதிகள் கொள்கையும் அறிவுக்கு இயைந்ததாக இல்லை.

### மெய்கண்ட நூல்களின் உயிரியல் விளக்கம்:

உயிரானது உள்பொருள், சூனியமன்று. உடல் அறிவற்ற சடமாதலின், பருவுடல் உயிரன்று. கனவு நிலையில் இயங்கும் நுண்ணுடலும் உயிரன்று; ஏனெனில் அது நனவு நிலையில் இயங்கக் காண்கிலம். ஐம்பொறிகளும் உயிரன்று, ஏனெனில் அவை ஒன்று அறிந்ததைப் பிறிதொன்று அறிவதில்லை. அந்தக் கரணங்களும் உயிரெனல் அமையாது; ஏற்றுக்கு எனில், அவை தத்தமக்குரிய தொழிலைச் செய்யுமேயன்றி, 'யான் இதனைச் செய்தேன்' என்று உணர்தற்குரிய தன்மை அவற்றுள் ஒன்றற்கும் இல்லை. எனவே இவற்றினெல்லாம் வேறாக, உயிர் (ஆன்மா) என்பதொன்று, தனியே உள்ளது. இதனைப் பசு, ஆன்மா, சீவன் என்று பலவகைகளில் நூல்கள் கூறும். ஒரு சிலர் ஓர் உயிரே உண்டு என்று ஏகான்ம வாதம்

Monism) செய்வர். அது பொருந்தாது. ஒரு வருக்குற்ற இன்பமோ கவலையோ பிணியோ பிறர்பால் செல்லாமையின், ஒவ்வோர் உடலிலும் தனித்தனியே ஒவ்வோர் உயிர் உள்ளது என்பது புலனாகும். எனவே, உயிர்கள் எண்ணற்றன வாக உள்ளன என்பது தெளிவு,

இத்தகைய உயிர்கள் அருவாய், அறிவாய், நித்தமாய், வியாபகமாய் உள்ளன. அவைகள் ஆணவமலத்தால் பற்றப்பட்டு இருளில் அழுந்திக் கற்போலச் செயலற்றுக் கிடக்கின்றன. இந்நிலை புலம்பு (கேவலம்) எனப்படும். இறைவன் தன் பெருங்கருணையினால், இருளில் செல்வோர்க்குத் துணையாகக் கைவிளக்கு அளிப்பது போல, மாயையினின்று உடல் கருவி உலகு நுகர்ச்சி (தனுகரணபுவன போகம்) என்பவற்றைப் படைத்து உதவுகின்றான். தம்பால் இயல்பாக அமைந்து கிடந்த மூல கன்மத்திற்கு ஏற்ப உயிர்கள் உடல் கருவி உலகு நுகர்ச்சி ஆகியவற்றைப் பெறுகின்றன. உடல் கருவி உலகு நுகர்ச்சி களையும், இச்சை ஞானக் கிரியைகளையும் பெற்றுப் புண்ணிய பாவங்களைச் செய்கின்றன. அவற்றிற்கு ஏற்பப் பல வேறு பிறவிகளையும், நனவு கனவு உறக்கம் பேருறக்கம் உயிர்ப்படக்கம் (சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம்) என்னும் அவத்தைகளையும் அடைகின்றன. இந்நிலை புணர்வு (சகலம்) எனப்படும். இதன் பின்னர் இருவினையொப்பு மலபரிபாகம் சத்திநிபாதம் ஆகியவற்றை அடைந்து, குருவருளினால் சிவஞானம் கைவரப்பெற்று, மும் மலங்கள் நீங்கி, இறைவனின் திருவடிப்பேறு எய்துதல் புரிவு (சுத்தம்) எனப்படும்.

"கேவல சகல சுத்தம் என்று
மூன் றவத்தை ஆன்மா
மேவுவன்; கேவலம் தன்னுண்மை;
மெய்பொறிகள் எல்லாம்
காவலன் கொடுத்த போது சகலனும்;
மலங்கள் எல்லாம்
ஓவின போது சுத்தம் உடையன்
உற்பவம் துடைத்தே"

—சிவஞானசித்தியார்

## உடலும் உறையும்

ஆன்மாக்களுக்குக் காரணசரீரம், கஞ்சுக சரீரம், குணசரீரம், சூக்குமசரீரம், தூல சரீரம் என்னும் ஐந்து சரீரங்கள் உண்டு. இவற்றிற்கு முறையே ஆனந்தமயகோசம், விஞ்ஞானமய கோசம், மனோமயகோசம் பிராணமயகோசம், அன்னமயகோசம் எனவும் பெயர்கள் வழங்கும். சரீரம்—உடல், கோசம்—உறை.

(1) அசுத்த மாயா தத்துவம் ஏனைத் தத்துவங்களுக்கும், சரீரங்களுக்கும் காரணமாக இருத்தலால், அதனால் உண்டாகிய சரீரம் காரண சரீரம் என்றும், அச்சரீரம் பெற்ற அளவில் கேவலத்தில் ஒன்றுமின்றி நின்ற ஆன்மாவுக்கு அறிவு இச்சை செயல்கள் பொதுவகையில் விளக்கமுற, அவ்வளவில் அம்மயக்க அறிவால் ஓர் ஆனந்த உணர்ச்சி நிகழ்தலின், அஃது ஆனந்தமயகோசம் என்றும் பெயர் பெறும்.

(2) காலம் நியதி கலை வித்தை அராகம் என்னும் ஐந்து தத்துவங்களும் ஆன்மாவுக்கு ஐந்து சட்டைகளைப் போன்று இருத்தலால், அவற்றால் உண்டாகிய சரீரம் கஞ்சுக சரீரம் என்றும், அச்சரீரத்தால் ஆன்மாவின் அறிவு இச்சை செயல்கள் சிறப்பு வகையால் விளக்க முற்று விடயபோகங்களை அறியும் இயல்பும், ஆற்றலும் பெறுமாதலின், அவ்விசேட அறிவை உண்டாக்கும் சரீரம் விஞ்ஞான மயகோசம் என்றும் பெயர் பெறும்.

(3) சாத்துவிகம் இராசதம் தாமதம் என்னும் முக்குணங்களாகிய சரீரம், குணசரீரம் என்றும், அம்முக்குணங்கள் மனம் முதலிய அந்தக் கரணங்களைத் தம்முள் அடக்கி நிற்றலின், அது மனோமயகோசம் என்றும் வழங்கப்பெறும்.

(4) சூக்கும பூதங்களாகிய தன் மாத்திரைகளால் அமைந்த சரீரம் நுண்ணிய அணுவடிவினதாய் இருத்தலின் சூக்கும சரீரம் என்றும், அச்சூக்கும சரீரம் பிராணன் என்னும் வாயுவோடு நிற்றலாலும், தான் நீங்குங் காலத்தும் அப்பிராண வாயுவோடு கூடியே நீங்குதலாலும் பிராணமயகோசம் என்றும் சொல்லப்படும்.

(5) பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசம் என்னும் தூல பூதங்களால் உண்டாகிய சரீரம் தூலசரீரம் என்றும், அஃது உணவால் வளர்க்கப்படுதலின், அன்னமயகோசம் என்றும் கூறப்படும். ஆன்மாவானது இந்த ஐந்துகோசங்களின் வேறாயும், அவற்றோடு சேர்ந்து அதுவது வாகவும் நின்று அவற்றைச் செலுத்தும்.

ஆனந்தமயகோசம் விஞ்ஞானமயகோசம் மனோமயகோசம் பிராணமயகோசம் அன்னமய

கோசம் என்னும் ஐந்தும், மாயையினின்று ஒன்றுக்கொன்று தூலமாய்த் தோன்றுவன வாகும். ஆனந்தமய விஞ்ஞானமய கோசங்கள் மிகவும் மென்மையானவை. ஆதலின், அவை கள் தோற்பாவையைப் போலும். மனோமய, பிராணமய கோசங்கள், முன்னைய இரண்டிலும் சிறிது வன்மையுடையவை. ஆதலின், அவைகள் மரப்பாவையை ஒக்கும். அன்னமய கோச மாகிய தூல சரீரம் மிகவும் பருமை வடிவ முடையதாகலின், ஏனைய நான்கிலும் பருமை யும் வலிமையும் பெற்றிருக்கும். ஆதலின் அதற்குத் தேர் உவமையாகக் கூறப்படும்.

## உடல் தேரில், உயிரின் உலா

ஆன்மா அரசன். உடல் அரண்மனை. புருவ நடு திருவோலக்க மண்டபம். கழுத்து நாடக அரங்கு. இருதயம் மந்திராலோசனை மண்டபம். உந்தி அந்தப்புரம். மூலாதாரம் பள்ளியறைக் கட்டில். இவ்விடங்களில் முறையே நனவு, கனவு, உறக்கம். பேருறக்கம் உயிர்ப் படக்கம் என்னும் ஐந்து அவத்தைகள் நிகழும். இந்நிலையில் முறையே 35, 25. 3, 2, 1 எனக் கருவிகள் தொழிற்படும். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக்கரணங் கள் நான்கும் அமைச்சர்கள். காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்பன கவசம். நிலம், நீர், தீ, கால், வெளி என்னும் ஐம்பெரும் பூதங் களும் தேர். மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் அறிகருவிகள் ஐந்தும் முறையே ஒற் றர், சூதமாகதர், தூதுவர், புரோகிதர், மெய் காப்பாளர். நாக்கு கால், கை, எருவாய், கரு வாய் (வாக்கு பாதம் பாணி பாயு உபத்தம்). என்னும் தொழிற் கருவிகள் ஐந்தும், முறையே குதிரைவீரர், யானைவீரர், தேர்வீரர், காலாட் கள், படைத்தலைவர். அறிகருவிகளுக்கு நுகர் பொருளாகிய சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்பன அகப்பரிவாரம். தொழிற் கருவி களுக்கு நுகர்பொருளாகிய உரை, நடை, கொடை, போக்கு, இன்பம் (வசனம் கமனம் தானம் விசர்க்கம் ஆனந்தம்) என்பன புறப்பரி வாரம். பிராணன் அபானன் உதானன் வியா னன் சமானன் நாகன் கூர்மன் கிருகரன் தேவ தத்தன் தனஞ்சயன் என்னும் பத்துவகை வாயுக்களும் உறுதிச்சுற்றம். இத்தகைய பல பரிவாரங்களுடன் ஆன்மாவானது உடலாகிய தேரை ஊர்ந்து நின்று, உலகமாகிய மாடவீதி களில் உழன்று திரிந்து வருகின்றது.

மேற்கூறிய ஐந்து கோசங்களையும் ஆன்மா வானது வேறாயும் ஒன்றாயும் கலந்து நின்று இயக்குவிக்கும். நடிகன் ஒருவன் பலவகைக் கோலங்களையும் வேடங்களையும் மேற்கொண்டு அவற்றின் வண்ணமாய் நின்று நடிக்கின்ற தன்மைபோல, ஆன்மாவும் இவ்வைந்து கோசங் களின் வயப்பட்டு நின்று இயங்கிநிற்கும். இத்தகையதொரு பெரும் தத்துவ நுட்பத் தையே திருக்கோயில்களில் நடைபெறும் தேர்த்திருவிழாக்கள், எளிய பாமர மக்களும் இனிது உணர்ந்து சொள்ளும் வண்ணம் உருவக முறையில் கட்புலனுக்குக் காட்டி விளக்குகின்றது.

அசித்தரு வியாப கம்போல்
  வியாபகம் அருவம் அன்றாய்,
வசித்திட வரும் வியாபி
  எனும்வழக் குடையன் ஆகி,
நசித்திடா ஞானச் செய்தி
  அநாதியே மறைத்து நிற்கும்
பசுத்துவம் உடையன் ஆகிப்
  பசு என நிற்கும் ஆன்மா

—சிவஞான சித்தியார்

எண்ணரிதாய், நித்தமாய் . இருள்மலத்தின் அழுந்தி,
இருவினையின் தன்மைகளுக்கு ஈடான யாக்கை
அண்ணல் அருளால்நண்ணி, அவையவராய், அதனால்
அலகில்நிகழ் போகங்கள் அருந்து மாற்றால்
புண்ணிய பாவம் புரிந்து, போக்குவர வுடைத்தாய்ப்,
புணரும்இருள் மலபாகம் பொருந் தியக்கால் அருளால்
உள்நிலவும் ஒளியதனால் இருளகற்றிப் பாதம்
உற்றிடும்நற் பசுவருக்கம் எனவுரைப்பர் உணர்ந்தோர்.

—சிவப்பிரகாசம்

(தொடரும்) —ஆசிரியர்

# திருப்பல்லாண்டு

டாக்டர் திரு. ந. சுப்புரெட்டியார், M.A., P.H.D.,
தமிழ்ப் பேராசிரியர், திருவேங்கடவன் பல்கலைக்கழகம், திருப்பதி.

சைவ வைணவ சமய வளர்ப்புப் பண்ணைகளாக வளர்ந்த பெருமை, தில்லைக்கு அருகிலுள்ள திருநாரையூரையும் காட்டு மன்னுர் கோயிலையும் நினைக்கச் செய்கின்றன. திருநாரையூரிற் பொல்லாப்பிள்ளையாருக்குப் பூசனை புரிந்து வந்த ஆதி சைவ குடும்பத்தில் தோன்றிய நம்பியாண்டார் நம்பி என்ற சைவப் பெரியார், தேவாரப் பாவின் கருத்திலும் பண்ணிசையிலும் மனத்தைப் பறிகொடுத்த சோழப் பேரரசன் இராசராசனின் வேண்டுகோட்கிணங்கி மூவர் பாடியருளிய தேவாரப் பாக்களைத் தேடி எடுத்து அவற்றை ஏழு திருமுறைகளாக வகுத்தும், பின்னர் வந்த சிவநெறிச் செல்வர்கள் திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் எட்டாம் திருமுறையாகவும், திருமாளிகைத்தேவர் முதலாக ஒன்பது சைவப் பெரியார்கள் பாடிய திருவிசைப்பாப் பதிகங்களை ஒன்பதாந் திருமுறையாகவும், திருமூலர் திருமந்திரத்தைப் பத்தாம் திருமுறையாகவும், நம்பியாண்டார் நம்பியுட்படப் பன்னிரண்டு பெரியோர்கள் பாடியருளிய நூல்களைத் தொகுத்துப் பதினேராம் திருமுறையாகவும், சேக்கிழார் பெருமானல் பாடப் பெற்ற திருத்தொண்டர் புராணமாகிய பெரிய புராணத்தைப் பன்னிரண்டாந் திருமுறையாகவும் வகுத்தனர் என்பது, சைவப் பெருமக்கள் நன்கு அறிந்த செய்தி.

அங்ஙனமே, குடமூக்குத் திருப்பதி எம்பெருமான் மீது 'ஆராவமுதே' எனத் தொடங்கும் நம்மாழ்வாரின் திருவாய்மொழியில் உள்ளத்தைப் பறிகொடுத்தவரும், காட்டு மன்னுர் திருமால் கோயில் எம்பெருமானுக்குக் கைங்கரியம் புரிந்து வந்த நாதமுனிகள் என்ற திருமாலடியாரின் முயற்சியால் 'நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்' என்னும் தமிழ்மறை தொகுக்கப்பெற்றது என்பதும் வைணவப் பெருமக்கள் நன்கு அறிந்த செய்தியாகும். இந்தப் பெரியார்கள் இருவரும் தொகுத்த தொகுப்பில்தான் 'திருப்பல்லாண்டு' என்ற தலைப்பில் இரண்டு பதிகங்கள் காணப்பெறுகின்றன. இரண்டு பதிகங்களும் அவ்வச்சமயக் கடவுளருக்கு வாழ்த்துக் கூறுவதாக அமைந்துள்ளன.

'நெடுங்காலம் வாழ்க' என வாழ்த்துதற் பொருளிலமைந்த இசைப்பாட்டு 'பல்லாண்டிசை' என வழங்கப்பெறும்.

> 'பாடுவார்பணி வார் பல்லாண்டிசை
> கூறுபத்தர்கள் சித்தத் துள்புக்குத்
> தேடிக் கண்டுகொண்டேன்
> திருவாரூர் அம்மானே'

என்ற நாவுக்கரசர் பெருமானின் தேவாரப் பாவால் அவர்காலத்தும் பல்லாண்டிசைபாடும் வழக்கம் உண்டென்பதை ஒருவாறு அறியலாம். எங்குமாய் எல்லாமாய் எப்பொழுதுமாய் இருக்கும் இறைவனைச் சில்வாழ்நாட் பல்பிணிச் சிற்றுயிர்களாகிய நாம் வாழ்த்துவது நம்முடைய வாழ்க்கை இன்பத்தை மிகுவிப்பதற்காகவே யாகும் என்பது வெளிப்படை. "வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான்" என்ற மணிவாசகப் பெருமானின் திருவுளப் பாங்காலும் இதனை அறியலாம். எல்லாச் சமயத்தினரும் இறைவனை இங்ஙனம் வாழ்த்துதல் பக்திநிலையில் எழும் செயலாகும். பல்லாண்டு கூறும் பக்தர்கள் மனத்தில் எப்பொழுதும் இறைவன் நீங்காது எழுந்தருளியிருப்பான் என்பது எல்லாச் சமயத்தவர்களின் நம்பிக்கையுமாகும். "இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க" என்ற ஆளுடைய அடிகளின் அருளிச் செயலும் இதனை வற்புறுத்துவது காண்க. இனி மேற்குறிப்பிட்ட

ஒரேயாப்பில் அமைந்த இரண்டு திருப் பல்லாண்டுகளையும் நோக்குவோம்.

ஒன்பதாம் திருமுறையின் இறுதிப்பதிகமாக அமைந்திருப்பது சேந்தனுர் அருளிய 'திருப் பல்லாண்டு' ஆகும். இது பதின்மூன்று திருப் பாடல்களைக் கொண்டது. தில்லைமூதூரில் திருக்கோயில் கொண்டு ஆனந்தத்தாண்டவம் புரியும் நடராசப் பெருமான் தம் அடியாராகிய சேந்தனுரின் அன்பின் திறத்தை உலகிற்குக் காட்ட வேண்டுமென்ற அருள் நோக்கத்துடன் மார்கழித் திருவாதிரைத் திருவிழாவில் தாம் திருத்தேர் கொண்டருளும்போது மழை பெய்யுமாறு செய்து தம்முடைய தேரைச் சேற்றிலழுந்துமாறு திருவருள் பாலித்தார். அப்பொழுது 'சேந்தா, தேர் நடக்கப் பல்லாண்டு பாடுக' என்றதொரு ஒலி எல்லோரும் கேட்கும்படி விண்ணில் ஒலித்தது. தேரிழுக்கும் அடியார் குழுவில் ஒருவராக நின்ற சேந்தனுர் "மன்னுகதில்லை! வளர்க நம் பக்தர்கள்!" என்று தொடங்கும் திருப் பல்லாண்டுத் திருப்பதிகத்தைப் பாடிப் போற்றினுர். திருத்தேரும் வடம் பிடிக்காமலே தானே அசைந்து ஓடி நிலையினை அடைந்தது. இவ்வற் புதத்தைக் கண்டார் அனைவரும் சேந்தனுரது பேரன்பின் திறத்தைப் பெரிதும் எண்ணி நெஞ்சம் நெக்குருகினர். இதுவே இப்பதிகம் தோன்றிய வரலாறு.

நாலாயிரத் திவ்வியப்பிரபந்தத்தில் முதலாயிரத்தில் முதற்பதிகமாக அமைந்திருப்பது திருப்பல்லாண்டு. பெரியாழ்வார் அருளிய இது பன்னிரண்டு திருப்பாசுரங்களைக் கொண்ட ஒரு சிறு பிரபந்தமாகும். இதுவும் ஓர் அற்புத நிகழ்ச்சியை அடிப்படையாகத் கொண்டு எழுந்ததாக வரலாறு. அந்த வரலாறு இது. சீவல்லப தேவன் என்னும் பாண்டியன் புலவர்களைத் திரட்டிப் பரதத்துவத்தை அறுதியிட நினைத்தான். இங்ஙனம் அப்பரம்பொருள் இன்னதென உறுதியுடன் அறுதியிட்டுக் கூறுபவர்கட்கு ஒரு பொற்கிழியைச் சன்மானமாக அளிப்பதாகப் பறையறைவித்து, அக் கிழியை அவையின் நடுவில் தொங்கவிட்டான். நாட்டின் நாற்புறங்களினின்றும் புலமை மிக்கோர் வந்து திரண்டனர். சீவில்லிபுத்தூர் எம்பெருமான், விஷ்ணுசித்தர் என்ற பெரியாழ்வார் கனவில் தோன்றி மதுரை சென்று பாண்டியனது அரசவைக்கு ஏகிப் பரமபதநாதனுகிய நாராயணனே பரம்பொருள் என நிலைநிறுத்திப் பொற்கிழியை அறுத்து வருமாறு பணித்தார். அங்ஙனமே கமலைகேள்வனின் கருணையைக் கனக்க நம்பிருந்த பெரியாழ்வாரும் புலவர்கள் நடுவில் நான்மறைகள் இதிகாச புராணங்களிலிருந்து பல சான்றுகளை எடுத்துக் காட்டிச் சீமந்நாராயணனே பரம்பொருள் என்றும், அவனைச் சரணமடைவதே சிறந்த உபாயம் என்றும் நிலைநிறுத்தினுர். அரசவையில் தொங்கிய பொற்கிழியும் தானுகவே ஆழ்வார் முன்னிலையில் தாழ இழிய, அதுவும் எம்பெருமானின் கருணை என உவந்து ஆழ்வார் அதனை அறுத்துக் கொண்டருளினுர்.

இந்த நிகழ்ச்சியை ஒரு பெருவிழாவாகக் கொண்டாட வேண்டுமென்று திருவுளங் கொண்ட அரசன் ஆழ்வாருக்குப் பட்டர்பிரான் என்ற திருநாமம் வழங்கி அவரைப் பட்டத்து யானையின் மீதேற்றி நகரமெங்கும் உலா வரச் செய்தான். மகனுடைய திருவிழாவை மகிழ்ச்சியுடன் காணவரும் தாய்தந்தையர் போல் பரமபதநாதனும் பெரிய பிராட்டியுடன் பெரிய திருவடியின் மீது இவர்ந்த வண்ணம் விண்ணில் தோன்றி ஆழ்வாருக்குக் காட்சி தந்து அருளினுன். ஆழ்வாரும் சிறிதும் செருக்குக் கொள்ளாமல் எம்பெருமானின் அநந்த கல்யாண குணங்களுள் அழகு மென்மை முதலிய திருக் குணங்களுள் தன் மனத்தைப் பறிகொடுத்து பக்தி பரவசராய்த் தம் நிலைமையையும் எம் பெருமானுடைய நிலைமையையும் மறந்து "காலம் நடையாடாத பரமபதத்தில் நிலை பெற்றிருக்கும் இப்பரம புருடன் காலம் நடையாடுகின்ற இந்த உலகில் வந்து நிற்கின்ருனே, பாவிகளின் கண்ணெச்சில் பட்டு இவனுக்கு என்ன தீங்கு வருமோ?" என்று அஞ்சினுர். அந்தத் திவ்விய மங்களத் திருமேனிக்கு எவ்வித மான தீங்கும் நேரிடாதிருக்க வேண்டும் என்று மங்களாசாசனம் செய்கின்றவராய் யானை மணிகளையே தாளமாகக் கொண்டு திருப் பல்லாண்டு என்ற திருப்பதிகத்தைப் பாடியருளினுர்.

இங்ஙனம் சைவ வைணவர்கள் தத்தம் பரம் பொருளாகக் கருதும் இறைவனுடைய கருணையின் அடிப்படையாகத் தோன்றிய இவ்விரண்டு பதிகங்களின் சில ஒற்றுமைகளை ஈண்டுக் காண்

போம். வாழ்க்கையின் திறனாய்வே இலக்கியம் என்றும், வாழ்க்கையினின்றே இலக்கியம் மலர்கின்றது என்றும், திறனாய்வாளர்கள் கூறுவதை நாம் அறிவோம். பிற்காலத் தமிழர்களின் வாழ்வில் சமயம் உயிர்நாடியாக அமைந்திருந்தது என்று நாம் அறியக் கிடப்பதால் அவர்களிடையே தோன்றிய இலக்கியங்களிலும் சமயக் கருத்துக்கள் பிரதி பலிப்பதைக் காணலாம். ஆகவே வைதிக சமயங்களாகிய சைவம் வைணவம் இவற்றின்அடிப் படையில் எழுந்த இந்த இரண்டு திருப்பல்லாண்டுகளிலும் சில பொதுமையான கருத்துக்கள் மிளிர்வதில் வியப்பொன்றும் இல்லை.

(1) சேந்தனார், பொன்னம்பலத்து ஆடல் வல்லானின் பேரருளால் சேற்றில் அழுந்தியிருக்கும் தேர் திருக்கோயிலை வலம்வந்து நிலையினை அடையவேண்டும் என்று கோருகின்றார். இவரது பதிகம் பலனை எதிர்நோக்கிப் பாடியருளிய பாசுரங்களடங்கியது. எம்பெருமான் திருவருளால் தான் பரதத்துவத்தை நிலை நாட்டியதும், தன்னையும் ஒரு பொருளாகக் கருதித் தனக்கும் பெரிய பிராட்டியாருடன் சேவை பாலித்ததுமான பலனை எய்திய பிறகு விஷ்ணுசித்தர் பாடியருளியது அவரது திருப்பதிகம். (2) முன்னதில் எம்பெருமானின் திருவருள் விண்ணில் அசரீரியாக வடிவு கொண்டது. பின்னதில் எம்பெருமானின் திருவருள் அவனுடைய திவ்வியமங்களத் திருமேனியுடன் காட்சி அளித்தது. (3) எங்கும் நீக்கமற நிறைந்து இருக்கும் இறைவன் அடியார்க்கெளியன் என்பது இருசமயத்தார்க்கும் பொதுவான கருத்து.

''அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப்பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே''

என்று பாடி மகிழ்வர் சேந்தனார். அங்ஙனமே விஷ்ணுசித்தரும்,

''அடியோ மோடும் நின்னோடும்
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு''

என்று பாடிக் களிப்பர். இரண்டிலும் அடியோமுக்கு என்ற சொல், தம்மையும் தம்முடனிருக்கும் அடியார்களையும் குறித்து நிற்கின்றது.

(4) அப்பனை நினைத்துப் போற்றும் இரண்டு அடியார்களும் அன்னையையும் சேர்த்தே நினைவுகொள்ளுகின்றனர். 'தடித்தவோர் மகனைத் தந்தை ஈண்டு அடித்தால் தாய் உடன் அணைப்பள்; தாய் அடித்தால் தந்தையணைப்பன்' என்ற உலக நெறி இரண்டிலும் நிழலிடுகின்றது. 'அன்னநடை மடவாள் உமைகோன்' என்ற சொற்றொடரில் சேந்தனார் அன்னையை நினைந்து போற்றுதல் காண்க.

''வடிவாய் நின்வல மார்பினில்
வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு''

என்று பட்டர்பிரானும் புருஷகார பூதையான பெரிய பிராட்டியாரையும் மறவாது போற்றுதலைக் காணலாம்.

(5) இருசமயத்தினரும் தத்தம் முழுமுதற் கடவுளரைப் பிறப்பு இறப்பு அற்ற பெருமான் என்று போற்றினும், ஊர்திரை நீர் வேலி உலகத்திலுள்ள சைவர்கள் மன்னிய நாள்மீன் மதி கனலி என்றிவற்றை முன்னம் படைத்த முதல்வனாகிய சிவபெருமானை ஆதிரையான் ஆதிரையான் என்று கூறி மயங்குவர். அங்ஙனமே, கர்மம் அடியாகப் பிறப்பு அற்றவனும் தன் விருப்பங்காரணமாகப் பல்பிறவிப் பெருமானாகிய நாராயணனைத் திருவோணத்தான் என்று வழங்குவர் வைணவப் பெருமக்கள். முன்னவர் சிவபெருமான் பிறந்த ஆதிரை நட்சத்திரத்தைப் போற்றும் முறையில் திருவாதிரையைத் திருநாளாகவும், பின்னவர் திருமால் பிறந்த திருவோண நட்சத்திரத்தைப் போற்றும் முறையில் திருவோணத்திருவிழாவாகவும் கொண்டாடுகின்றனர். வழிவழியாக வரும் இந்த மரபினை நினைந்தே சேந்தனார் 'அணியுடை ஆதிரை நாள்' என்று மார்கழித் திருவாதிரைத் திருநாளைக் குறிப்பிடுவர். பெரியாழ்வாரும் திருவோணத் திருவிழா என்று நினைவுடன் போற்றியுரைப்பர்.

(6) இரண்டு சமயத்தினரும் தத்தம் கடவுளரின் வீரச்செயல்களையும் பிறவற்றையும் புகழ்ந்தவண்ணம் இறையநுபவம் பெறுவர். சிவபெருமான் சனகாதி முனிவருக்குக் கல்லாலின் கீழிருந்து அறமுரைத்த நிகழ்ச்சியை 'ஆழநிழற் பட்டன்' என்றும், மேருமலையை வில்லாகக் கொண்டு திரிபுரம் எரித்த வரலாற்றைக் குறிப்பிடும் முறையில் 'வில்லாண்ட கனகத்திரள் மேருவிடங்கன்' என்றும், வியாக்கிரபாத முனிவரின் குழந்தையான உபமன்யுவிற்குப் பாற்

கடலை ஈந்தது, திருமாலுக்குச் சக்கரம் ஈந்தது ஆகிய வரலாறுகளைக் குறிப்பிடும் முறையில்,

"பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்(று) அருள்
செய்தவன்"

என்றும், மணலால் ஆன சிவலிங்கத்திற்கு ஆவின் பாலால் திருமஞ்சனம் ஆட்டிய செயலைக் குலைத்த எச்சதத்தன் என்ற தன் தந்தையின் கால்களை வெட்டிய விசாரசருமர் என்பவருக்கு அவரது பக்தியைப் பாராட்டித் தொண்டர்கட் கெல்லாம் அதிபதியாக்கிச் சண்டேசப் பதமும் அளித்த வரலாற்றைப் புலப் படுத்தும் முறையில்,

"தாதையைத் தாளற வீசிய சண்டிக்கிவ்
அண்டத்தொடு முடனே
பூதலத் தோடும் வணங்கப்பொற்
கோயிலும் போனகமும் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும்
நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே"

என்று சேந்தனுர் புகழ்ந்துரைப்பதைக் காண லாம். அங்ஙனமே, இலங்கை பாழாகப் பொருத திருமாலின் வெற்றிச் செயலை நினைந்து, "இராக்கதர்வாழ் இலங்கைபாழாகப் பொருதான்" என்றும், பொதுவாக அரக்கர் களை அழித்த செயலை நினைந்து 'அசுரர் இராக் கதரை, இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த இருடீகேசன்'! என்றும், நரசிம்ம மூர்த்தியாகத் தோன்றி இரணியனை அழித்து அவன் சிறுக்கன் பிரகலாதனுக்கு அருளிய செயலைக் குறிப்பிடும் முறையில்,

"அந்தி யம்போதில் அரியுரு
வாகி அரியை அழித்தவன்"

என்றும், பாணுசூரனின் ஆயிரம் தோள்களையும் அறுத்துத் தள்ளிய செயலைப் பாராட்டும் முறையில்,

"மாயப் பொருபடை வாணனை
ஆயிரமே தாளும் பொழிகுருதி
பாயக் கழற்றிய ஆழிவல்லான்"

என்றும், கம்சனுடைய ஆயுதசாலையுள் புகுந்து வில்லை வளைத்து முறித்த செயலையும், ஐந்து தலைகளையுடைய காளியன் என்னும் நாகத்தின் தலையின் மீது குதித்து அதன் செருக்கையும் வலியையும் அடக்கிய செயலையும் அநுசந்திக் கும் முறையில்,

"திருமதுரையுட்
சிலை குனித்து ஐந்தலைய
பைந்நா கத்தலை பாய்ந்தவன்"

என்றும் பெரியாழ்வார் போற்றிப் புகழ்ந்து மகிழ்ந்துரைப்பதைக் காணலாம்.

(7) இருசமயத்தினரும் இவ்வுலகிலும் வீட்டுலகிலும் அவரவர் இறைவர்கட்கு அடிமை செய்வதையே குறிக்கோளாகக் கொண்டிருப்ப வர்கள். இருசமயத்தைச் சேர்ந்த அடியார்களும் தம்மை ஏழு தலைமுறையாகவும் இருபத்தொரு தலைமுறையாகவும் வழிவழி அடிமை செய்து வருவதாகக் கருதும் மரபு ஒன்று உண்டு. இருவர் பாடல்களிலும் இம்மரபினைக் காண லாம். இதனை,

"மழவிடை யாற்கு வழிவழி
யாளாய் மணஞ்செய் குடிப்பிறந்த
பழஅடி யாரொடுங் கூடி
எம்மானுக்கே பல்லாண்டு கூறுதுமே"

என்றும்,

"எந்தை எந்தாய் சுற்ற(ம்) முற்றும்
எமக்கமுதாய் எம்பிரான் என்றென்று
சிந்தை செய்யுஞ் சிவன்சீர்
அடியார்"

என்றும் சேந்தனுர் பாடியருளினர். அது போலவே,

'ஏழாட்காலும் பழிப்பில்லோம்'
"எந்தை தந்தை தந்தை தந்தைதம்
மூத்தப்பன் ஏழ்படி கால்தொடங்கி
வந்து வழிவழி யாட்செய்கின்றோம்"

என்று பட்டர்பிரானும் கூறுவதைக் காணலாம்.

(8) இரண்டு சமயத்தைச் சேர்ந்த அடியார் களின் தோற்றம் இப்பாடல்களில் காணக்கிடக் கின்றது. சிவனடியார் வெண்ணீறு அணிந்த திருமார்பினை உடையவர்கள் என்பதனை,

"பொடியணி மார்பிலங்கும், புண்ணியர்" என்று சேந்தனர் குறிப்பிடுவர். வைணவ அடியார் மந்திரவிதிப்படி ஓமஞ் செய்த தீயிற் காய்ச்சப்பெற்ற சங்கு சக்கரங்களின் பொறிகளைத் தம்முடைய திருப்புயங்களில் அணிந்து கொண்டிருப்பவர்கள். இதனைப் பெரியாழ்வார்.

"தீயிற் பொலிகின்ற செஞ்சுடர்.
ஆழிதிகழ் திருச்சக்க ரத்தின்
கோயிற் பொறியாலே யொற்றுண்டு
நின்று குடிகுடியாட் செய்கின்றோம்"

என்று குறிப்பிடுவர்.

(9) இரண்டு அடியார்களும் அடியார் கூட்டம் திரளுமாறு கூவியழைத்து இறைவனுக்குப் பல்லாண்டு கூறுமாறு பணிப்பதை அவரவர் தம் பாசுரங்கள் தோறும் காணலாம். சான்றாக'

" ஊரும் உலகுங் கழற
உழறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும்
பரிசு நாம் பல்லாண்டு கூறுதுமே"

என்று சேந்தனரும்,

" நாடும் நகரமும் நன்கறிய
நமோநாரா யணாய வென்று
பாடும் மனமுடைப் பத்தருள்ளீர்
வந்து பல்லாண்டு கூறுமினே "

என்று பெரியாழ்வாரும் பணிப்பதைக் காணலாம். இருவருமே அன்பில்லாதவர்களைத் தவிர்க்கின்றனர். " வஞ்சகர் போய் அகல" "மிண்டும் மனத்தவர் போமின்கள் " என்று சேந்தனரும், " கூழாட்பட்டு நின்றீர்களை எங்கள் குழுவில் புகுதலொட்டோம் " என்று பெரியாழ்வாரும் அத்தகையோரை நீக்குவதனைக் காணலாம்.

(10) சைவப் பெருமக்கள் சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொள்பவர்கள். சேந்தனர் தமது திருப்பாடல்களிலே இவரை 'ஆலநிழற் பட்டன்' 'விடைப்பாகன்' 'உமைமணவாளன்' 'சிற்றம்பலமே இடமாகப் பாலித்து நட்டம் பயில வல்லான்' என்று நமக்கு அடையாளம் காட்டுவர். 'பின்னைப் பிறவி யறுக்கநெறி தந்தபித்தர்' என்றும், " அண்டங் கடந்த பொருள் அளவில்லதோர் ஆனந்த வெள்ளப் பொருள் பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள் என்றே பல்லாண்டு கூறுதுமே" என்றும் போற்றிப் புகழ்வர். பெரியாழ்வாரும் வைணவர் முழுமுதற்கடவுளாகக்கொண்டுள்ள பரமபதநாதனுகிய நாராயணனைப் 'பையுடை நாகப் பகைக் கொடியான்' என்றும், " படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டான் " என்றும், "பரமேட்டி, பரமாத்மன்" என்றும் அடையாளம் காட்டி மகிழ்வர். அன்றியும் 'மல்லாண்ட திண்தோள் மணிவண்ணன்' என்றும், 'இலங்கை பாழாகப் படைபொருதான்' என்றும், 'அந்தியம் போதில் 'அரியுருவாகி அரியை அழித்தவனை' என்றும், 'ஆழிவல்லான்' என்றும், 'பல்வகையாலும் பவித்திரன்' என்றும் போற்றி உரைப்பர்.

## முடிவுரை

இது காறும் கூறியவற்றால் இரண்டு பதிகங்களிலும் உள்ள கருத்தொற்றுமைகளை ஒருவாறு கண்டோம். சைவ வைணவ சமயங்கள் இரண்டும் வைதிகச் சமயங்கள் ஆகும். ஒருதாய் வயிற்றில் தோன்றிய சகோதரர்களைப் போன்றவை. சில குடும்பங்களில் சகோதரர்களிடையே தோன்றும் போட்டி பொறாமை காழ்ப்பு முதலியவற்றைப் போலவே, இவைகளிடையேயும் அவை சில சமயம் தோன்றி மறைகின்றன. பக்தி இயக்கக் காலத்தில் புறச் சமயங்களாகிய பௌத்தம் சமணம் போன்ற சமயங்களை எதிர்ப்பதில், இவை இரண்டும் ஒன்றுபட்டு நின்றுள்ளன. திருமுறைத் திருப்பாடல்களிலும், திவ்வியப்பிரபந்தத் திருப்பாசுரங்களிலும் சில இடங்களில் புறச்சமய கண்டனங்களைக் காணலாம். ஈண்டுக் குறிப்பிட்ட இரு பதிகங்களும் ஆண்டவனை வழுத்துவதில், அவனுக்குப் பல்லாண்டு பாடிப் பரவுவதில், ஒத்த பண்புகள் கொண்டவை என்பதனை நன்கு அறிகின்றோம்.

★



சென்னை அருள்திரு ஏகாம்பரேசுவரர் கோயிலுக்கு,
உள்ளாட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு
திரு. என். வி. நடராசன் அவர்கள் வருகைதருதல்.





சேலம், கோட்டை, அருள்திரு. பெரியமாரியம்மன் கோயிலில்
சத்தாவரணம் வீதி உலாக் காட்சி.



சேலம், கோட்டை, அருள்திரு. பெரிய மாரியம்மன் கோயில் ஆடிப்
பெருவிழாவில், திரு. கே. ஜெயராமன், B.A., M.L.A. அவர்களை,
அறங்காவலர் திரு. பி. கோவிந்தசாமி, M.C. அவர்கள் வரவேற்றல்.

# திருமந்திரம் விளக்கும் சிவநல இயல்

'திருக்குறள்வேள்' 'திருவாசகச் செம்மல்'
திரு. ஜி. வரதராச பிள்ளை அவர்கள், B.A.,
திருவள்ளுவர் நிலையம், திருச்சி-17.

ஞானக் கருவூலமாகிய திருமந்திரத்தை இயற்றியருளியவர் பொன்றாப் புகழ் பெற்ற திருமூலதேவநாயனாராவார். அவர் வாழ்ந்த காலம் இன்னும் முடிவு செய்யப்பெறவில்லை. ஆனால் அவர் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் ஐந்தாம் நூற்றாண்டுக்குள் வாழ்ந்திருக்கலா மென்று அறிஞர் சிலர் கருதுகின்றனர். அவர் சிறந்த சிவயோகியாக எல்லாச் சித்துக்களிலும் வல்லவராக இருந்தவர். அவர் பொதிகையில் வாழும் அகத்திய முனிவரைக்காணும்பொருட்டு கயிலை மலையிலிருந்து புறப்பட்டு நேபாளம், காசி, காஞ்சி, சிதம்பரம் முதலிய புண்ணிய தலங்களைத் தரிசித்துவிட்டுத் திருவாவடுதுறையில் வந்து தங்கினார். அங்குத் தங்கியிருக்கும் நாளில் ஒரு நாள் பசுக்களை மேய்க்கும் மூலன் என்னும் ஆயன், பசுக்களை மேய்க்கும் இடத்திலே இறந்து கிடப்பதையும், அவனது உடலைச் சூழ்ந்து நின்று பசுக்கள் கதறுவதையும் கண்டார். அதனைக் கண்ணுற்ற சிவயோகியார் தம் உடலைப் பாதுகாவலான ஒரு இடத்தில் வைத்துவிட்டுத் தம்முடைய உயிரை யோக சத்தியால் மூலன் உடலிற் பாய்ச்சி ஆயனைப் போல் எழுந்து பசுக்களின் துயரத்தைப் போக்கினார். அப் பசுக்களும் மகிழ்ச்சி அடைந்து தத்தம் இல்லங்கள் போய்ச் சேர்ந்தன. பின்னர் சிவயோகியார் தம் உடல் வைத்த இடத்தில் இல்லாது போகவே, மூலன் உடலின் இருந்து இவ்வுலகம் உய்யச் சிவாகமம் அருள வேண்டும் என்பது இறைவனது திருவுள்ளம் போலும் என உணர்ந்து சிவாகமசாரமாகவுள்ள திருமந்திரத்தை அருளிச் செய்தனர்.

திருமந்திரம் சிவானுபவத்தை விளக்கும் ஒரு தனிப் பெருநூல். இஃது எளிய நடையில் உயர்ந்த பொருளைக் கொண்டதாகவுள்ளது இது மூவாயிரம் பாடல்களை உடையது. அக் காலத்திலுள்ள ஆன்மீக இலக்கியங்களில் கூறப்பெற்ற அத்துணைப் பொருள்களும் பொதுவாக இதனுள் கூறப்பெற்றுள்ளன. சிறப்பாக அன்பு என்பது பற்றிச் சிறந்த கருத்துக்களைத் திருமந்திரம் கூறியிருக்கிறது. அன்பு என்பது இறைவனை அடைவதற்குரிய சாதனமாக இருப்பதோடு அன்பே சாத்தியமாகவும் உள்ளது என்று கூறிய நூலும் இதுவேயாகும். திருமூலர் சிறந்த அனுபூதிமானாதலின் அவரது நூலில் சிவானுபவ உண்மைகளைப் பரக்கக் காணலாம்.

## அன்பே சிவம் :

சிவம் உயிர்கள் மாட்டு அன்புடையது என்பது மட்டுமல்ல; அன்பு மயமானது. எங்கே அன்பு உள்ளதோ அங்கே சிவம் உள்ளது; இனி எங்கே சிவம் உள்ளதோ, அங்கே அன்பும் உள்ளது. அன்பும் சிவமும் பிரிக்க முடியாதவை.

"அன்பு சிவம் இரண் டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே."

—மந் ... 270

அன்பு என்ற சொல்லும் சிவம் என்ற சொல்லும் திருமந்திரத்தில் பல்வேறு பொருள்களில் வந்துள்ளன. அன்பு என்பது பத்தியையும், முத்தியையும், சிவத்தையும் குறிக்கும் ஒரு சொல். அஃதாவது அன்பு என்பது சிவத்தை

திருச்சிராப்பள்ளியில் நிகழ்ந்த 'St Paul's Seminar' இல் படிக்கப் பெற்ற கட்டுரை, டாக்டர் திரு. எம். தவமணி அவர்கள் எழுதியுள்ள "Love of God" என்னும் ஆங்கில நூலின் கருத்துக்களைத் தழுவியது.

யும், முத்தியையும், அருளையும் குறிக்கும். ஆனால் மேலே குறிப்பிடப் பெற்ற பாடலில் அன்பு என்பது சிவம் என்பதைக் குறிப்பதாகக் கொள்வதே பொருத்தமுடையதாகும். இனி, சிவமே அன்பு மயம் என்பது, இன்னும் விளக்க மாகக் கீழ்வரும் பாடலில் உள்ளது.

"அன்பினுள் ளான்புறத் தானுட லாயுளான்
முன்பினுள் ளான்முனி வர்க்கும் பிரானவன்
அன்பினுள் ளாகி அமரும் அரும்பொருள்
அன்பினுள் ளார்க்கே அணைதுணை யாமே."
— மந் —279.

அன்புமயமாகவுள்ள சிவமே அறிவாக, அடக்க மாக, இன்பமாக இருந்து உயிர்கள் உய்தி பெறும் பொருட்டு ஊழிதோறூழி ஐந்தொழில் புரிந்து அருளுகின்றான்.

"அன்பும் அறிவும் அடக்கமு மாய் நிற்கும்
இன்பமும் இன்பக் கலவியு மாய் நிற்கும்
முன்புறு காலமும் ஊழியு மாய் நிற்கும்
அன்புற ஐந்தில் அமர்ந்து நின்றானே."—
மந் — 416

சிவன், இருளில் கிடந்து கண்ணிலாக் குழவி போல் தடுமாறும் ஆன்மாக்களுக்கு உடல் முதலியவை அளித்து அவை வாழ வகை செய்கிறான். அன்புடையார் உள்ளமே அவனுக்குக் கோயிலாம். பசுவின் கன்று தாயை நாடிக் கதறுவதுபோல, அன்புடையவர் சிவனை நாடிக் கதறினால் அவனும் அன்புடையாரை நாடி அருளுவான். இவ்வண்ணம் ஆன்மா சிவனை நாடிச் சிவத்தோடு கலத்தலால் சிவன் ஆன்மாவை இடமாகக் கொண்டு அதனிட முள்ள மலக் குற்றங்களை நீக்கியருளுவான். இம்முறையிலேதான் அன்பர்களின் பக்திவலை யில் அகப்படுவான் என்று திருமந்திரம் கூறு கிறது.

### வீடுபேற்றுக்குரிய சாதனம் :

சிவனை அடைவதற்குரிய சாதனங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்குமாகும். இந் நான்குக்கும் பத்தி இன்றியமையாதது. பத்தியின்றிச் சரியை முதலியவை நிகழா. சிவானுபவத்தைக் கூறவந்த திருமந்திரம் "அன்போடு உருகல்" என்பதைப் பற்றிப் பல இடங்களிலும் வற்புறுத்துகின்றது. அஃதாவது, சிவனது கருணையை நினைந்து கரைந்து உருக வேண்டும் என்பதாம். அம்மாதிரி உருகாது தம் இச்சை வழி நடக்கும் மனம் கல்மனம் என்று கூறு நினைத்திருப்பதே பக்தி பெருகுவதற்குரிய பேசப் பெறும் உலகமுகப்பட்டுச் செல்லும் வன் மனத்தை இறைவன் முகப்பட்டுச் செல்லும் மென்மனமாக்க வேண்டும். அன்பு ஒன்றே மனத்தை இளகச்செய்து இறைவன் பால் செலுத்துவதற்குரிய சிறந்த சாதனமாகும். இளகுதலாவது, சிவனோடு ஒன்றுபடுதல். அப்போது சீவன் சிவனது அருள் வெள்ளத்தில் ஆழ்ந்து திளைத்திருக்கும்.

இம்மாதிரி இடையறாத பத்தியினால்தான் இறைவனது உண்மையை உணரமுடியும் என்று திருமந்திரம் கூறுகிறது. ஆதலால் பத்தியுடையவரே சிவனை உணர முடியும் என்பது புலனாகிறது. அதுவும் அவனருளால் தான், அவ்வுண்மையும் விளங்கும்.

"பத்தர் தம் பத்தியின் பாற்படில் அல்லது
முத்தியினை யார் சொல்ல முந்துகின்றாரே."

இனி,

"ஆர்வம் உடையவர் காண்பர் அரன்தன்னை
ஈரம் உடையவர் காண்பர் இணையடி
பாரம் உடையவர் காண்பார் பவந்தன்னை
கோர நெறிகொடு கொங்குபுக் காரே."
—மந்...273

என்று அன்பின் பெருமையை விளக்குகிறார். தீவிரமாகச் சிவனிடம் அன்பு செலுத்துபவர் அவனைக் காணலாம். அவ்வாறு அன்பு செலுத்துவதால் உள்ளத்தூய்மை பெற்றுப் பிறவிக் கடலைக் கடந்து சிவனது திருவடியை அடையமுடியும் என்பது திருமூலரது ஆணை மொழியாகும்.

சிவனை இடைவிடாது மனத்தினால் சிந்தித்து வாக்கினால் பேசி அவனது அருளை நாடுவதே அன்பு மீதூரும் பத்தரது இயல்பாம்.

"கருத்துறு செம்பொன்செய் காய்கதிர்ச்
சோதி
இருத்தியும் வைத்தும் இறைவ
என்றேத்தியும்
அருத்தியுள் ஈசனை ஆரருள் வேண்டில்
விருத்தி கொடுத்திடும் விண்ணவர்
கோனே."—மந்...277

இறைவன் ஆன்மாக்களுக்கு அருளும் நன்மை வழியாகும். இறைவனை எண்ணுதார்க்கு அவன் சேயனாவான். பக்தியும் ஞானமும் வெவ்வேறு அன்று; இரண்டும் ஒன்றுக்கொன்று துணையே யாம். ஞானத்தினால்தான் பக்தி உண்டாகும். அம்மாதிரி ஞானத்தினால் விளைந்த பக்தி யில் நந்தியாகிய சிவனைப் பதித்து வைப்பார்க்கு இருவினையால் வரும் மும்மலப் பாசமும்,

அவற்றால் வினையும் தீமையும், தீமையில் செலுத்தும் ஆன்மபோதமும் இரா.

"மலமில்லை மாசில்லை மானுபி மானங்கள்
குலமில்லை கொள்ளுங் குணங்களு மில்லை
நலமில்லை நந்தியை ஞானத்தி னாலே
பலமன்னி யன்பிற் பதித்துவைப் போர்க்கே"
—மந்...2947

இறைவனை உணர்வதே தம்மை உணர்தலாகும். தம்மை உணர்பவரே தம்மோடு தொடர்புடைய இறைவனை உணர்பவராவார். இறைவனை உணர்வதற்குரிய வழி இறைபணி செய்தலாம். இறைபணியால் தம் செயலற்றுத் தற்போதம் (ஆன்ம அறிவு) கெடுகிறது. தம் நினைவற்றுச் சிவனோடு பொருந்தியிருத்தலே உண்மையான அனுபூதி நிலையாம்.

முக்தி நிலை :

பத்தியின் முடிந்த நிலை சீவன் சிவனை உணர்ந்து அவனோடு ஒன்றுதலாகும். இந் நிலையைப்பற்றித்திருமூலர் அழகாகக்கூறுகிறார். அன்பு மேலிட்ட மகிழ்ச்சியினால் அன்புடையோர் மனமுருகி அழுவர்; அவன் செய்த உதவியை நினைந்து கதறுவர்; இரவும் பகலும் கதறுவதால் என்பும் கரையுமாறு அவனது புகழை ஏத்துவர். இவை மட்டும் அல்ல. பக்தன் இறைவனைத் தின்பன், கடிப்பன், திருத்துவன் என்னும்போது, சிவானுபவ நிலையை உலகவர் பொருட்டு எத்துணை விளக்கமாகக் கூறுகிறார் திருமூலர் என்பது புலனாகும்.

"அன்புள் உருகி அழுவன் அரற்றுவன்
என்பும் உருவ இராப்பகல் ஏத்துவகன்
என்பொன் மணியை இறைவனை ஈசனைத்
தின்பன் கடிப்பன் திருத்துவன் தானே."
—மந்...2980

சிவானுபவம் (mystical state) இறைவனோடு கலந்திருக்கும் நிலையில் உண்டாவதாகும். "எனது மேலான அன்பு இறைவனோடு இடையறாது பிணைந்து கிடக்கிறது." "இறைவன் என் அன்பிலே இடம் கொண்டுள்ளான்." "இறைவனோடு கலந்திருக்கும் அந்நிலையில் என்னுடைய மலங்களையெல்லாம் அகற்றி விட்டான்" என்ற கூற்றுக்கள் எல்லாம் சிவானுபவம் வரும் வழியையும் அதன் பயனையும் தெளிவுபடுத்துவனவாகும். அன்பரது மனம் சிவத்திடம் பதிந்தபோது சிவன் அன்பரை இடமாகக்கொண்டு எழுந்தருளுகிறான். அந்நிலையில் அன்பர் செயல் எல்லாம் சிவன் செயலாகிறது என்ற உண்மை விளங்கும்.

"சிந்தைய தென்னச் சிவனென்ன வேறில்லை
சிந்தையி னுள்ளே சிவனும் வெளிப்படும்
சிந்தை தெளியத் தெளியவல் லார்கட்குச்
சிந்தையி னுள்ளே சிவனிருந் தானே."

சித்தம் சிவமாகிய அன்பர் இறைவனோடு இரண்டறக் கலந்து விளங்குவர். அன்பைப் பற்றித் திருமூலர் கூறும் தெளிவான விளக்கம் கீழ்வரும் பாடலில் நன்கு புலனாகிறது.

"அருளில் பிறந்திட்டு அருளில் வளர்ந்திட்
டருளில் அழுந்திளைப் பாறி மறைந்திட்
டருளான ஆனந்தத் தாரமு தூட்டி
அருளால் என்நந்தி யகம்புகுந் தானே."
—மந்...1800.



★

சிறுவரம்பேடு அருள்திரு. பாலசுப்பிரமணிய சுவாமி கோயில் தோற்றம்

★

# திருவாசகத் தேன்

திருவாசகமணி திரு. கே. எம். பாலசுப்பிரமணியம், B.A., B.L.,

தில்லைநகர், திருச்சி—18.

முன்னுரை :

தமிழகத்தில் சைவ நன்மக்களால் தெய்வ நிலையில் வைத்துப் போற்றப்பெறும் சமய குரவர் நால்வருள், திருவாதவூரடிகள் ஒருவர். இவருக்கு மாணிக்கவாசகர், மணிவாசகர், அருள்வாசகர், பெருந்துறைப்பிள்ளை, ஆளுடைய அடிகள், அழுதடி அடைந்த அன்பர், வாதவூரிறை, வாதவூர்மணி, வாதவூர் நாயகன் முதலிய வேறு பல பெயர்களும் வழங்குகின்றன.

மணிவாசகர் அருளிய திருவாசகம் என்னும் தெய்வத் தமிழ்மறை, தமிழ் மொழியில் சிறந்த இலக்கியச் சுடர்மணியாகவும், ஞானக் கருவூலமாகவும் திகழ்கின்றது. இவ் அருள்நூல், திருக்கோவையாருடன் சேர்ந்து, சைவத் திருமுறைகள் பன்னிரண்டில் எட்டாவது திருமுறையாக அமைந்துள்ளது. மணிவாசகர் வாழ்ந்தருளிய காலம்கி. பி. 9-ஆம் நூற்றுண்டு என்பது இன்று இறுதியாக நிருபிக்கப்பட்டுள்ளது.

இந்நூலுக்கும், மணிவாசகம், மதுரவாசகம், வாசகமாலை, ஞானப்பனுவல், மணிவார்த்தை முதலிய வேறுபல திருநாமங்களும் வழங்கி வருகின்றன. வாசகத்தேன் என்னும் மற்றொரு சிறப்புப் பெயரையும் சிவப்பிரகாச சுவாமிகளும், முதலிற் பாடிய வெண்பாவின் ஆசிரியரும் திருவாசகத்துக்கு வழங்கியுள்ளனர். இப்பெயர் தான் திருவாசகம் என்ற நூலுக்கு மிகவும் பொருந்திய தொன்றாகும். நாம் குடித்துப் பழகும் செந்தேன், நமது உடலுக்கு வலிவூட்டி நம் குரலின் இனிமையைப் பெருக்கி, வயிற்றின் மலம் கழித்து, நம் பித்தம் தணிவித்து, நம் உடல் நோய்கள் அனைத்தையும் ஒழிக்கும் ஆற்றல் படைத்தது. அதேபோல, நாம் படித்துப் பருகும் திருவாசகத்தேன் ஆனது, நமது ஆன்மாவிற்கு வலிவூட்டி, நம் ஆன்மத் தொனிக்கு இனிமை ஏற்றி, அதில் மிகுதியும் பயின்றோர்க்குள்ள மும்மலங்களையும் கழுவி, மாயேயமாகிய பித்தத்தையும் தணிவித்து, நம் உயிரைப் பற்றிய பிறவி நோயையும் தீர்த்தொழிக்கும் ஆற்றல் பெற்றதாகும்.

தேசகத்தில் இனிக்கின்ற தெள்ளமுதாகிய மாணிக்கவாசகனார் திருவாய் மலர்ந்துள்ள மாமறையாகிய திருவாசகம் என்னும் நூலே ஓர் இன்பத்தேன் ஊற்றாக இருப்பதுடன், அந்நூலால் புகழ்ந்து பாடப்பெற்றுள்ள சிவபெருமானும் கூடத் தேனாக மிளிர்ந்து தித்திக்கும் பான்மையர் ஆவர் என்பதும் கண்கூடு. இனித் திருவாசகம் என்னும் பெயரின் பொருட் சிறப்பைச் சிறிது காண்போம். நிறை புலமைச் சான்றோராகிய மறைமலையடிகளார் பின் வருமாறு எழுதியுள்ளார்.

"திருவாசகம் என்பது 'பிறி தொன்றற் கில்லாத அழகினையுடைய வாசகம்' என்னும் பொருட்டாம். 'திருவாசகம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை; இதனை ஆகுபெயர் என்பாருமுளர். ஆயினும், உண்மையின் நோக்குவார்க்கு இஃது அன்மொழித் தொகையே யாவதல்லது' ஆகுபெயர் ஆகாமை உணர்க' என்று ஆசிரியர் சிவஞான யோகிகள் கூறுதலின் ஈண்டுக் கூறியதே பொருத்தமாம் என்க."

"தன்னைக் கற்பார் உள்ளத்தை உருகச் செய்து அவரைப் பேரின்பப் பெருக்கில் ஆழ்த்துதற்குப் பிறிது எந்நூலுக்கும் இல்லாத அழகினை இத் திருவாசகநூல் உடைமையால், இதனினும் மேலான அழகினைப் பெற்ற வேறொரு நூல் இல்லை என்பது தேற்றமாம்

அன்பு பொதிந்த இதன் செய்யுட்களை ஓதுந் தோறும் நினைக்குந்தோறும், நெஞ்சம் நெக் குருகிக் கண்ணீர் பெருக, நாவுரை குழற, மெய்ம்மயிர் சிலிர்ப்பப், பேரின்ப வெள்ளம் கிளர்ந்தெழுதல் யாவர்மாட்டும் காணப் படுதலானும், தொடர்புபட்டு நிகழும் இத்தகைய பேரின்ப நிகழ்ச்சி மற்றைய நூல்களை ஓதுவார், நினைப்பாரிடத்துக் காணப்படாமையானும், இத் திருவாசகம் ஒன்றே ஏனை நூல்களுக்கில்லாத அழகினை உடையது என்பது தெளியப்படும்''. இது மறைமலையடிகள் தம் கூற்றாகும்.

மற்றுமோர் உரையாசிரியர் கூறுகின்றார்: ''எந்நாட்டவராலும், எக்காலத்தவராலும் உள்ளம் உகந்து ஏற்றுக் கொள்ளுமாறு, என்றும் நிலைத்த பண்புகளையோ, உண்மை களையோ, நெறிகளையோ சிந்தைக்கும் செவிக் கும் இனிய செஞ்சொற்களால் உரைப்பதே சிறந்த இலக்கியமென அறிஞர் ஓர் இலக்கணம் வகுப்பாரானால், திருவாசகம் உலக இலக்கியங் களுள் தலைசிறந்தது ஒன்றாகும் என நாம் உறுதியாகக் கொள்ளலாம். திருவாசகத்தில் பேசப்பெறும் செய்தியானது காலம், இடம் என்னும் பாகுபாடுகளைக் கடந்து, சிந்தை செல்லாச் சேணகத்ததாய், முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருளாய்ப் பின்னைப் புதுமைக்கும் பின்னைப் புதுமைய தாய், நின்றதொரு பேரருட்பிழம்பைப் பற்றிய தும், அவ் அருள்ஒளியை நாடிச் சென்று கலந்த ஒரு சிற்றுயிர்க்கு உற்ற பலதிறப்பட்ட நிகழ்ச்சிகளைப் பற்றியதும் ஆகும். சிந்தை சென்று அணுகிலாதவைகளைப் பண் இனிமை யும் பொருட் செறிவும் மிக்க சொற்களால் அமைத்துக் கற்பவர் பயிற்சிக்கும், பண்புக்கும் முதிர்ச்சிக்கும் ஏற்பப் பொருள் தருமாறு மக்கள் உலகத்துக்கு அளித்த வள்ளன்மை திரு வாசகத்துக்கே உரியதாகும். வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவராகிய மணி வாசகப் பெருமான், சிவானந்த வெள்ளத்தில் திளைத்து அருளிய இம் முழுமுதல் நூலாகிய திருவாசகம், உலக இலக்கியங்களில் ஒரு தனி இடம் வகிப்பதாகும். இந்நூல் மொழிக்கு மொழி தேன் ஒழுகும் தன்மையது. இது பக்திச் சுவை நனிசொட்டச் சொட்ட நம் உள்ளத்தை உருக்கும் பான்மையது. பல முகங்களும், பட்டைகளும் தீர்ந்த ஒரு வைரக் குன்றம், எவ்வாறு கதிர் ஒளிக்கு ஏற்பவும், காண்போர் நிற்கும் கோணத்திற்கேற்பவும் தன் ஒளியின் பகுதிகளைக் காட்டுமோ, அவ்வாறு பொருள் காட்டி உணர்வூட்டுவது இத்தெய்வ நூல். ஒவ்வொரு சொல்லும் நம்மை உணர்வு தந்து உய்யக்கொள்ளத் தக்கது. சித்தம் சிவமான செம்மலின் செஞ்சொற்றொகுதியே திரு வாசகம்''.

''நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகன்'', சிவபிரான் என்கிறார் வாதவூரடிகள். 'அவனருளாலே அவன்றாள் வணங்கிச் சிவனருள் செறிந்த தீந்தமிழ் மொழியால் திரு வாசகம் பாடிய வாதவூர் வள்ளல், தாம் ''சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார், செல்வர் சிவபுரத்தினுள்ளார் சிவனடிக்கீழ்ப் பல்லோரும் ஏத்தப் பணிந்து'' என்று அறுதியிட்டுக் கூறுகின்றார். அவர் சொல்லிய பாட்டாகிய திருவாசகத்தின் பொருள் அம்பலத்துள் நட்டம் பயின்றாடும் நாதனே தான் என்று, மணிவாசகப் பெருமானே அன்று தில்லை மூவாயிரவர்க்கு அறிவுறுத்தியுள்ளார். அதனால்தான் சிவப் பிரகாச சுவாமிகள்,

> ''பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ளம்
> மூழ்கிய புனிதன் மொழிந்தவா சகமே
> வாசகம்; அதற்கு வாச்சியம்
> தூசகல் அல்குல் வேய்த்
> தோளிடத்தவனே ''

என்று பாடுகின்றார். எனவே திருவாசகமும் சிவபெருமானும் சொல்லும் பொருளும் போல் ஒன்றித்து நிற்கின்றதைக் காண்கின்றோம். அதே போலத் திருவாசகத்துக்கும் நடராசப் பெருமானுக்கும் பல பொருத்தங்கள் இருப்பதை யும் நாம் காண்கின்றோம்.

**பிரணவம்:**

நடராசப் பெருமானே ஓங்காரமாகிய பிரணவ வடிவினர். அவர், தம் கரத்திலுள்ள துடியை முதன்முதலாக ஒலித்தார். அவ் ஆதி ஒலி யாகிய 'ஓம்' எனும் பிரணவம் கீழே விழ்வதற் குள் 51 எழுத்துக்களாகப் பிரிந்து பரிணமித் தொலித்தது. அந்த 51 எழுத்துக்கள்தாம் வன்னம் எனப்பட்டன. அந்த வன்னமும், பதம், மந்திரம் என்று விரியலாயிற்று. ஆகை யால்: மந்திரம் தொகுதிலை, 51 அக்கரங்கள்

தனிநிலை. அதேபோலத் திருவாசகம் ஆகிய மந்திரம் தொகுநிலை; அதன் 51 பதிகங்கள் தனிநிலை. அதாவது ஓங்காரத்தில் இருந்து மந்திரங்கள் அனைத்தும் பிறப்பதைப்போல, ஓங்காரத்திலிருந்தே இந்தத் தமிழ் மந்திர மாகிய திருவாசகமும் பிறந்துள்ளது. இதன் காரணமாக ஏற்பட்டுள்ள இந்நூலின் மந்திர சக்தியை அனுபவித்துச் சிவானுபவச் சிகரத் தின் வதிந்த இராமலிங்க வள்ளலார்,

"வருமொழி செய் மாணிக்க
வாசக நின் வாசகத்தில்
ஒருமொழியே என்னையும் என்
உடையனையும் ஒன்றுவித்துத்
தருமொழியா மென்னில் இனிச்
சாதகமேன் சஞ்சலமேன்,
குரு மொழியை விரும்பி அயல்
கூடுவதேன் கூறுதியே"

என்று வாதவூரடிகளையே நோக்கி வினவு கின்றார். அதேபோல, "மதுரவாசகம் ஓதின் முத்தி உறுபயன்" என்கிறார் சிவப்பிரகாச சுவாமிகளும்.

"ஓம் எனும் இச்சொல்லே பிரம்மம்" என்கிறது ஓர் உபநிடதம். "ஓம்காரம் தான் வேதங்களின் லட்சியம்" என்கிறது கதோப நிஷத். எனவே இந்தப் பிரணவம்தான் நம் சமயத்தின் ஜீவநாடி, நம் கடவுளரின் கருவூலம். இத்தகைய ஓம் என்னும் பிரணவமானது, வாக்கியமாகிய திருவாசகத்திலும் அதன் வாச்சியமாகிய நடராசப்பெருமானிடத்தும் முறையே எவ்வாறு அமைந்துள்ளது என்ற உண்மையைச் சற்றுக் காண்போம்.

திருவாசகத்தின் முதல் அதிகாரமாகிய சிவ புராணத்தில், "உய்ய என் உள்ளத்துள் ஓங் காரமாய் நின்ற மெய்யா" என்ற அடியிலும், அதன் 397-வது பாடலில் "என்னை ஓர் வார்த்தையுட் படுத்துப் பற்றினாய்" என்ற அடியிலும்; அதன் 51-வது அதிகாரத்தில்

"உய்யுநெறி காட்டு வித்திட்டு
ஓங்காரத்துட் பொருளை
ஐயன் எனக் கருளியவாறு
ஆர்பெறுவார் அச்சோவே"

என்ற அடிகளிலும், முறையே முதல், இடை, கடை ஆகிய மூன்று இடங்களிலும் ஓம்கார மாகிய பிரணவம் ஆனது ஒளிவிட்டுச் சிறந்த தோர் ஒப்பற்ற மணிபோல் மிளிர்வதைக் காண்கின்றோம். அதேபோல, நடராசப் பெரு மானின் திருவுருவின் பின்னணியாகத் திகழும் திருவாசியின் வடிவம் முழுவதுமே பிரணவ மயம் எனப்படும். இதைத்தான், "ஓங்காரமே நல்திருவாசி" என்கிறது. "உண்மை விளக்கம்" என்ற சைவ சித்தாந்த சாத்திரம்.

## ஐந்தெழுத்து :

இனிப் பஞ்சாக்கரம் ஆகிய பரமமந்திரமும் இவ்வாக்கியத்திலும், அதன் வாச்சியத்திலும் எவ்வாறு முறையே நிலவுகின்றது என்பதைக் காண்போம். ஐந்தெழுத்து ஆனது, தூலம் சூக்குமம் என இருவகைப்படும். திருவாசகத் தின் முதற் சொல்லே "நமச்சிவாய" என்னும் தூல பஞ்சாக்கரம்தான். பின்னர்த் திருச்சதகத் தின் 62-வது பாடலில் 'நமசிவாய' என்பது நான்கு முறை வருகின்றது. கடைசியாகச் செத்திலாப்பத்தில் (பாடல் 492), "நமச்சிவாய என்றுன்னடி பணியாப் பேயனாகிலும் பெருநெறி காட்டாய்" என்ற அடியிலும் பஞ்சாக்கரம் வந்துள்ளது. அதேபோல, நடராசப் பெரு மானின் திருவுருவ அமைப்பிலும் நமசிவாய என்ற தூல பஞ்சாக்கரம் அவரது பாதாதி கேசத்தில் அமைந்துள்ள நுண்ணிய தத்து வத்தை உண்மை விளக்கம் விளக்குகின்றது. "ஓங்காரமே நல் திருவாசி உற்றதனில் நீங்கா எழுத்தே நிறைசுடராம்". நீங்கா எழுத்து என்பது ஐந்தெழுத்தாகும்.

சிவாயநம எனும் சூக்கும பஞ்சாக்கரம் ஆனது திருவாசகத்தின் 553-வது பாடலில் "நானேயோ தவம் செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்" என்ற அடியில் காணப்படு கின்றது. இந்த சூக்கும பஞ்சாக்கரம் நடராசப் பெருமானின் திருமேனியிலும் கேசாதிபாத மாகக் காட்சியளிக்கும் தத்துவத்தை உண்மை விளக்கம் குறிப்பிடுகின்றது.

## ஐந்தொழில்கள் :

அனைத்தாற்றலும் உடைய சிவபெருமான் படைத்தல், காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்தொழில்களைச் செய்து வரும் மாபெரும் கடவுள். அத்தகைய ஐந் தொழில்களைக் கூடத் திருவாசகத்திலும்

Q2m24, N59TIC N73.1

நடராசத் திருமேனியிலும் முறையே காணப்படு கின்றது. "போற்றி யருளுக நின் ஆதியாம் பாதமலர்; போற்றி யருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்; போற்றி எல்லா வுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்; போற்றி எல்லா வுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்; போற்றி எல்லாவுயிர்க்கும் ஈறும் இணையடிகள்; போற்றி மால் நான்முகனும் காணாத புண்டரிகம்; போற்றியாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்; போற்றி யாம் மார்கழி நீராடேலோர் எம்பாவாய்". இது திருவாசகத்தில் காணப்படும் ஐந்தொழில்கள்.

## திருவாசகநூற் சிறப்பு :

இனித் திருவாசக நூலின் தனிச் சிறப்புக்கள் சிலவற்றைக் காண்போம். வேதம் ஓதப் பெறுவதைச் செவிமடுப்போர்க்கு மெய்ப்பாடுகள் எவையும் நிகழுவதில்லை. ஆனால் திருவாசகப் பாடலைச் செவிமடுப்போர்க்குப் பல மெய்ப்பாடுகள் நிகழ்வது கண்கூடு. ஆதலால் வேதத்திலும் திருவாசகம் சிறந்தது என்கிறது, சிவப்பிரகாச சுவாமிகளின் நால்வர் நான் மணிமாலை.

"விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை மக்கட்
காரணன் உரைஎனும் ஆரண மொழியோ?
ஆதிசீர் பரவும் வாதவூர் அண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ?
யாதோ சிறந்தது என்குவீர் ஆயின்
வேதம் ஓதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சம்நெக் குருகி நிற்பவர்க் காண்கிலேம்
திருவாசகம் இங்கு ஒருகால் ஓதின்
கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப்பு எய்தி
அன்பர் ஆகுநர் அன்றி,
மன்பதை யுலகில் மற்றையர் இலரே"

"மதுர வாசகம் ஓதின்முத்தி உறுபயன்;
வேதம் ஓதின் மெய்ப்பயன் அறமே"

என்பதும், வேதத்திற்கும் திருவாசகத்திற்கும் உள்ளபிறிதொரு வேறுபாடு என்கிறார் அதே நூலின் ஆசிரியர்.

## வாட்டம் தவிர்த்தல் :

ஆயிரம் ஆயிரம் மக்கட்கு ஆன்ம வேட்கையைத் தணிவித்து, அவர்தம் வேகம் கெடுத்தாண்டு, இறைவனிடம் மோகம் கொடுத்தாளும் மெய்ஞ்ஞான மேதையாகிய இராமலிங்கப் பெருமானே, தம் உள்ளத்தில் ஒரோவழி தலைகாட்டும் வாட்டத்தை நீக்கி வளம் அருளுமாறு திருவாசகம் பாடிய மணிவாசகரிடம் பிரார்த்தித்து வேண்டுகின்றார் என்றால், இத் திருவாசகத்தின் அருளாற்றலுக்கு வேறென்ன பிற அத்தாட்சி வேண்டும்.

"தேடுகின்ற ஆனந்த
சிற்சபையில் சின்மயமாய்
ஆடுகின்ற சேவடிக்கீழ்
ஆடுகின்ற ஆரமுதே
நாடுகின்ற வாதவூர்
நாயகனே நாயடியேன்
வாடுகின்ற வாட்டமெலாம்
வந்தொருகால் மாற்றுதியே"

148714

## அனைத்துயிரையும் ஈர்க்கும் :

'திருவாசகத்துக்கு உருகாதார் ஒருவாசகத்துக்கும் உருகார்' என்றதொரு பழமொழியானது, ஆறறிவு படைத்த மானிடருக்கேயன்றி, ஏனைய உயிர்த்தொகுதிகளுக்கும் கூடப் பொருந்துவதொன்றாகும். இத்தகையதோர் இணையற்ற சிறப்பு உலகிலேயே வேறெந்த நூலுக்கும் இல்லை என்பது முக்காலும் உறுதி. இவ்வுண்மையை வடலூர் வள்ளலார் அனுபவித்து அறிந்துள்ளார். அவர், தம் சீடர்களுக்குத் திருவாசகப் பாடம் நடத்திக் கொண்டிருந்த பல நாட்களிலும் செம்மறி ஆட்டுக் குட்டியொன்று தானும் நாள்தோறும் தவறாமல் அவர்பால் சென்று அமர்ந்து திருவாசகத்தைச் செவிமடுத்துச் செல்லுமாம். என் அநுபவத்திலும் இதுபோன்ற சில நிகழ்ச்சிகள் நடந்துள்ளன. சுமார் பதினைந்து ஆண்டுகட்கு முன்பு ஒருநாள், இராமநாதபுரம் அரசரின் அரண்மனையில் உள்ள இராமலிங்க விலாசத்தின் முன், திறந்தவெளியில் நடைபெற்ற சமயக் கூட்டம் ஒன்றில், யான் திருவாசகச் சொற்பொழிவு செய்து கொண்டிருந்தபோது, தெருவில் நடந்துபோன உரோமம் அடர்ந்திருந்த இருபெரும் செம்மறி ஆடுகள் திடீரென்று என் கூட்டத்தின் இடைவெளியே நுழைந்துவந்து எனக்கு முன் தம் இருகால்களையும் நீட்டிப் படுத்துக்கொண்டு என்னையே கண்கொட்டாமல் பார்த்த வண்ணமாக இருந்தன. இறுதியில் என் சொற்பொழிவு முடிந்தவுடன், அவை

இரண்டும் அலட்சியமாக எழுந்து நின்று தத்தம் உடம்பை உதறிக்கொண்டு வெளியேறிப் போய்விட்டன. கூட்டத்தினரின் ஆச்சர்யத்துக்கு அளவே இல்லை. இதே போல, யான் திருவாசகம் பேசிய ஏனைய சில கூட்டங்களிலும் பாம்பு, பன்றி, நாய், பூனை முதலிய சீவராசிகள் முறையே வந்து திருவாசகப் பாடலைச் சுவைத்துச் சென்றுள்ளன. ஆதலால்,

"வாட்டமிலா மாணிக்க
வாசகநின் வாசகத்தைக்
கேட்டபொழு தங்கிருந்த
கீழ்ப்பறவைச் சாதிகளும்,
வேட்டமுறும் பொல்லா
விலங்குகளும் மெய்ஞ்ஞான
நாட்டமுறும் என்னில் இங்கு
நான் அடைதல் வியப்பன்றே"

என்று அருட்பிரகாச வள்ளலார் பாடியுள்ள பாடல், எவ்வளவு அருத்தமும் பொருத்தமும் செறிந்துள்ளது என்பது நமக்குப் புலன் ஆகின்றதல்லவா ?

## எல்லோருக்கும் பொது :

திருவாசகம் சாதி நிறம் இனம் மொழி பால் முதலிய வேறுபாடுகள் இன்றி எல்லா மக்களாலும் பாடத் தகுதியுடையதொரு சமயப் பொது நூல். "தேன் தேக் கெறியும் செய்ய மாணிக்கவாசகன் புகன்ற மதுரவாசகம் யாவரும் ஓதும் இயற்கைத் தாகலின் பொற்காலம் நிகர்க்கும்". அதோடு தேவாரத்தை மார்கழி மாதத்தில் பாடக்கூடாது என்றதொரு தடை அதற்கு இருப்பதைப்போல, திருவாசகத்திற்கு யாதொரு காலத் தடைகளும் கிடையா. பிறப்பிலும் இறப்பிலும் திருமணச் சிறப்பிலும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எல்லா மாதம் நாள் முதலிய வற்றிலும் திருவாசகத்தை யார் வேண்டுமானாலும் யாதொரு தடையும், நிபந்தனையுமின்றிப் பாடலாம். இறைவனிடம் சேர்க்கும்.

திருவாசகப் பாடல்களில் யாதானும் ஒன்றை அல்லது இயன்றவற்றைத் தம் மரணத் தருவாயில் ஒருவர் தாமாகவே பாடினாலும், அல்லது பிறர் பாடத் தாம் கேட்டாலும், அவருக்கு இனிப் பிறவி என்பதே இல்லை, முத்தி நிச்சயம் என்பது சைவ உலகத்தின் அழுத்தமானதொரு நம்பிக்கையும் கொள்கையும் ஆகும். அவ்வாறு, திருவாசகப்பாடல் பாடக் கேட்டுச் சிவபெருமானிடம் அன்புமீதூரத் தம் சித்தத்தைச் சிவன்பால் வைத்துச் சிவனடி சார்ந்த சிவநேயர்கள் பலருள் யாழ்ப்பாணத்துச் சைவச் சிங்கம் ஆறுமுக நாவலர் பெருமானும், மகாமகோபாத்யாய உ. வே. சுவாமிநாத ஐயர் அவர்களும் முக்கியமானவர்கள்.

"அல்லிக் கமலத் தயனும் மாலும்
அல்லாதவரும் அமரர் கோனும்
சொல்லிப் பரவும் நாமத்தானைச்
சொல்லும் பொருளும் இறந்த சுடரை
நெல்லிக் கனியைத் தேனைப் பாலை
நிறையின்னமுதை அமுதின் சுவையைப்
புல்லிப் புணர்வ தென்று கொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே"

என்ற திருவாசகப் பாடலைச் செவிமடுத்தவாறே அருட்டிரு யாழ்ப்பாண நல்லூர் ஆறுமுக நாவலர் அவர்கள் சிவனடி நீழலிற் சேர்ந்தார். அதேபோல,

"பிணக்கிலாத பெருந்துறைப் பெருமான்
உன் நாமங்கள் பேசுவார்க்கு
இணக்கிலாத தோர் இன்பமே;
வருந்துன்பமே துடைத் தெம்பிரான்
உணக்கிலாததோர் வித்து மேல்
விளையாமல் என்வினை ஒத்தபின்
கணக்கிலாத் திருக்கோலம் நீ வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே"

என்ற திருவாசகப் பாடலைச் செவிகளாற் கேட்டு, இறைவனை மனத்தாற் சிந்தித்தவாறே சிவபிரான் திருவடிகளைச் சார்ந்தார் பேரறிஞர் உ, வே. சுவாமிநாத ஐயர் அவர்கள்.

## சிவன் கரத்தாலேயே தீட்டப்பெற்றது :

உலக இலக்கியங்களிலேயே வேறெந்த ஒரு நூலுக்கும் மனித வரலாற்றிலேயே கிடைக்கப் பெறாத பிறிதொரு பெரும் பேறும் அரும் சிறப்பும் திருவாசகத்திற்கு மட்டுமே உளது. அதுதான் அந்நூல் சிவபெருமானாலேயே அனர்தம் திருக்கரத்தால் எழுதப்பெற்றமையாகும். முதிய அந்தணர் வடிவில், முக்கூடற் சொக்கேசன், தில்லை மூதூரில் சென்றங்கண் வதியும், முனிபுங்கவராய வாதவூர் வள்ளல், மொழியத் தம் கரத்தால் ஓலையில் தீட்டித் தம் கையொப்பமும் அதில் இட்டுத் திருச்சிற்றம்பலப் பஞ்சாக்கரப் படியில் அதனை வைத்தகன்றார், என்பது வரலாறு.

தில்லைச் சிற்றம்பலமுடையார் இவ்வாறு செய்யக் காரணம் யாது? சிவனுர் எல்லா உலகங்களையும் தம்முள் ஒடுக்கிக் கொண்ட பின், பிறர் எவருமின்றித் தாம் ஒருவரே நிலைத் திருக்கும் தம் தனிமையைக் கழிக்க உதவும் இனிமையானதொரு நூல் திருவாசகமல்லாமல் பிறிதொரு நூல் இலது எனக்கண்டு, அது ஊழியில் அழிந்து போகாதபடி அதனைத் தாமே எழுதி அவர் அவ்வாறு காத்துவைத்தாராம். இந்தக் காரணத்தைத் தான் மனேன்மணிய நூலாசிரியர்;

"கடையூழி வருந்தனிமை
கழிக்கவன்ரே அம்பலத்துள்
உடையார் உன் வாசகத்தில்
ஒரு பிரதி கருதியதே"

என்ற அடிகளிற் குறிப்பிடுகின்ருர்.

## பயன் கருதாத் தன்மை :

திருவாசகத்தை மட்டும் கடையூழித் தனிமையில் தாம் படித்து இன்புறச் சிவபெருமான் தமது திருக்கரத்தாலேயே எழுதிக் கொண்டதற்கு மற்ருெரு காரணம், இந்நூலின் நிஷ்காமியத் தன்மையாகும். தேவாரம் பாடியவர்கள் கூடத் தம் பண் சுமந்த பாடல்கட்காகப் பரிசு பெற்றவர்கள் தாமே? ஆனுல் திருவாசகம் ஒன்றே "வேண்டாமையாகிய விழுச் செல்வம்" ஒன்றினையே விரும்பி நிற்கிறது. நான், எனது என்னும் உரைமாய்த்து,

"அன்றே என்றன் ஆவியும் உடலும்
உடமையெல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட்
கொண்டபோதே கொண்டிலையோ"

என்று பாடிச் சிவபிரானிடம் சரணுகதி யடைந்தவர் மாணிக்கவாசகப் பெருமான் ஒருவரே.

## அடிகளே சிவம் :

ஞானத்தில் ஞானத்துக்குரிய வாதவூரடிகள் "அறிவாற் சிவன்" எனச் சைவர்களால் விதந்தோதிப் போற்றப்படுகிருர். "சித்தமலம் அறிவித்துச் சிவமாக்கி எனையாண்ட அத்தன் எனக்கருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே" என்று இப்பெருமான் பெருமிதத்தோடு பாடியுள்ள பாடலே இதற்குச் சான்றும் ஆதாரமும் ஆகும். "எந்தையே ஈசா உடலிடம் கொண்டாய் யானிதற்கிலன் ஓர் கைம்மாறே" என்ற அடியும், "தந்ததுன் தன்னைக் கொண்டது என் தன்னைச் சங்கரா யார் கொலோ சதுரர்" என்ற அடியும் இக்கொள்கையனவே ஆகும். ஆவுடையார் கோவில் என வழங்கப் பெற்றுவரும் திருப்பெருந்துறையில் உள்ள மூர்த்தி அம்பிகைக்குரிய ஆவுடையார் மட்டும் தான். சிவனுக்குரிய இலிங்க பாணம் அதில் இல்லை. இதற்குக் காரணம் சிவமாகிய மணிவாசகரே அங்கு அமைந்துள்ளமை தான். இதன் காரணமாகவே அச்சிவனுக்கு ஆத்மநாதர் என்ற நாமம் வழங்குகிறது. அக்கோவிலின் நித்திய பூசைகளும் விழாக்களும் மாணிக்கவாசகருக்கே நடத்தப்படுகின்றன.

## பிறநாட்டார் பேணுதல் :

இத்தகைய ஒப்புயர்வற்ற உலகமகாநூல் தமிழர்களை மட்டுமன்றித் தமிழரல்லாதாரையும் வெகுவாகக் கவர்ந்துள்ளமை ஒரு வியப்பன்று. ஆங்கிலக் கிறித்தவப் பாதிரியாகிய டாக்டர் ஜி. யு. போப் என்பாரும், இத்திருவாசகம் பற்றித் தம் தமிழ் நண்பர் ஒருவருக்கு எழுதிக் கொண்டிருந்த கடிதத்தில், அவரது உவகைக் கண்ணீர் விழுந்து அதன் எழுத்துக்களை அழிக்கின்ற அளவுக்கு இந்நூல் அவரது உள்ளத்தைக் கவர்ந்து வென்றிருக்கின்றது. அவ் ஆங்கிலப் பெருமகனுர் திருவாசகத்தை கி,பி. 1900 ஆண்டில் முதல் முதலாக ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டார். இதன் மூலம் திருவாசகப் பெருமை உலகெங்கும் பரவத் தொடங்கியது. அதன் பின் 1958–ஆம் ஆண்டில் என்னுடைய திருவாசக ஆங்கிலமொழி பெயர்ப்பும், அதன்பின் அண்மையில் ஜி. வி. பிள்ளையின் மொழிபெயர்ப்பும் முறையே வெளியிடப் பெற்றுள்ளன.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த Rev. Kingsbury என்னும் கிறித்துவ அன்பர் ஒருவர், திருவாசகம் முழுவதையும் மனப்பாடம் செய்திருந்தார் என்ற செய்தியை யான் திரு. வி. க. அவர்கள் மூலம் அறிந்தேன். திருவாசகத்தின் ஜர்மனிய மொழி பெயர்ப்பு ஒன்று இருந்து வருவதாகவும், யான் கேள்விப்பட்டுள்ளேன். Rev. Father Cerac என்ற பிரான்சு தேசத்தவர் ஒருவர் திருவாசக ஆராய்ச்சியில் ஈடுபடச் சில்லாண்டுகட்கு முன் நம் தமிழ் நாட்டுக்கு வந்தார். ஆனுல்

துரதிர்ஷ்டவசமாக் அவர் அகால மரணம் அடைந்துவிட்டார். சவரிமுத்து என்னும் கிறித்துவ அறிஞர், ஒப்புமை ஆராய்ச்சி நூலொன்று எழுதி வருவதாகவும் தெரிகிறது. கடந்த முதலாவது உலகப் பெரும்போரின் போது Ferederic Heiler என்னும் ஜர்மானியர் ஒருவர் 'பிரார்த்தனை' (Prayer) என்றதொரு நூல் எழுதினர். அந்நூலில் ஏழு இடங்களில் அவர் திருவாசகப் பாடல்களை மேற்கோள் காட்டியுள்ளார்.

இதுவரை நாம் திருவாசகம் என்ற சைவத் திருமுறையின் தெய்வத் தன்மை, தீந்தமிழ்ச் சுவை, தனிப்பட்ட சிறப்புக்கள் ஆகியவற்றை ஒருவாறு சுருக்கமாகக் கண்டோம்.

(தொடரும்)



தஞ்சை மாவட்டம் மன்னார்குடி, ஒற்றைத்தெரு அருள்திரு ஆனந்தவிநாயகர் கோயிலில் நிகழ்ந்த ஆலயத்தூய்மைப் பரிசளிப்பு விழாவில், வேளாண்மைத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி அவர்கள், அறங்காவலர் குழுத்தலைவரிடம் சுழல்கோப்பைப் பரிசு வழங்குதல்.

# அம்பிகையின் அழகுவெள்ளம்

(சவுந்தரிய லகரி)

(முற்றொடர்ச்சி)

## (4) தேவியின் திருவடிகளே விரும்பிய வற்றை எல்லாம் கொடுக்கும்.

அயன் அரி அரன் என்னும் மூவரும் மும் மூர்த்திகள் எனப்படுவர். அவர்கள் முறையே உலகத்தைப் படைத்தல் காத்தல் ஒடுக்கல் என்னும் முத்தொழில்களையும் செய்வர். இவர்களைத் தோற்றுவிக்கும் காரணப் பொருள்களாகச் சத்துவம் இராசதம் தாமதம் என்னும் மூன்று குணங்கள் உண்டு. இம் முக்குணங்களாகிய வேர்களினின்றே முக்மூர்த்திகள் தோன்றுவர். வேர்கள் நிலம் அல்லது தரையைப் பற்றுக்கோடாகக் கொண்டே வளரும். முக்குணங்களாகிய வேர்கள் தழைத்து ஓங்குதற்குக் காரணமான நிலமாகத் தேவி திகழ்கின்றாள். நிலமில்லையேல் வேர் இல்லை. வேர் இல்லையேல் செடி கொடி மரமாகிய தாவர இனங்கள் இல்லை. அதுபோல அம்பிகை இல்லையேல், முக்குணங்கள் இல்லை. முக்குணங்கள் இல்லையேல், மும்மூர்த்திகள் இல்லை. மும்மூர்த்திகள் இல்லையேல், உலகில் முத்தொழில்கள் நடைபெறமாட்டா. இங்ஙனம் எல்லாவற்றிற்கும் அடிப்படைப் பற்றுக்கோடும் காரணமுமாகத் தேவியே திகழ்கின்றாள். எனவே உண்மையான, சிறந்துயர்ந்த தெய்வம் தேவியே ஆவள். இதனை அறியாதவர்கள், தம் அறியாமையால் பிற தெய்வங்களையும் தெய்வம் என்று கருதிப் புகழ்வர். அப்புகழ்ச்சியைக் கேட்டு, அத் தெய்வங்களும் இறுமாந்து நிற்கும்; தம்முடைய கைகளில் அபயமும் வரதமுமாகிய நிலைகளைக் கொண்டு இருக்கும். என்றாலும் அவற்றால் ஒரு பயனும் விளையாது. அத் தெய்வங்களின் கைகள், போலிப் பாவனையினால் அபிநயம் பிடிக்கின்ற வெறும் கைகளே போலும். எனவே, அத்தெய்வங்களின் கைகள் நம்முடைய அச்சத்தைப் போக்கமாட்டா. அவைகள் நமக்கு எதனையும் தரவல்லன அல்ல. தேவியினுடைய திருவடிகளே, நாம் விரும்புவன எல்லாவற்றையும் அளித்துக் காப்பாற்ற வல்ல சிறப்புடையனவாகும்.

> தேவு எனப்புகழ அதின் நிமிர்ந்து நிகர்
> செப்புவார், அபய வரதமாம்
> பாவகத்து அபிநயத்தோ டுற்றகை
> பரப்பி என் ? பயம் ஒறுக்குமே ?
> யாவருக்கும் அஃது அரிது! நின்பதம்
> இரப்ப யாவையும் அளிக்குமால் ;
> மூவருக்கும் ஒரு தாவரப் பொருள் என்
> மூலமே தழையும் ஞாலமே !

மும்மூர்த்திகளும் தோன்றுவதற்கு முக்குணங்கள் காரணமாக அமைதலின், அவற்றினை வேராக உருவகித்து, "மூவருக்கும் ஒரு தாவரப் பொருளெனும் மூலம்" என்றார். மூலம்-வேர். நிலத்தைப் பற்றுக் கோடாகக் கொண்டே வேர்கள் நிலைபெறுதலின், முக்குணங்களை இயக்கும் அம்பிகையை, "மூலமே தழையும் ஞாலமே" என்றார். ஞாலம்-தரை, பூமி. அறியாதார் சிலர் தம்மைப்புகழ, அதனால் இறுமாந்து, தம்மையும் அம்பிகைக்குச் சரிநிகர் சமானம்போலத் தவறுதலாக நினைத்துக் கொண்டு மகிழும் சிறு தெய்வங்களை, "தேவு எனப் புகழ, அதின் நிமிர்ந்து, நிகர் செப்புவார்" என்றார். நிமிர்ந்து-இறுமாந்து, செருக்குக் கொண்டு. அச்சிறு தெய்வங்களும், அம்பிகையைப் போல அபய வரத முத்திரைகளைக் காட்டி நிற்பினும், பயன் ஏதும் விளைக்கவல்லன அல்ல ஆதலின், "அபய வரதமாம் பாவகத்து அபிநயத்தோடு உற்றகை" என்றார். பாவகம்-போலி நடிப்பு. அக்கைகளால் நம் பயத்தைப் போக்குதலும், நாம் விரும்பும் வரங்களைக் கொடுத்தலும் இயலாது ஆதலின் "கை பரப்பி என்? பயம் ஒறுக்குமே? யாவருக்கும் அஃது அரிது" என்றார். பயம் ஒறுத்தல்-அச்சத்தைப் போக்குதல். அடியார்கள் விரும்பும் வரங்கள் எல்லாவற்றையும் கொடுத்து, அவர்களின் பயத்தைப் போக்கிப் பாதுகாத்து அருள வல்ல

வள் அம்பிகை ஒருத்தியே யாதலின், "நின்பதம் இரப்ப யாவையும் அளிக்கும்" என்றுர். பதம்-திருவடிகள். இரப்ப-இரப்பவை; விரும்பி வேண்டிக் கொள்ளும் நலன்கள். யாவையும் - எல்லாவற்றையும். உம்மை முற்றும்மை. இப்பாடல், "சாவமுன்னுள் தக்கன் வேள்வித் தகர்தின்று நஞ்சம் அஞ்சி, ஆவ எந்தாய் என்று அவிதா இடும் நம்மவர் அவரே, மூவர் என்றே எம்பிரானுெடும் எண்ணி விண் ஆண்டு மண் மேல் தேவர் என்றே இறுமாந்து என்ன பாவம் திரிதவரே" என வரும் திருவாசகத் திருப்பாடலோடு ஒப்பிட்டு இங்கு எண்ணி இன்புறுதற்குரியது.

## (5) தேவியின் திருவருட் செயல்

அம்பிகை பலவேறு வடிவமும் நிறமும் உடையவள். ஆயினும் அவளை நீல நிறமுடையவள் என்றும், நீலி என்றும் குறிப்பிடும் ஒரு மரபு உண்டு. அவள் தன் திருக்கையில் கபாலத்தை ஏந்தியுள்ளாள். இத்தகைய அம்பிகையை நோக்கி, ஆசிரியர் ஒரு வினவை நிகழ்த்துகின்றுர். தம் ஐய வினவிற்கு விடையளித்தருள வேண்டுகின்றுர். மன்மதன் இவ்வுலகத்தவரை யெல்லாம், மையலுறச் செய்து மயக்கி, அடக்கி வெற்றி கொள்கின்றுன். அவன் வயப்பட்டு அடங்கி ஒடுங்காதார் உலகில் எவருமிலர். அவனும் இரும்புவில்லை ஏந்தியவனல்லன். வளைந்து ஒடிந்துவிடக்கூடிய கரும்புவில்லையே அவன் வைத்திருக்கின்றுன். அவன் எய்யும் கணைகளும், வலிமையும் கூர்மையும் வாய்ந்தன அல்ல. கைவிரல்களால் தொட்ட அளவில் வதங்கி வாடி விடக்கூடிய மென்மையான மலர்களே அவனுக்கு அம்புகளாக உள்ளன. அவனது வில்லின் நாண்கயிருகச் சிறிய வண்டுகளே அமைந்துள்ளன. அவன் எய்யும் மலரம்புகளும் ஐந்திற்கு மேல் இல்லை. அவனுடைய படைத் தலைவன், மென்மையான வசந்த காலமேயாகும். அவனுடைய தேரோ வெறும் தென்றல் காற்றுத்தான். அவனுக்கு உடம்பும் இல்லை. உடலில்லாத அனங்கன் தான் அவன். இங்ஙனம் உடலும் உறுப்பும் வலிமையும் இல்லாத அம்மன்மதன், இவ்வுலகிலுள்ளார் அனைவரையும் அடக்கி ஒடுக்கி வெற்றிகொண்டு விடுகின்றுனே, அஃது எப்படி? அவனது வெற்றிக்கும் வீரத்திற்கும் காரணம், தேவியே உன்னுடைய திருவருளே யாதல் வேண்டும். நீண்ட மலர்போன்ற சிறந்த நின்னுடைய திருக்கடைக்கண் பார்வையின் மூலம், அவனுக்கு, நீ நின் திருவருளை ஒரு சிறிது வழங்கியருளினையோ? இல்லையேல், அவன் ஒருபோதும் ஒரு சிறிதும் இத்தகைய வீரமும் வெற்றியும் உடையன் ஆவானே? என்னே நின் திருவருளின் பெருமை! என்று வியப்பும் விம்மிதமும் உறுகின்றுர் ஆசிரியர்.

தொடுகரச் சிலை; தொடப் பொருமலர்;
சுருப்புநாண்; இடுவது ஐந்துகோல்;
அடுபடைத் தலைவனுர் வசந்தம்; அலை
தென்றல் தேர்; உருவம் அருவமாம்
முடுகு கொற்ற மதன் ஒருவன், இப்புவனம்
முற்றும் வெற்றிகொள, முடிவிலா
நெடு மலர்க்கண் அருள் சிறிது
அளித்தனைகொல்?
நீலியே! கர கபாலியே!

தேவியின் திருவருள் இருந்தாலன்றி, ஒருவருக்கும் எத்தகைய ஆற்றலும் சிறப்பும் அமையாது என்பது, இப்பாடலின் கருத்து. மன்மதனுக்கு வில், கரும்பு. அம்பு, தாமரை சூதம் அசோகம். முல்லை நீலம் என்னும் ஐந்து மலர்கள். நாண், சுரும்பு (வண்டுகள்): படைத்தலைவன், வசந்தம் (வேனிற்காலம்); தேர் தென்றல் காற்று; உடல் அருவம்; சிவபெருமானுல் காமதகனம் செய்யப் பெற்று, அவனது உடல் எரிந்து போயினமையின், மன்மதனுக்கு அனங்கன் என்னும் பெயர் உண்டாயினமை பற்றி, உருவம் (உடல்) அருவம் எனப்பட்டது. உலகுயிர்களுக்கெல்லாம் காமவேதனையை விளைவித்து வருத்தம் செய்து நிற்றலின் 'முடுகு கொற்ற மதன்' என்றுர். உலகத்துள்ளார் அனைவரையும் காமவயப்பட்டுக் கெடுமாறு செய்தலின் "ஒருவன் இப்புவனம் முற்றும் வெற்றிகொள" என்றுர். தேவியின் திருவருட் கடைக்கண்நோக்கம் சிறிதளவு பெறினும், அதனுற் பெரும் பயன்விளைதல் திண்ணம் என்பார் "முடிவிலா மலர்க்கண் அருள் சிறிது அளித்தனை கொல்?" என்றுர். அம்பிகையின் அருள் ஒரு சிறிது இருப்பின் எத்தகைய குறையுடையாரும் எல்லா நிறைவும் பெறுவர் என்பது இப்பாடலின் கருத்து. சிலை-வில். சுரும்பு (வண்டு), சுருப்பு என வந்தது. கோல்-அம்பு.

இச்செய்யுள் உறுப்புக்குறை விசேடம் என்னும் அணியாகும். "யானை இரதம் பரி

ஆள் இவையில்லை ; தானும் அனங்கன் ; தனு கரும்பு ; தேனர் மலர் அம்பால், வென்று வடுப்படுத்தான் மாரன் ; உலகங்கள் மூன்றும் ஒருங்கு'' எனவரும் தண்டியலங்கார மேற் கோள் வெண்பாச் செய்யுள் இங்கு ஒப்பிட்டு நோக்கி உணர்ந்து இன்புறத தக்கது.

## (6) தேவி வழிபாட்டால் சிறப்பெலாம் நிரம்பப் பெறலாம்:

அம்பிகை உலக உயிர்களுக்கெல்லாம் தாயாக விளங்குகின்றாள். திருமாலும் காமனும் அவளை வழிபட்டு அருள்பெற்றனர். ஒருசமயம் திருமாலானவர் அம்பிகையைப் பூசித்துப் பெற்ற அருளினால், பேரழகுமிக்க ஒரு பெண் வடிவம் கொண்டார். அப் பெண் வடிவின் பேரழகினைக் கண்டு சிவபெருமான் மிகவும் பெருந்துயரடைந்தார். அவ்வாறே அம்பிகையை அன்புடன் வழிபட்டதனால், காமதேவன் ஆண்வடிவினருள் தனக்கு நிகரில்லாத பேரழகு வாய்க்கப் பெற்றான். அவனது மனைவி யாகிய இரதி தேவியானவள், தன்னுடைய கண்களாகிய வண்டுகளால், காமதேவனின் இணையற்ற பேரழகாகிய பூந்தேனைக் கண்டு கண்டு உண்டு மகிழ்ந்தாள். அம்பிகையின் அருளினால் பெற்ற அழகைக் கண்டு, முறையே சிவபெருமானும் இரதிதேவியுமே காதலித்து மயங்கி வருந்தினரென்றால், மற்றவர்களின் நிலையைப் பற்றிச் சொல்லுதல் கூடுமோ? தாயே நீ மிகவும் நெஞ்சைக் கவர வல்லவள். மோகனத்தினாலே யாவரையும் வஞ்சிக்கின்ற வள். நீ செய்யும் செயல்கள் ஒன்றோ? எண்ணற்றனவாகும்.

மாயன் வணங்கி உன் மால்வடிவம் கொள
வாடும் அரன்துயர் போதாதோ?
தூய மதன்தொழ ஆண்வடிவம் புணர்
தோகை கண்வண்டு, அயில்
தேனேபோல்
மேய வழங்கும் உருபம்அது என்சொல?
மேல்இது கண்டவர் வாழ்வாரோ?
நீ அதிரஞ்சகி! மோகன வஞ்சகி!
நீ செய்வது ஒன்றல; மாதாவே!

திருமாலும் காமதேவனும் அம்பிகையை வழி பட்டு, முறையே பெண்ணும் ஆணுமாய் வடிவம் கொள்ளும் பேரழகு பெற்றனர். எனவே ஆணும் பெண்ணும் ஆகிய மக்களில் அழகிய வடிவம் பெற விரும்புவோர் எவரும், அம்பிகையை வழிபட்டால் அழகிய வடிவைப் பெறுதல் திண்ணம் என்பது இப்பாடலாற் புலனாகும். அம்பிகையின் அருளால் மன்மதன் கரும்பு வில்லும், மலர் அம்பும், தென்றல் தேரும், திங்கட் குடையும், பூம்பொழில் ஆகிய பாசறையும் உடையவன் ஆயினன். ஆதலின், 'தூயமதன்' என்று சிறப்பித்தார். சிவபிரான் பால் அசுரன் ஒருவன், நான் யார் தலைமீது கை வைக்கின்றேனோ, அவன் இறந்தொழிதல் வேண்டும் என்னும் வரம் பெற்றான். அங்ஙனம் வரம் பெற்ற அந்த அசுரன் (பசுமாசுரன்) சிவ, பிரானையே கொல்லக் கருதிச் செல்லும்போது திருமாலானவர் தேவியின் அருளால் பேரழகு மிக்க ஒரு பெண் வடிவமாக மோகனாவதாரம் எடுத்து, அவ்வசுரனைத் தன் பெண்வடிவால் மயக்கி, அவனே தன் தலையில் கைவைத்துக் கொண்டு இறந்தொழியும்படி செய்தார். அதனை அறிந்த சிவபிரான், அம் மோகன வடிவத்தைத் தமக்குக் காட்டும்படி திருமாலைக் கேட்டுக்கொள்ள, திருமால் அங்ஙனமே தம் மோகன வடிவத்தைக் காட்டியபொழுது, அப் பெண் வடிவின் பேரழகில் சிவபிரான் மயங்கிக் காதலித்து வருந்தினார் என்பது புராண கதை' ஆதலின் "வாடும் அரன்துயர் போதாதோ?'. என்றார்.

சிவபிரானும் இரதியுமே அழகிய வடிவம் கண்டு மனம் மறுகி மயங்கினர் என்றால், உலகில் வேறு எவர்தான் அழகில் மயங்க மாட்டார்கள் என்பார் 'மேல் இதுகண்டவர் வாழ்வாரோ?'' என்றார். அம்பிகையானவள் உலகில் எண்ணற்ற எழில்மிக்க பொருள்கள் எல்லாம் தோன்றுதற்குக் காரணமாய் விளங்கு தலின் நீ "அதிரஞ்சகி" என்றும், அப்பொருள் களால் காண்பவர்களின் கண்களையும் கருத்தை யும் கவர்ந்து மயக்குதலின் 'மோகன வஞ்சகி' என்றும்; இவ்வாறு பலவகைகளிலும் அவ்வவ ருடைய பண்பும் பக்குவமும் நோக்கி வெவ்வேறு பலவகைகளில் ஆட்கொண்டு அருள் புரிவ தால் "நீ செய்வது ஒன்று அல மாதாவே" என்றும் புகழ்ந்தார். மன்மதனின் அழகிய உருவின் சிறப்பையும் இனிமையையும் கருதிப் பூந்தேன் எனக் கூறி மகிழ்ந்தார். அதற்கு ஏற்ப அவ்வழகைக் கண்டு மகிழும் இரதியின் கண்களை வண்டு என்று உருவகம் செய்தார். இஃது இயைபு உருவகம்

எனப்படும். 'நீ அதி ரஞ்சகி' என்றது வியப்புச் சுவை. 'மோகன வஞ்சகி' என்று இகழ்வது போலப் புகழ்ந்தமை புகழாப் புகழ்ச்சி என்னும் அணியாகும். இவ்வாறு ரஞ்சகம் புரிவதும், வஞ்சகம் புரிவதும், அம்பிகை உயிர்கள்பால் கருணைகொண்டு காத்தருளுவதற்கே யாதலின் 'மாதாவே' என்று அம்பிகையின் மாட்சியைப் புகழ்ந்துபோற்றினுர்.

## (7) தேவியே என்முன் வந்தருள்க :

சிவபிரான் தன் கையில் கபாலத்தை ஏந்தியிருக்கின்ருர். சிவபிரானைப்போலவே தேவியும் தன் கையில் கபாலம் ஏந்தியுள்ளாள். ஆதலின் அம்பிகைக்கும் கபாலி என்று ஒரு பெயர் உண்டு. சிவபிரான் சிறப்பும் ஒளியும் மிக்கவன். எனினும் தேவி அவனிலும் சிறப்பும் ஒளியும் மிக்கவள். அவளுடைய இடையில் மேகலை விளங்குகின்றது. அவளுடைய தனங்கள் யானையினுடைய மத்தகங்களைப்போலவளர்ந்து விம்மித் திகழ்கின்றன. அவற்றின் சுமை தாங்க மாட்டாமல் இடையானது தளருகின்றது. தேவியின் திருமுகம் முழுநிலாப் போல அழகும் ஒளியும் பெற்றுத் திகழ்கின்றது. அவள் கரும்பு வில்லும், மலர் அம்பும், பாசமும், அங்குசமும் ஆகியவற்றை, முறையே தனது நான்கு கைகளிலும் ஏந்தியிருக்கின்ருள். அத்தகைய அம்பிகையை நோக்கித், தாயே! நீ என்முன்னே அழகுபெற வந்து தோன்றி, நின்னுடைய தாமரை போன்ற திருவடிகளை நீட்டி, இவற்றை வருடுக என்று எனக்குக் கட்டளையிட்டு, என்னை ஆட்கொண்டு அருள் புரிவாயாக என்கின்ருர் ஆசிரியர்.

> மேகலை பொங்க, மதாசல கும்பம்
> எனுமுலை கண்டு இடைசோரா, நீர்
> மாக வளங்கெழு நாள்நிறை அம்புலி
> வாண்முகம், அம்புவில், ஏடார் போது
> ஏக நெடுங்கழை, பாசமொடு அங்குசம்
> ஏர்பெற வந்தருள் கபாலி!
> 'நீ கமலம் திகழ் தாள்வருடு' என்றுஅரன்
> நீர்மையின் விஞ்சிய கோமாதே!

தேவி தமது முன்னே தோன்றவும், தாம் அவளுடைய திருவடிகளை வருடவும்பெற்ருல், தமக்கு எல்லாவகையான இன்ப நலங்களும் எய்தும் என்று ஆசிரியர் குறிப்பிடுகின்ருர். இஃது அம்பிகையை வழிபடும் அன்பர்கள் அனைவர்க்குமே பொருந்தக் கூடிய உண்மையாகும். உலகில் தாயர் பலர் உளர் எனினும், அவர்களிலும் மிகமேலான அருளை நமக்குப் புரிந்து நம்மைப் பெரிதும் காத்தருள்பவள் அம்பிகை யாதலின், தாயர் அனைவரிலும் தலை சிறந்தவள் என்னும் கருத்தில், "கோ+மாதா" எனப் புகழ்ந்தார். கோ—தலைமை, தலைசிறந்த என்னும் பொருளில் வந்தது. தெய்வ மகளிர்க்கு எல்லாம் தெய்வமாகத் திகழும் சிறப்புடையவளாதலின் 'கோமாதா' என்ருர் எனினுமாம். 'நீ ஏர்பெற வந்து கமலம் திகழ்தாள் வருடு என்று அருள்' என்று இயைத்துப் பொருள் கொள்க. மத+அசலம் (மதாசலம்) என்பது, மலைபோன்றதாய் மதநீர் பெருக்கும் யானையைக் குறிக்கும். கும்பம் என்பது குடம்; அஃது இங்கே யானையின் மத்தகத்தைக் குறித்தது; அஃது இங்குப் பெண்களின் தனங்களுக்கு உவமையாகக் கூறப்பெற்றது. 'சோர' என்னும் சொல் 'சோரா' என நீண்டுவந்தது. "சொல் திரியினும் பொருள்திரியா வினைக் குறை" (நன்னூல். 346) என்பது இலக்கணம்.

அம்பிகையின் திருமுகத்திற்கு மழைக் காலத்து நீலவானில் ஒளிமிக்குத் தோன்றும் முழுநிலாவை உவமையாக வைத்து, "நீர் மாக வளங்கெழு நாள்நிறை அம்புலி வாண்முகம்" என்று சிறப்பித்தார். மாகம்-மேகம். நாள்நிறை-பதினறு கலைகளும் நிறைந்த. அம்புலி-சந்திரன். வாள்முகம்-ஒளிபொருந்திய அழகிய முகம். அம்பிகை நான்கு திருக்கைகளைக் கொண்டு விளங்குகின்ருள். அவற்றில் முறையே கரும்பு வில், மலர் அம்பு, அங்குசம், பாசம் என்பவற்றை ஏந்தியிருக்கின்ருள். ஏடு-இதழ்; போது-மலர், கழை-கரும்பு, பாசம்-கயிறு, அங்குசம்-தோட்டி என்னும் கருவி. மலரம்பும் கரும்புவில்லும் அம்பிகையின் அறக்கருணைக்கு உரியன. அங்குசமும் பாசமும் மறக்கருணைக்குத் துணை புரிவன. நான்கு கருவிகள் கூறவே, அம்பிகையின் திருக்கைகள் நான்கு என்று உய்த்துணர்ந்துரைக்கப்பெற்றது. இதனுள் அம்பும் வில்லும் நிரலே நிறுத்தி, அவற்றிற்கேற்ப முறையே மலரும் கரும்பும் என்று பொருள் கொண்டமையால் இது நிரல் நிரை என்னும் அணியாகும். "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது" எனவரும் திருக்குறளும் நிரல்நிரை அணியின் பாற்படுவதேயாதல், எண்ணி இன்புறுதற்குரியது.

## (8) தேவியின் யோக நித்திரை :

தேவியானவள் தாமரைப்பூவில் எழுந்தருளி இருக்கின்றாள். அஃது ஆயிரம் இதழ்களை உடையதாகத் திகழ்கின்றது. இத்தகைய தேவி யோக நித்திரை என்னும் அறிதுயிலில் அமர்ந்திருக்கின்றாள். ஒரு பெரிய கடல், அதில் பெறுதற்கரிய அமுதம் நிறைந்துள்ளது. அவ்வமுதக் கடலின் நடுவே, செழிப்பான கற்பக மரப்பொழில்கள் அமைந்திருக்கின்றன. அதன் நடுவில் மணிகள் நெருங்கிய தீவு ஒன்று அமைந்து திகழ்கின்றது. அத்தீவின் நடுவில், நன்ருகப் பருத்த அடிப்பகுதியையுடைய கடப்ப மரங்களின் காடு அடர்ந்து உள்ளது. அக்காட்டின் நடுவே மிகவும் சிறந்துயர்ந்த சிந்தாமணிகளால் செய்த அழகிய மண்டபம் உள்ளது. அதன் நடுவில் ஓர் அழகிய கட்டில் அமைக்கப்பட்டுள்ளது. அக்கட்டில், கோரம் என்னும் உக்கிர ஆற்றல் மிகுந்த சிவபிரான் மேல் கவிக்கப்பட்டிருக்கின்றது. இங்ஙனம் சிவபிரான் தாங்கி நிற்கும் கட்டிலின்மீது, அம்பிகை யோக நித்திரை புரிந்து இன்புற்று மகிழ்கின்ருள். அக்காட்சியை அரும்பெரும் தவங்களைச் செய்த ஞானியர்களும் தேவர்களுமே கண்டு மகிழ்ந்து அனுபவிப்பார்கள்,

ஆர் அமுது இன்கடல் வேலி, செழுந்தரு
வாய்மணி பம்பிய தீவு ஊடே,
பார கடம்ப அடர் கானில், அருங்கொடை
பாய்மணி மண்டப வீடு ஊடே,
கோர சிவன்பர மேசன் உன்மஞ்சம், ஓர்
கூர் பரியங்கம் என மேலே
சீர் அட்ரும் பரஞானம் உறும்களி,
தேவர் அருந்துவர் பூ மாதே

அம்பிகையானவள் உலக உயிர்களின் ஈடேற்றமும் உய்தியும் கருதி யோகநித்திரை புரிந்தருளும் இயல்பினை, இப்பாடல் இனிது உணர்த்துகின்றது. யோகிகள் தம்முடைய யோகக் காட்சியில் தேவியின் திருவுருவத்தைத் தரிசிக்கும் திருவருட் பேற்றினை, இச்செய்யுள் உருவக முகத்தால் உணர்த்தும் திறம் பெரிதும் போற்றுதற்குரியதாகும். தேவியின் யோக நித்திரையின் இயல்பினையும் சிறப்பினையும் வியந்து, ''சீர் அடரும் பரஞானம் உறும் களி'' என்றுர். சீர்-பெருமை, அடர்தல்-மிகுதல். உலகவர் துயில், அஞ்ஞானத்தை விளைவிக்கும். ஆனல் அம்பிகையின் துயிலோ, மிக மேலான மெய்யுணர்வாக விளங்கும்; அதனல் ஒப்புயர்வற்ற பேரின்பம் விளையும் ஆதலின் அம்பிகையின் அறிதுயிலைப் ''பரஞானம் உறும்களி'' என்றுர். களி-களிப்பு, மகிழ்ச்சி. இவ்வறிதுயில் நிலையைத் தமது யோக ஞானக் காட்சியால் காணப்பெறுபவர்கள், மனித நிலையில் வைகினும் தெய்வநலம் பெற்றுச் சிறப்புற்றுத் திகழும் பேறு எய்துவர் ஆதலின், அவர்களைத் தேவர் என்று புகழ்ந்து போற்றினர். அத்தகையோர் என்றும் இடையறு அருள் இன்பவெள்ளத்தில் திளைப்பர் ஆதலின் 'அருந்துவர்' என்றுர். ஆறு ஆதாரங்களுக்கும் மேற்பட்ட சகசிராரம் என்னும் ஆயிரம் இதழ்த் தாமரையில் அம்பிகை எழுந்தருளி விளங்குதலால், பூ மாது என்று போற்றினர். இச்செய்யுள் தேவியின் செல்வநலச் சிறப்பை மிகுத்துச் சொல்லுதலால் உதாத்தம் (வீறுகோள்) என்னும் அணியாகும்.

(தொடரும்)

—ஆசிரியர்



சென்னை சைதாப்பேட்டை அருள்திரு. பிரசன்ன வேங்கட நரசிம்மசுவாமி கோயிலில் ஆலயத் தூய்மைப் பரிசளிப்பு விழாவிற் கலந்துகொண்டு சிறப்பித்த பெருமக்கள்.

# தஞ்சை மாவட்டக் கோயில்களின் வரலாறு

(முற்றொடர்ச்சி)

**திருவெண்காடு :**

இத் திருத்தலம், தஞ்சாவூர் மாவட்டத்தில், சீர்காழி வட்டத்தில் உள்ளது. சென்னை-மாயூரம் இருப்புப்பாதையில், சீர்காழி இருப்புப் பாதை நிலையத்திலிருந்து தென்கிழக்கே 9 கல் தொலைவில் உள்ளது. சீர்காழியிலிருந்து நேரே உந்தூர்திகள் செல்லுகின்றன. திருவெண்காட்டிற்குத் தெற்கே 2 கல் தொலைவில் காவிரி யாறும், வடக்கே 1 கல்தொலைவில் மண்ணி யாறும் ஓடுகின்றன. திருச்சாய்க்காடு, காவிரிப் பூம்பட்டினத்துப் பல்லவனீச்சரம், திருவலம் புரம், கீழைத்திருக்காட்டுப்பள்ளி, திருக்கலிக் காமூர் முதலிய தலங்கள் திருவெண்காட்டைச் சூழ்ந்துள்ளன. திருநாங்கூர் திருவாலி என்னும் வைணவப் பதிகளும் இதன் அருகில் இருக்கின்றன.

திருவெண்காட்டிலுள்ள சிவபிரான்கோயில் ஊருக்கு நடுநாயகமாய் விளங்குகின்றது. கோயிலைச் சுற்றித் தேர் ஓடும் நான்கு திருவீதிகளும் மடவளாகமும் வாய்ந்து விளங்குகின்றன. கோயில் கிழக்கு நோக்கியது. இக்கோயில் கிழக்கு மேற்கில் 792 அடி நீளமும், தெற்கு வடக்கில் 310 அடி அகலமும் கொண்டதாக உள்ளது. கிழக்கிலும் மேற்கிலும் வாயில்கள் உள்ளன. சிறந்த சிற்பங்கள் நிறைந்த இராச கோபுரங்கள் இந்த இரு வாயில்களையும் அணி செய்கின்றன. உட்பிராகாரத்தின் கிழக்கு மேற்கு வாயில்களிலும் இரண்டு சிறு கோபுரங்கள் அமைந்திருக்கின்றன. கோயிலுக்கு வெளியில் கிழக்குக் கோபுர வாயிலுக்குத் தென்புறம் சந்நிதித் தெருவில் இந்திரவிநாயகர் கோயில் உள்ளது. கிழக்குக்கோபுரவாயில் வழியே உள்ளே நுழைந்ததும், நந்தியும் பலிபீடமும் அமைந்திருக்கக் காணலாம். இவற்றுக்குத் தெற்கே ஊஞ்சல் மண்டபம், அக்கினீசுவரர் கோயில், அண்மையில் கட்டப்பெற்ற மெய்கண்டார் கோயில் என்பவை உள்ளன. இவற்றிற்கு மேற்புறம் அக்கினி தீர்த்தமும், அதன் அருகே மெய் கண்டார் நந்தவனமும் உள்ளன. மேற்கே தெற்கு வெளிப்பிராகாரத்தில், சூரியேசர் கோயில், சூரிய தீர்த்தம் உள்ளன. மேற்கு இராசகோபுர வாயிலுக்கு உட்புறம் வடபால் முருகப்பெருமான் கோயிலும், நூற்றுக்கால் மண்டபமும் அழகுற அமைந்திருக்கின்றன. வெளிப்பிராகாரத்தின் வடமேற்கு மூலையில் அம்மை கோயில் கிழக்குநோக்கி உள்ளது. அதற்குத் தனி உட்பிராகாரமும் உள்ளது. அம்பிகையின் சந்நிதிக்கு இடப்புறம், புதன்கோயிலும், வில்வமரமும், திருவெண்காட்டு நங்கை நந்தவனமும் உள்ளன. எதிரில் சந்திர தீர்த்தமும், அதன் தென்கரையில் கொன்றைமரமும், கிழக்குக் கரையில் வடவாலமரமும், சந்திரேசுவரர் கோயிலும் காணப்படுகின்றன. உட்பிராகாரம் செல்லுவதற்கு முன், உற்சவ மண்டபமும், திருக்கலியாண மண்டபமும் அமைந்திருக்கின்றன.

உட்பிராகாரத்தின் தெற்குத் திருமாளிகைப் பத்தியில்,அறுபத்துமூவர் பத்ரகாளி வீரபத்திரர் இடும்பன் சுகாசனமூர்த்தி முதலிய திருவுருவங்கள் உள்ளன. மேற்குப் பகுதியில் நாகேசுவரர் விநாயகர் யோகமாணிக்கவாசகர், நால்வர் பெருமக்கள், விசுவேசுவரர் விசாலாட்சி, அங்காள பரமேசுவரர், சுவேதனப் பெருமாள் (திருமால்), பஞ்சலிங்கம், பாலசுப்பிரமணியர், அஷ்டலட்சுமியர், திருமகள் கலைமகள் தன விநாயகர் சந்நிதிகள் உள்ளன. கருவறைக்கு வடமேற்கில் கூத்தப்பிரான் சந்நிதி உள்ளது. கருவறைக்குத் தெற்கில், பெரிய வாரணப் பிள்ளையார், மற்றும் சோமாஸ்கந்தர் சந்நிதிகள் உள்ளன. வடக்கு உட்பிராகாரத்தில் அகோர மூர்த்தி (மூலவர்), காட்சிநாயனுர், அகோர மூர்த்தி (உற்சவர்), சுவேதலிங்கம், சண்டேசுவரர் சந்நிதிகள் உள்ளன. கிழக்கு உட்பிராகாரத்தில் பைரவர், காசித்துண்டி விநாயகர்,

துர்க்கை நவக்கிரகத் திருவுருவங்களும், நடுவில் திருவெண்காட்டீசர் சந்நிதியும் அமைந்துள்ளன. கருவறைச் சுவர்களில் சட்டைநாதர் தட்சிணுமூர்த்தி, இலிங்கோற்பவர் முதலியவர்களின் திருவுருவச் சிற்பங்கள் அழகுற அமைந்து திகழ்கின்றன.

திருவெண்காட்டுக் கோயிலில் மிகவும் முக்கியமாகப் போற்றப்படும் மூர்த்திகள் **சுவேதாரண்யேசுவரர், நடராசர், அகோரமூர்த்தி** என்னும் மூவராவார். அம்பிகை பிரமவித்தியாம்பாள், பெரியநாயகி என்ற திருப்பெயர்களால் போற்றி வணங்கப்பெறுகிருள். தில்லைச் சிதம்பரம் போன்றே இங்கும் நடராசர் சபை, அமைந்திருப்பது தனிப்பெருஞ் சிறப்பு ஆகும். நடராசர் திருவுருவில் 14 சதங்கைகளையுடைய கழல் ஒன்று, அவர்தம் திருவடியில் விளங்குகின்றது. அது ஈரேழு (14) புவனங்களும் அவருடைய அசைவினுலேயே இயங்குதலைக் குறிக்கும். நடராசரின் இடுப்பில் 81 சங்கிலி வளையங்கள் அமைந்த அரைஞாண் திகழ்கின்றது. அது பிரணவம் முதல் நம இறுதியாக உள்ள 81 பதமந்திரங்களை உணர்த்துகிறது. "என்பொடு கொம்பொடு ஆமை இவை மார்பிலங்க" என்று சம்பந்தர் கோளறு பதிகத்தில் அருளிச்செய்ததற்கேற்ப, 28 அக்கு மணிகள் கோத்து முன்புறம் ஒரு வராகத்தின் கொம்பும், பின்புறம் ஓர் ஆமைஓட்டின் பதக்கமும் அமைந்த மாலை ஒன்றை, நடராசப் பெருமான் தரித்திருக்கின்ருர். 28 சதுர்யுகங்கள் முடிந்திருப்பதை இம்மாலை உணர்த்துகின்றது. நெற்றிக்கண் மிகச் சிறப்பாகவும் அழகாகவும் விளங்குகின்றது. இது சம்பந்தர் தம் தேவாரத் திருப்பதிகத்தில் "கண்காட்டும் நுதலான்" என்று தொடக்கத்திலேயே குறிப்பிட்டுள்ள, இறைவனின் திருவுருவச் சிறப்பை வெளிப்படுத்துகின்றது. இந்த நடராசசபை, தருமபுர ஆதீனத்தைச் சேர்ந்த வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் சிறப்புறத் திருப்பணி செய்து கட்டியதாகச் சொல்லப்படுகின்றது.

இத்தலத்தில் மிக்க தனிப்பெருமையுடன் விளங்குபவர் அகோர மூர்த்தியாவர். இவரைச் சிலர் அகோரவீரபத்திரர் எனக் கருதுவர். அது தவறு. அகோரவீரபத்திரர் தக்கனின் வேள்வியை அழிக்கச் சிவபெருமானுல் தம் நெற்றிக் கண்ணினின்றும் தோற்றுவிக்கப் பெற்றவர். ஆனுல் இங்குச் சிவபெருமானே அகோரமூர்த்தியாகத் திகழ்கின்ருர். விருத்திராசுரன் என்பவனை வலி தொலைக்கத் தோன்றியவர் இவர். இவர் தம் திருவுருவத்தில் 14 நாகங்கள் அணிகலனுக விளங்குகின்றன. இவருடைய வலக்கால் கட்டைவிரலும், இரண்டாவது விரலும் ஊன்றி நிற்க, ஏனைய விரல்கள் தூக்கி நிற்கின்றன. இவர் எண்டோள் முக்கண் ஈசராக, மூவிலைச் சூலம் ஏந்திய கையுடன் கம்பீரமாக விளங்குகின்ருர். அகோரமூர்த்தி மாசி மாதத்தில் பூர நட்சத்திரத்தில் நள்ளிரவில் தோன்றியருளினுர். இதனுல் அவருக்கு மாசி மாதத்தில் பூர நள்ளிரவில் நடைபெறுகின்ற வழிபாடுகள் மிகவும் சிறப்பாகக் கருதப்படுகின்றன.

திருவெண்காட்டுக் கோயிலில் அக்கினி தீர்த்தம் சூரிய தீர்த்தம் சந்திரதீர்த்தம் என்னும் மூன்று திருக்குளங்கள் உள்ளன. இம்மூன்று திருக்குளங்களிலும் நீராடி, வெண்காட்டீசரை வழிபடுவோர், எல்லாப் பாவங்களும் நீங்கப் பெற்றுத் தாம் தாம் விரும்பியவாறே மகப் பேறு முதலிய எல்லா வரங்களும் பெற்று வருகின்றனர்.

"பேயடையா; பிரிவெய்தும்;
**பிள்ளையினேடு உள்ளநினைவு**
**ஆயினவே வரம்பெறுவர்;**
**ஐயுறவேண்டா ஒன்றும்;**
வேயனதோள் உமைபங்கன்
வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத்
தோயாவாம் தீவினையே"

எனத் திருஞானசம்பந்தர் தேவாரம் பாடியதற்கு ஏற்பத், திருப்பெண்ணுகடத்தில் வாழ்ந்து வந்த **அச்சுதகளப்பாளர்** என்னும் சைவப் பெருஞ்சான்ருேர், தமக்கு மகப்பேறு இன்மையால் இங்கு வந்து தம் மனைவியுடன் இந்த மூன்று குளங்களிலும் நீராடி, முறைப்படி, இறைவனை வழிபட்டு மகப்பேறு எய்தினுர். அம்மகவே சிவஞானபோதம் என்னும் சைவ சித்தாந்தத் தத்துவப் பெருநூலை இயற்றியருளிய ஆசிரியர் மெய்கண்ட தேவராவர் என்பது வரலாறு. இன்றும் மகப்பேறு விரும்புவோர், திருவெண்காட்டு முக்குள நீராடி, வெண்காட்டீசரை அன்புடன் வழிபட்டு, மகப்பேறு எய்தி வருகின்றனர் என்பது கண்கூடு.

இத்தலத்தில் விருத்திராசுரனைக் கொன்ற பாவம் தீர இந்திரன் இங்கு வந்து வழிபட்டு அருள்பெற்றான். அவ்வாறே துருவாசமுனிவர் இந்திரனுக்கு அளித்த சிவநின்மாலிய மலர் மாலையைத் துதிக்கையால் வாங்கித் தரையில் வீசிக் காலால் மிதித்துப் பிழைபுரிந்த ஐராவதம் என்னும் விண்ணுலக யானையானது, துருவாசரின் சாபம்தீர இங்குவந்து வழிபட்டு அருள்பெற்றது. இத்தல வரலாற்றுக் குறிப்புக்கள்,

''நயந்தவர்க்கு அருள்பல நல்கி, இந்திரன்
  **கயந்திரம்** வழிபட நின்ற கண்ணுதல்,
வியந்தவர் பரவு வெண்காடு மேவிய
  பயந்தரும் மழுவுடைப் பரமர் அல்லரே'' (1)

''**வெள்ளானை** தவம் செய்யும்
  மேதகுவெண் காட்டான் என்று,
உள்ளாடி உருகாதார்
  உணர்வுடைமை உணரோமே''
—சம்பந்தர் (2)

''**வெள்ளரனை** வேண்டும் வரம் கொடுப்பார்
  வெண்காடு மேவிய விகிர்தனாரே
—அப்பர் (3)

எனவரும் தேவாரத் திருப்பாடற் பகுதிகளில் குறிக்கப் பெற்றிருத்தல் காணலாம். திருக்கடவூரில் மார்க்கண்டேயருக்காகச் சிவபெருமான் கூற்றுவனைக் காலால் எற்றிக் கடிந்தவாறு போலத் திருவெண்காட்டிலும் சிவபெருமான், உத்தாலகேது என்னும் முனிவரின் புதல்வராகிய **சுவேதகேது** என்னும் அந்தணனின் அன்பிற்கும் வழிபாட்டிற்கும் மகிழ்ந்து, அவனைப் பற்றவந்த கூற்றுவனைக் காலால் கடிந்தார் என்பது வரலாறு. இதுபற்றிய குறிப்பும்,

'' வேலைமலி தண்கானல்
    வெண்காட்டான் திருவடிக்கீழ்
மாலைமலி வண்சாந்தால்
    வழிபடும்நன் மறையவன்றன்
மேல்அடர்வெங் காலனுயிர்
    விண்டபினை நமன்தூதர்
ஆலமிடற் றான்அடியார்
    என்றடர அஞ்சுவரே ''

எனவரும் சம்பந்தர் தேவாரத்தில் காணப்படுகின்றது.

இக் கோயிலில், காரணம் காமிகம் மகுடம் என்னும் ஆகமங்களின்படி நாள்தோறும் ஆறு கால பூசை, பரம்பரைச் சிவாசாரியர்களால் நடத்தப்பெற்று வருகின்றது. பொன் வெள்ளி மணிகள் ஆகியவற்றால் செய்யப்பெற்ற அணிகலன்கள் பல உள்ளன. அவற்றின் மதிப்புரூபா 1,14,000/-. நன்செய் நிலங்கள் 761·07 ஏக்கரும், புன்செய் நிலங்கள் 872·12 ஏக்கரும் உள்ளன. இவற்றின் மூலம் ஆண்டொன்றுக்கு 1,73,000/- ரூபா குத்தகை வருவாய் கிடைக்கின்றது. இக்கோயிலால் ஒரு பெண்கள் உயர்நிலைப்பள்ளி, துவக்கப்பள்ளி, நூலகம், தேவார பாடசாலை என்பவை நடத்தப்பெற்று வருகின்றன. அண்மையில் ரூபா 40,000/- செலவில் யாத்திரிகர் விடுதி ஒன்றும் கட்டப்பெற்றுள்ளது. ஆண்டு ஒன்றுக்கு உண்டியல் மூலம் 300/- ரூபாவும், அர்ச்சனை அபிடேகம் முதலியவற்றின் மூலம் 1,000/- ரூபாவும் கிடைக்கின்றன. இரண்டு பெரிய தேர்களும், எட்டு பல்லக்குகளும், மரத்தால் செய்யப்பெற்ற பல வாகனங்களும், வெள்ளியால் செய்த நான்கு எருது வாகனங்களும் உள்ளன.

**கல்வெட்டுக்கள் :**

இக்கோயிலின் சுவர்களில் பற்பலகல் வெட்டுக்கள் காணப்படுகின்றன. இராசராசனின் மனைவியரில் ஒருத்தி ஒரு பொற்கிண்ணமும், மற்றொரு மனைவி வைர முடியும், வேறொருத்தி பல நிலங்களும் இக்கோயிலுக்கு அளித்துள்ளனர். கி. பி. 991-இல் செம்பியன் மாதேவியார் என்னும் சோழப் பேரரசி இக்கோயிலுக்குத் திருப்பணி செய்துள்ளாள். அதற்குப் பின்னரும் சோழ அரசர்கள் பலர் திருப்பணிகள் செய்துள்ளனர்.

**சோழர்கள்**

| | |
|---|---|
| முதலாம் இராசராசன் | கி.பி. 985-1014 |
| முதலாம் இராசேந்திரன் | கி.பி. 1014-1044 |
| வீர ராசேந்திரன் | கி.பி. 1063-1070 |
| முதலாம் குலோத்துங்கன் | கி.பி. 1070-1120 |
| விக்கிரம சோழன் | கி.பி. 1120-1135 |
| மூன்றாம் குலோத்துங்கன் | கி.பி. 1178-1218 |

**பாண்டியர்கள்**

| | |
|---|---|
| சடாவர்மன் வல்லபதேவன் | கி.பி. 1092-1115 |
| சடாவர்மன் குலசேகரன் | கி.பி. 1190-1271 |
| சடாவர்மன் சுந்தரபாண்டியன் | கி.பி 1251-1270 |

### விசயநகர அரசர்கள் :

விருபண்ண உடையார் கி.பி. 1893
கிருட்டிண தேவராயர் கி.பி. 1590-1529.
மராட்டியஅரசர் துக்கோசி கி.பி. 1728-1736.

என்னும் பல அரசர்களின் கல்வெட்டுக்கள் இக்கோயிலில் அமைந்திருக்கின்றன. இவற்றுள் பழமையானது முதலாம் இராசராசன் காலத்தது. அவனது இரண்டாம் ஆட்சியாண்டிலிருந்து 28 ஆம் ஆட்சியாண்டு வரையில் பல கல்வெட்டுக்கள் காணப்பசிடுன்றன. இவற்றில் இறுதியான கல்வெட்டு துக்கோசி மகராசர் சக. 1282 (கி.பி. 1730) ஆண்டில் செதுக்கியதேயாகும்.

இராசராசனின் கல்வெட்டுக்களில் திருவெண்காடு என்னும் இத்தலம், "இராசேந்திரசிங்க வளநாட்டு நாங்கூர் நாட்டு நாங்கூர் திருவெண்காடு" எனக் குறிப்பிடப்படுகின்றது. இதனல் திருவெண்காடு நாங்கூரின் ஒரு பகுதியாக இருந்ததும், முதலாம் இராசராசனுக்கு இராசேந்திரசிங்கன் என்னும் சிறப்புப்பெயர் வழங்கியதும் புலனுகின்றன. முதலாம் இராசாதிராசன் காலத்தில், இராசாதிராச வளநாடு என இது மறுபெயர் பெற்றது.

### கோயில் :

"நாங்கூர்நாட்டு வடகரைநாங்கூர்த் திருவெண்காட்டுத்தேவர்" என இறைவனின் பெயர் குறிக்கப்படுகின்றது. திருவெண்காட்டுப் பெருமான், திருவெண்காடு உடைய நாயனர், சுவேதாரண்யேசுவரர் எனவும் இறைவனின் பெயர்கள் கல்வெட்டுக்களில் குறிக்கப் பெற்றுள்ளன. இக்கோயிலுக்கு முதலாம் **இராசராசன்** திருப்பணிகள் செய்வித்தான். கோயிலின் முன்னுள்ள சந்நிதி **விக்கிரமசோழன்** திருமண்டபம் என வழங்கப்பெற்றது. விக்கிரம சோழன் இம்மண்டபத்தின் படிகளில் அமர்ந்து ஒரு திருமடத்திற்கு நிலதானம் வழங்கினுன் எனத் தெரிகின்றது. இச் சந்நிதி கி.பி. 1397-ஆம் ஆண்டுக்கு முன்பே அமைக்கப்பெற்றிருத்தல் வேண்டும். **பெரியபிள்ளையார்** என்னும் கணேசர் சந்நிதியில் இரண்டாம் இராசராசனின் கல்வெட்டு ஒன்று காணப்படுகின்றது. எனவே இது 12-ஆம் நூற்ருண்டின் இடைப்பகுதியில் கட்டப்பெற்றிருத்தல் வேண்டும். உட்கோபுரம் முதலாம் இராசராசனின் காலத்தில் கட்டப் பெற்றிருத்தல் கூடும். வெளியேயுள்ள கிழக்குக் கோபுரம் 13-ஆம் நூற்ருண்டில் விக்கிரம சோழனல் கட்டப்பெற்றது. மேற்குத் திசையிலுள்ள உட்கோபுரம் வெளிக்கோபுரம் இரண்டும் 13-ஆம் நூற்ருண்டிலேயே தோன்றியிருத்தல் வேண்டும். வீரபாண்டியரின் ஐந்தாம் ஆட்சியாண்டில், வைத்திய சக்கரவர்த்தி என்பவர் வீரபாண்டீசுவரமுடைய நாயனர் சந்நிதியும், வேயனதோளிநாச்சியார் சந்நிதியையும் எடுப்பித்தார்.

### திருவுருவங்கள் :

சோழர்களின் ஆட்சிக்காலத்தில் உலோகங்களால் ஆன பல தெய்வத் திருவுருவங்கள் இக்கோயிலுக்கு அளிக்கப்பட்டமையினைக் கல்வெட்டு உணர்த்துகின்றது. இராசராசனின் 28-ஆம் ஆட்சியாண்டில் அவனது அரசியர்களுள் ஒருவர், ஆடவல்லான் என்னும் நடராசப் பெருமானுக்குப் பல பொன் அணிகலன்களை வழங்கினர். முதலாம் இராசாதிராசனின் ஆட்சியில், அம்பலம் செய்யவாய் என்பவர், பிச்சைத்தேவர் (பிட்சாடனர்) திருவுருவை எடுப்பித்தார்.

### தேரழுந்தூர் :

இது மாயூரத்தினின்று 12 கி.மீ. தொலைவில் உள்ளது. மல்லியம்-குற்றுலம் நிலையங்களுக்கு இடையில் உள்ள ஓர் இருப்புப்பாதை நிலையம். மாயூரத்தினின்று இதற்கு அடிக்கடி உந்தூர்தி வசதிகள் உள்ளன. இது ஒரு சிறந்த வைணவத் தலம். சங்க இலக்கியங்களில் அழுந்தூர் எனக் குறிப்பிடப்பெறுவது இதுவே போலும். இங்கேயே இராமாயணம் பாடிய கம்பர் தோன்றி வாழ்ந்ததாகப் பெரியோர்கள் கூறுகின்றனர்.

> "**கம்பன் பிறந்தவூர்** காவிரி தங்குமூர்
> கும்பமுனி சாபம் குலைந்தவூர்-செம்பதுமத்
> தாதகத்து நான்முகனும் தாதையும்
> தேடிக்காணு
> ஓதகத்தார் வாழும் அழுந்தூர்."

எனவரும் தனிப்பாடலால், இச் செய்தியினை இனிதுணரலாம். கோயிலின் தெற்கில் இன்றும் **கம்பர்மேடு** என்ற ஓர் இடம் இருந்து வருகிறது. அதுதான், கம்பர் பிறந்த வீடு இருந்த இடம் என்று கூறுகின்றனர். அதனல் தொல்பொருள் ஆய்வுத்துறைக்குரிய சிறப்பிடமாக இவ்விடம் திகழ்கின்றது. பங்குனித் திங்களில் இங்கு

கம்பன்விழா கொண்டாடப்படுகின்றது. இதற்குச் சுற்றுப்பக்கங்களிலிருந்து பல்லாயிரக் கணக்கான மக்கள் வருகின்றனர். 1961-ஆம் ஆண்டின் குடிமக்கள் தொகைக் கணிப்பு அறிக்கையின்படி, இங்குச் சுமார் 2500 மக்கள் வாழ்கின்றனர்.

இங்கே ஊரின் நடுவில் அழகுற அமைந்துள்ள அருள்திரு **ஆமருவியப்பன்** கோயில், மிகவும் பழமை வாய்ந்தது. கோயிலுக்கு முன்னே அமைந்துள்ள திருக்குளம், கோயிலின் அழகை மேலும் மிகுதிப்படுத்துகின்றது. இங்குள்ள பெருமாளுக்கு ஆமருவியப்பன் என்பது பெயர் இரைத் **தேவாதிராசன்** எனவும் வழங்குவர். இவர் கருவறையில் கிழக்கு நோக்கி, 10 அடி உயரம் உள்ளவராகக் கம்பீரமாக விளங்குகின்றார். அருள்திரு ஆமருவியப்பனின் விழாப் படிமம், பூதேவி சீதேவி என்னும் தேவியர் இருவருடன் சிறப்புறத் திகழ்கின்றது. இராமர் வாசுதேவர் ஆஞ்சநேயர் ஆழ்வார்கள் ஆண்டாள் தேசிகர் விச்வக்சேனர் ஆகியவர்களின் படிமங்களும் கோயிலில் உள்ளன. கோயிலின் முதற் கோபுரத்தின் நுழைவாயிலைத் தாண்டி, இடப்புறமாகத் திரும்பினால் கம்பரின் சந்நிதி அமைந்திருக்கக் காணலாம். கம்பர், அவர்தம் துணைவியார் ஆகியோர்க்குரிய பழைய படிமங்களும் புதிய படிமங்களும் இங்கு அமைந்திருக்கின்றன. இக்கோயிலைச் சார்ந்துள்ள தர்சபுஷ்கரிணி கசேந்திரபுஷ்கரிணி முதலியன, மிகவும் புனிதம் வாய்ந்தனவாகப் போற்றப் படுகின்றன.

தேரழுந்தூரில் உள்ள செங்கமல வல்லித் தாயார் கிழக்கு நோக்கி அமர்ந்த திருக்கோலத்தில் வீற்றிருக்கின்றார். திருமங்கையாழ்வார். "திருவுக்கும்திருவாகிய செல்வா! தெய்வத்துக்கு அரசே செய்ய கண்ணா, உருவச் செஞ்சுடர் ஆழி வல்லானே! உலகுண்ட ஒருவா திருமார்பா" என்று புகழ்ந்து பாடித் துதித்துள்ளார். இங்ஙனமே செங்கமலவல்லித் தாயாரின் திருப் பெயரை முதற்கண் பாசுரத்தில் அமைத்து, "செங்கமலத் திருமகளும் புவியும் செம்பொன் திருவடியினை வருட முனிவரேத்த வங்கமலி தடங்கடலுள் அனந்தன் என்னும் வரியரவின் அணைத்துயின்ற மாயோன் காண்மின்! எங்கு மலி நிறைபுகழ் நால்வேதம், ஐந்து வேள்விகளும் இயன்றதன்மை அங்கமலத் தயனனையார் பயிலும் செல்வத்து அணியழுந்தூர் நின்றுகந்த



அருள்திரு ஆமருவியப்பப் பெருமாள் கோயில், தேரழுந்தூர்

அமரர் கோவே" என்று அருளிச் செய்திருக்கின்றார்.

இக்கோயிலில் பல விழாக்கள் கொண்டாடப் படுகின்றன. அவைகளுள் வைகாசி மாதத்தில் பத்துநாட்கள் நிகழும் பெருவிழா மிகவும் சிறப்பு வாய்ந்தது. இக்கோயிலில் வெள்ளியினால் செய்யப்பட்ட கருடன் ஆஞ்சநேயர் ஆதிசேடன் சூரியப்பிரபை இந்திரவிமானம் குதிரை யானை முதலிய ஊர்திகள் உள்ளன. தாயாருக்குச் சூரியப்பிரபை யாளி அன்னம் யானை சிங்கம் முதலியன உள்ளன. இக்கோயிலைச் சார்ந்த துணைக்கோயில்களாகக் கோவிந்தராசர் கோயில், அரங்கநாதர்கோயில், ஆழ்வார்கோயில் என்பவை உள்ளன. செங்கமலவல்லித் தாயாரின் கருவறைக்கு மேலிருக்கும் விமானத்தில் உள்ள திருமகளின் படிவம், எட்டுத் திருக்கை

களுடனும், நான்கு முகங்களுடனும் அமைந்து மிக அழகிய வேலைப்பாடு உடையதாகத் திகழ் கின்றது. இவ்வாறே அதன் வடக்குப் பக்கத்தில் உள்ள மற்ருெரு படிவமும் மிக்க அழகும் அருமையும் வாய்ந்து விளங்குகின்றது.

தேரழுந்தூர், கண்ணபிரானுக்குச் சிறப் பாக உரிய ஐந்து திருத்தலங்களுள் ஒன்று. கருவறையில், பெருமானின் அருகே கருடாழ் வாரின் படிமம் உள்ளது. அதனுல் பிற இடங் களில் வழக்கமாகச் சந்நிதியின் முன்னே காணப் படுவதுபோல இங்குக் கருடாழ்வார் அமைந் திருக்கவில்லை. தனது தவவன்மையால் வானத் தில் தேரிற் சென்றுலவும் திறம்பெற்ற உபரி சரவசு என்னும் அரசன், ஒரு சமயம் தேவர் களுக்கும் முனிவர்களுக்கும் ஒரு வழக்கீட்டில், நடுநிலை பிறழ்ந்து தீர்ப்புக் கூறியதனுல், முனிவர் களால் சபிக்கப்பெற்று வானத்தினின்று தரை யில் விழ நேர்ந்தது. அப்போது அவனது தேர் அழுந்தப் பெற்ற இடமாதல் பற்றி, இதற்குத் தேர் அழுந்தூர் என்று பெயர் ஏற்பட்டது. அஃது அழுந்தூர், அழுந்தை எனவும் மருவி வழங்கி வருகின்றது.

ஒருசமயம் திருவாய்ப்பாடியில் கண்ணபிரான் அவதரித்து ஆநிரைகளை மேய்த்துக் கொண் டிருந்தபோது, பிரமதேவன் விளையாட்டாக, அவருக்குத் தெரியாமல் அவ் ஆநிரைகளை ஓட்டிக்கொண்டு வந்து இங்கு ஒளித்துவைத் தான். கண்ணபிரான் இதனைப் பொருட்படுத் தாமல் முன்னிருந்த ஆநிரைகளைப் போலவே புதிய ஆநிரைகளைப் படைத்து மேய்த்து வரலா யினன். இதனுல் ஏமாற்றமுற்ற பிரமதேவன் தன் பிழையை உணர்ந்து வருந்திக் கண்ண பிரானை மன்னிப்புக்கேட்டு வணங்கி நின்ருன் அவருடைய வேண்டுகோளின்படி கண்ண பிரான் இங்கு ஆமருவி அப்பன் என்னும் பெய ரில் எழுந்தருளி விளங்கி வருகின்ருன். விழாப் படிமத்திலிள்ள பசுவும் கன்றும் இக்கதைக்குச் சான்ருக அமைந்து விளங்குகின்றன.



அருள்திரு. செங்கமல வல்லித் தாயார், தேரழுந்தூர்

இக்கோயிலுக்கு நன்செய் நிலங்கள் 219·62 ஏக்கரும், புன்செய் நிலங்கள் 54·78 ஏக்கரும், மற்றும் சில மனைகளும் வீடுகளும் உள்ளன அவற்றின்மூலம் ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 48,600 ரூபா வருவாய் கிடைக்கின்றது. மேலும் இக்கோயிலில் 39,000 ரூபா பெறுமான முள்ள பழைய பொன் வெள்ளி அணிகலன்கள் இருக்கின்றன. இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையால் நியமிக்கப்பெறும் 3 அறங்காவலர் களும், ஒரு செயல் அலுவலரும் இக்கோயிலைச் செவ்வனே நடத்தி வருகின்றனர். (ஆசிரியர்)



சேலம், கோட்டைப் பெரிய மாரியம்மன் கோயிலில் நிகழ்ந்த கண்ணகி
விழாவுக்கு மேலவைத் துணைத்தலைவர் 'சிலம்புச்செல்வர்'
திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் வருகை தருதல்.



பழநித் திருக்குடமுழுக்கு விழாவில், அறநிலைய ஆணையர்
திரு. கே. எஸ். நரசிம்மன், B.A., B.L. I.A.S. அவர்களால், சிறப்பு மலர்
வெளியிடப் பெறுதல்.

# "அற்புதப் பழ ஆவணம்"

திரு. டாக்டர் வ. ஆ. தேவசேனுபதி அவர்கள், M. A., Ph. D.,
தலைவர், தத்துவத்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்

"கற்ப கத்தினைக் கனகமால் வரையைக்
காம கோபனைக் கண்ணுத லானைச்
சொற்ப தப்பொருள் இருள்அறுத் தருளும்
தூய சோதியை வெண்ணெய் நல்லூரில்
அற்புதப் பழ ஆவணம் காட்டி
அடியனு என்னை ஆளது கொண்ட
நற் பதத்தை நள்ளாறனை அமுதை
நாயி னேன்மறந்து என்நினைக் கேனே!

— சுந்தரர்

சுந்தரர் திருமணம் நடைபெறுகின்ற சமயத்தில், இறைவன் முதிய அந்தணராகத்தோன்றித் தமக்கும் மணமகனுக்கும் இடையே பெரு வழக்கு ஒன்றிருப்பதாகவும், அதனைத் தீர்த்த பின்னரே திருமணம் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்றும் வாதாடுகிருர். சுந்தரர் தமக்கு அடிமையென்று இறைவன் கூறியதைக் கேட்டவர்கள், அந்தணர் அந்தணருக்கு அடிமையாதல் புதுமையன்ரே என வியப்படைகின்றனர். சுந்தரர் இறைவனைப் பார்த்து 'நீ பித்தனு?' என்று கேட்கிருர். இறைவன் தம் பேச்சை மெய்ப்பிக்கும் வகையில் தம்மிடம் சுந்தரரின் பாட்டனுர் எழுதிக் கொடுத்த ஆவணம் இருக்கிறதென்று அதனைக் காட்டுகின்ருர். சுந்தரர் அதனைப் பிடுங்கிக் கிழித்து எறிகின்ருர். உடனே இறைவன் அடுத்த ஊருக்கு ஓடிச் சென்று அங்குள்ள மறையோரிடம் தம் வழக்கைக் கூறித் தீர்ப்பு வேண்டுகின்ருர். கிழிபட்டது படி ஓலை என்றும், மற்ருெரு மூல ஓலை தம்முடன் இருப்பதாகவும் கூறி, மூல ஓலையையும் இறைவன் காட்டுகிருர். சுந்தரர் ஓலையை வலிய வாங்கிக் கிழித்ததே, தமக்கு உரிமை உண்டென்பதை மறைமுகமாக ஒப்புக்கொண்டு, அவ்வுரிமையை நிலைநாட்டும் சான்றிதழை அழிக்க முயன்றதால் அறியலாகும் என்று இறைவன் கூறுகிருர். "என்கையில் ஆவணம் வலிய வாங்கி நின் றிவன் கிழித்துத் தானே நிரப்பினன் அடிமை என்ருன்", என்று பெரிய புராணம் கூறுகிறது.

மூல ஓலையில் காணப்பெற்ற சொற்கள் வருமாறு:

"அருமறை நாவல் ஆதி
சைவன் ஆரூரன்செய்கை
பெருமறை வெண்ணெய் நல்லூர்ப்
பித்தனுக்கியானும் என்பால்
வருமுறை மரபு ளோரும்
வழித்தொண்டு செய்தற் கோலை
இருமையால் எழுதி நேர்ந்தேன்
இதற்கிவை என் எழுத்து."

உள்ளமும் உரையும் ஒத்து எழுதித்தந்தது என்பதை 'இருமையால் எழுதிநேர்ந்தேன்' என்னும் சொற்கள் காட்டுகின்றன. இறைவன் தம்வழக்கை முதலில் தொடங்கியபோது கூறியனவாகப் பெரியபுராணத்தில் காணப் பெறும் சொற்கள் வருமாறு:

"ஆவதிது கேண்மின்மறையோர்! என் அடியான் இந்
நாவல்நகர் ஊரன்; இதுநான் மொழிவ தென்ருன்;
தேவரையும் மாலயன் முதல் திருவின் மிக்கோர்
யாவரையும் வேறடிமை யாவுடைய எம்மான்"

இங்கே சேக்கிழார் தரும் குறிப்பு இறைவன் இவ்வுலக மக்களை மட்டுமன்றித் திருவின்மிக்க வானவர்களையும் தமக்கு அடிமையாக உடையவன் என்பதாம். இறைவன் ஆண்டான். உயிர்கள் அனைத்தும் அவன் அடிமைகள். பொருள்கள் எல்லாம் அவன் உடைமை என்பது சைவ சித்தாந்தத்தின் அடிப்படைக் கருத்து. "அவை உடைமை ஆளாம் நாம் அங்கு" என்பது, சிவஞானபோதம் இரண்டாவது சூத்திரத்தின் நான்காம் அதிகாரத்தில் கூறப் பெறுகிறது. கட்டு நிலைமையில் மட்டுமன்றி வீடுபேற்றின் கண்ணும் உயிர்கள் இறைவனுக்கு அடிமைகள் என்பதையும் சிவஞானபோதம் பின்வருமாறு கூறுகிறது.

JL Q2m21, N59TK N73 16.1

"பலவாறே தொழும்பாகும் அங்கு"

என்பது சிவஞானபோத நூலின்கண் வரும் முதல் சூத்திரம்; மூன்ருவது அதிகரணம்.

சுந்தரர் தமக்குக் கயிலையில் தொண்டு செய்திருந்ததை நினைவூட்டுவதுடன் எல்லா உயிர்களும் தமக்கு அடிமைகள் என்பதையும் இறைவன் தம் வழக்கில் மறைமுகமாகக் காட்டுகிருர். சுந்தரர் இறைவனை,

"எம்மான் எந்தை மூத்தப்பன் ஏழேழ்படி
கால் எமையாண்ட பெம்மான்"

என்று கூறுகிருர். நாமும், நம் மூத்தோர், நம் வழித்தோன்றல்களும் அனைவருமே, தலைமுறை தலைமுறையாக இறைவனுடைய அடிமைகள். நாமும் இப்பிறவியில் மட்டுமன்றி 'என்று நீ அன்று நான், உன் அடிமை' என்றவாறு எக்காலத்தும் இறைவனுடைய அடிமைகள். இக் கருத்தும் 'ஆவணம்' என்னும் சொல்லும் திருமந்திரத்திலும் காணப் பெறுகின்றன.

"என் தாயோ டென்னப்பன் ஏழேழ்
பிறவியும்
அன்றே சிவனுக்கு எழுதிய ஆவணம்
ஒன்ரு யுலகம் படைத்தான் எழுதினுன்
நின்ருன் முகில் வண்ணன் நேர்
எழுத்தாயே"

படிமுறைகளால் தாசமார்க்கம், சத்புத்திர மார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என அமைந்தவை, வேற்றுமை மிகுதியாயுள்ள ஆண்டான் அடிமை நிலையில் தொடங்கித் தந்தை மகன் எனவும், நண்பர்கள் எனவும், ஆசான் மாணக்கன் அல்லது தலைவன் தலைவி எனவும் வேற்றுமை குறைந்து கொண்டு போய், வேறன்மை நிலைக்குச் செலுத்துவதால், இந் நான்கிற்கும் அப்பாற்பட்ட நிலையே முடிவானது. அந்நிலையில் இறைவன் எனவும், உயிர் எனவும் இரு பொருள்களில்லை என்றும், உள்ள பொருள் ஒன்றே, எனவே முடிந்த நிலை அவ்வொன்ருக இருப்பதே எனக் கூறப்படுகிறது. ஆனல் ஞானமார்க்கத்தைக் கடைப் பிடித்த மாணிக்கவாசகரும்,

"பவன் எம்பிரான் பனிமாமதிக் கண்ணி
விண்ணேர் பெருமான்,
சிவன் எம்பிரான் என்னை ஆண்டு
கொண்டான்
என்சிறுமை கண்டும்;
அவன் எம்பிரான் என்ன, நான் அடியேன்
என்ன, இப்பரிசே
புவன் எம்பிரான் தெரியும் பரிசு
ஆவது இயம்புகவே"

என்று கூறுகிருர் அல்லரா?

எனவே சுந்தரர் திருமணத்தில் இறைவனின் இடையீட்டால நமக்குத் தெளிவாகும் உண்மை, 'இறைவனுக்கும் உயிர்களுக்கும் உள்ள உறவு, என்றும் நிலைபெற்ற தொன்று, இறைவன் என்றும் ஆண்டானே, நாம் என்றும் அவன் அடிமைகளே' என்பதாகும். இவ்வுண்மையை நிரப்பவே இறைவன் அற்புதப்பழ ஆவணம் காட்டினர்.

148714

## ஒரு முக்கிய அறிவிப்பு

தமிழ்நாடு அரசு, தனது அரசாணை (ஜி. ஒ. எம். எஸ். நம்பர் 1574; நாள் (12—6—1972) மூலம், இந்துசமய அறக்கட்டளைகளின் பராதீனம் செய்யப்பட்ட சொத்துக்களை மீட்பதற்கு, சொத்தின் மதிப்பு எவ்வளவு இருந்தாலும், நீதிமன்றக் கட்டணம் ரூ. 15/- மட்டும் செலுத்தினல் போதும் என்று, ஆணை பிறப்பித்துள்ளது.

இது குறித்து ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை, ஏற்கெனவே எல்லா இந்து சமய அறநிலையங்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. ஆயினும் இதுபற்றிய இவ்விவரத்தினை இந்து சமய அறநிலையங்களின் செயல் அலுவலர்களிலும், அரசு வழக்கறிஞர்களிலும் பலர் தெரிந்து கொண்டதாகத் தெரியவில்லை.

இந்து சமய அறநிலையங்களின் சொத்துக்கள் பற்றிய வழக்குகளில், நீதிமன்றக் கட்டணம் அதிகம் செலுத்தவேண்டிருக்குமே என்ற எண்ணத்தினல், ஒருசில அலுவலர்கள் கோயிற் சொத்துக்களின் மதிப்பை நீதிமன்றத்தில் குறைத்துக் காட்டி விடுகின்றனர். இதனல் சில சமயங்களில் கோயில்களின் நலனுக்குத் தீங்கு விளையக் கூடிய நிலைமைகள் நேரிடலாம்.

ஆதலின் அறநிலையங்களின் உடைமைகளைப் பற்றியவழக்குகளில், உடைமைகளின் உண்மையான மதிப்பையே குறிப்பிடவும், அதற்காக நீதிமன்றக் கட்டணம் ரூ. 15/- மாத்திரமே செலுத்தவும், எல்லா இந்து சமய அறநிலையங்களின் அலுவலர்களும், இதன் மூலம் அறிவுறுத்தப்படுகின்றனர்.

—ஆசிரியர்



திருச்சிராப்பள்ளி அருள்திரு. தாயுமானவர் திருக்கோயிலில், திருமண மண்டபக் கால்கோள் விழாவிற் கலந்து கொண்டு சிறப்பித்த பெருமக்கள் (12—8—73)



திருச்சிராப்பள்ளி அருள்திரு. தாயுமானவர் திருக்கோயிலில், ஏழைக் குழந்தைகளுக்கு இலவசப் பால் வழங்கும் திட்டத்தை, அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பர் அவர்கள் தொடங்கி [illegible] (12—8—73)



கோவைமாவட்டம், அவிநாசி, அருள்திரு அவிநாசி லிங்கேசுவரர் திருக்கோயில்
இராசகோபுரத் திருப்பணிக்கு அறநிலைய அமைச்சர் மாண்புமிகு
திரு. மு. கண்ணப்பர் அவர்கள் அடிக்கல் நாட்டு விழா நிகழ்த்துதல் (14—9—73)



Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept., Madras-34.
Printed at Super Power Press, Madras-1. Editor. N. R. Murugavell, M.A., M.O.L.